வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12.


194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.

புத்தகம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 1993 கார்த்திகை திங்கள் 10-ம் நாள் (25—11—1962) ஞாயிற்றுக்கிழமை ஜ. ஆகிர் 26 | இதழ் 26




# இந்தியாவில் சீன ஒற்றர்கள்

## தூரத்துப் பார்வையோ?




அண்டை நாடான இந்தியாவில் அக்கிரமமான ஆக்கிரமிப்பை ஆரம்பித்த சினர்களைப் பற்றியோ, இந்தியாவின் இன்னலைப் பற்றியோ எண்ணிப் பார்க்க முடியாத கொம்யூனிச, சமசமாஜத் தலைவர்கள் எத்தனையோ ஆயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள கியூபாவில் கை வைக்காதே! என்று இங்கிருந்து சப்தித்தனர். அதோடு மட்டுமல்லாமல் உண்மையை மறைத்து இந்தியாவையே குற்றஞ் சாட்டவும் முனைந்தனர்.

## இலங்கை வழியாக செய்தி பறக்கிறது

இந்தியாவில் கொம்யூனிஸ்டுகள் சீனவின் ஒற்றர்களாகத் திறமையுடன் செயலாற்றிவருகிறார்களென்று அறியப்படுகிறது. இலங்கைக் கொம்யூனிஸ்டுகளும் அதே 'சேவையை' இங்கும் செய்கின்றனராம். சீனருக்கு சாதகமாக இயங்குவதற்கு ஒரு ஐந்தாம்படை இலங்கையில் கொம்யூனிஸ்ட்டு பிற்போக்காளர்களால் இயக்கப்படுகிறதாம். இந்த ஐந்தாம்படைக்கும் பீக்கிங்கிற்கும் நெருங்கிய உறவு உண்டாம். பீக்கிங் வானொலியில் தமிழ் ஒலிபரப்பாளராகச் செல்லும் இலங்கைத் தமிழரும் இந்த ஐந்தாம் படையின் தூண்டுகோலினாலேயே நியமனம் பெற்றார் என்று தெரிகிறது.

இந்தியக் கொம்யூனிஸ்ட்டுகள் பலர் இலங்கைக்கு வந்து இங்குள்ள சீனத் தூதராலயத்தின் மூலமாக முக்கிய செய்திகள் அனுப்புகின்றனராம்.

பாதுகாப்புச் செய்திகளையும், இராணுவ இரகசியங்களையும் சீனவுக்குப் பல்வேறு இரகசிய முறைகளில் உடனுக்குடன் அனுப்பி வைக்கும் ஒற்றர் சேவையொன்று இந்தியாவில் இயங்குவதாக கூறப்படுகிறது. இந்த ஒற்றர்கள் இந்தியக் கொம்யூனிஸ்டுகள் தான் என்பது இப்பொழுது இந்திய அரசாங்கத்துக்கு அம்பலமாகியுள்ளதென்று புது டில்லி அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

இதன் பிறகே அரசாங்கம் மின்வேகத்தில் நடவடிக்கையெடுத்து இந்தியக் கொம்யூனிஸ்ட் கட்சிப் பொதுக் காரியதரிசியும் முன்னாள் கேரள முதன் மந்திரியுமான திரு நம்பூதிரிபாத் உட்பட 600க்கு மேற்பட்ட கொம்யூனிஸ்டுப் பிரமுகர்களைத் திடீரெனக் கைது செய்தது.

### தீர்மானம் கண்துடைப்பு

இந்தியக் கொம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டி சீன ஆக்கிரமிப்புத் தீர்மானம் நிறைவேற்றியது அரசாங்கத்தையும் மக்களையும் ஏமாற்றும் கண் துடைப்பு என்றும், எந்தக் கொம்யூனிஸ்டும் அந்தத் தீர்மானத்திற்கிணங்க நடந்து கொள்ளவில்லையென்றும், இந்திய அரசாங்கத்துக்கு நம்பகமா

(9-ம் பக்கம் பார்க்க)

# அரிசி வெட்டு அமுலுக்கு வரும்!

## அரசாங்கம் எடுத்துள்ள அவசர முடிவு

இலங்கையில் ஏற்பட்டிருக்கும் நிதி நெருக்கடியைச் சமாளிக்க அரிசி வெட்டை அமுலாக்குவதைத் தவிர வேறு வழியெதுவும் இல்லை என்று அரசாங்கம் முடிவு செய்து விட்டதாக அறியப் படுகிறது. பங்கீட்டுப் புத்தகங்களைத் திரும்பப் பெறுவது போன்ற பல வழிகளை அனுசரிப்பதன் மூலம் ஒரு நல்ல முடிவு காணலாம் என்று எடுத்த முயற்சிகள் யாவும் தோல்வியில் முடிவடைந்துவிட்டன.

முன்னாள் நிதி மந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவினால் கொண்டுவரப்பட்டு, நாட்டு மக்களின் ஏகோபித்த எதிர்ப்பைச் சம்பாதித்த அரிசி வெட்டு மீண்டும் அமுலுக்கு வருவது உறுதியாக்கப்பட்டு விட்டது. அரிசி வெட்டை நீக்கிவிட்டு வேறு ஏதாவது வழிகளில் நிதிநெருக்கடியைச் சமாளித்து விடலாமென அரசாங்கம் எடுத்துக் கொண்ட சகல முயற்சிகளும் தோல்வியில் முடிந்துவிட்டன.

வேறு எந்த வகையிலும் நாட்டு நிதிநிலைமையைச் சீர்படுத்த முடியாது என்பது புலப்பட்டதும் ஆளும் கட்சி உறுப்பினர்கள் இம்முடிவுக்கு வரவேண்டியிருந்தது.

பங்கீட்டுப் புத்தகங்களை மக்களிடமிருந்து திரும்பிப் பெறுவதனால் அரிசிப்பற்றாக் குறையை நிவர்த்தி செய்யலாம் என்று அரசாங்கம் தீவிர முயற்சி செய்துவந்தது. ஆனால் இந்த வகையிலும் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை.

ஐக்கிய அரபுக் குடியரசு இலங்கைக்கு அரிசிகொடுக்க முன் வந்திருப்பதனால், அந்த அரிசியை வைத்துக்கொண்டு நிலைமையை ஓரளவு சமாளித்து விடலாமென்று ஆலோசனைகள் தெரிவிக்கப்பட்டன. ஆனால் அந்த அரிசி இலங்கை மக்களின் பாவனைக்கு உகந்ததாக இருக்காதென்பதனால் மக்கள் அதை விரும்ப மாட்டார்களென்பது உறுதி. வேறு நாடுகளிலிருந்து அரிசியைப் பெறுவதனாலும், அதற்கான வெளிநாட்டு நாணயம் பற்றாக் குறையாகவிருக்கிறது.

## உண்மை தானா?

யாழ்ப்பாண மாநகரசபையைக் கலைத்து விடுவதற்கான முறையில் அறிக்கை தயாரிக்கவேண்டும் என்று ஒரு அதிகாரியை, சம்பந்தப்பட்ட மந்திரி கட்டளையிட்டாராம். 'நியாயப்படி நடப்பேன்' என்று அவ்வதிகாரி பதிலளிக்கவே வேறு ஒரு அதிகாரிக்கு கட்டளை கொடுக்கப்பட்டதாம். அந்த அதிகாரியும் விசாரணை அதிகாரி ஒருவருடன் யாழ்ப்பாணம் சென்றுள்ளாராம். மாநகரசபையைக் கலைத்து விடுவதற்கு ஒரு பாராளுமன்றப்பிரதிநிதி துடியாய்த் துடிக்கிறாராம். அவருக்கு சிலவகைகளில் கடமைப்பட்ட மந்திரி பிரதியுபகாரமாக யாழ் நகர சபையைக் கலைத்து உதவ முன்வந்துள்ளாராம்.

குறிப்பு:- நகரசுத்தித் தொழிலாளர் மொத்தம் 150 பேர்; சராசரியாக தினசரி வேலை செய்வோர் 120 பேர்; இப்பொழுது வேலை செய்வோர் தொகை 104 பேர்.

## பேர்ஸ் டயறிகள் [PURSE DIARIES] 1963

| | |
|---|---|
| இங்கிலிஷ் பேர்ஸ் டயறி (No. 5) (இரண்டு பக்கத்திற்கு ஒரு கிழமை) | 2-10 |
| இங்கிலிஷ் பேர்ஸ் டயறி (No. 4) (ஒரு பக்கத்திற்கு இரண்டு நாள்) | 2-60 |
| தமிழ் ஆங்கில பேர்ஸ் டயறி (No. 2) (ஒரு பக்கத்திற்கு இரண்டு நாள்) | 2-60 |
| தமிழ் ஆங்கில பேர்ஸ் டயறி (No. 1) (ஒரு பக்கத்திற்கு ஒரு நாள்) | 3-10 |
| பின்னல் பேர்ஸ் டயறி (Business) (ஒரு பக்கத்திற்கு ஒரு நாள்) | 3-85 |
| டெஸ்க் பிளாஸ்டிக் டயறி (பெரியது) (மூன்று பக்கத்திற்கு ஒரு கிழமை) | 2-95 |
| டேபிள் பிளாஸ்டிக் டயறி (பெரியது) (ஒரு பக்கத்திற்கு ஒரு நாள்) | 4-35 |
| புள்ஸ்காப் டயறி (கலிகோ பைண்ட்) (ஒரு பக்கத்திற்கு ஒரு நாள். வர்த்தகர்கள் கணக்குப் புத்தகமாகப் பாவிக்கக் கூடியது) | 13-50 |
| வலற் (Wallet) டயறி (2-50 பெறுமதியான வலற் பேர்ஸ் கொண்டது) | 4-85 |
| டேபிள் கலண்டர் (Table Calender) (பிளாஸ்டிக் ஸ்டான்டுடைய மேசைக் கலண்டர்) | 4-75 |

குறிப்பு : விரும்பும் டயறியின் விலையையும், டயறி ஒன்றுக்கு 35சதம் தபாற் செலவும் அனுப்பினால் பார்சலில் அனுப்பப்படும்.

மெய்கண்டான் அச்சியந்திரசாலை,
161, செட்டியார் தெரு, கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுராதபுரம் தமிழர் கோட்டையாக மாறுகிறதாம்

## சிங்களத் தினசரியின் ஆத்திரம்

அனுராதபுரம் சில ஆண்டுகளுக்கு முன்பு தமிழர்களின் கேந்திர ஸ்தானமாகவும், தமிழர்களின் கோட்டையாகவும் விளங்கியது. பின்னர் வலிசிங்க ஹரிச்சந்திரா போன்ற சிங்கள வீரர்கள் பெருந் தியாகங்களைச் செய்து அதனை மீட்டுக்கொடுத்தார்கள். அனுராதபுரத்தை மீண்டும் தமிழர்கள் கைப்பற்றுவதற்கான சூட்சமத் திட்டமொன்று ஆரம்பிக்கப் பட்டிருப்பதாக அறியப்படுகிறது என்று "தவஸ" என்னும் சிங்களத் தினசரி செப்டம்பர் 14-ந்திகதி இதழில் ஒரு செய்தியைப் பிரசுரித்துள்ளது.

இப்பத்திரிகை மேலும் கூறுவதாவது:—

"அனுராதபுரம் புதிய நகரில் தமிழர்களைக் குடியேற்றுதல், தற்போது அனுராதபுரத்தில் அரசாங்கக் காரியாலயங்களில் கடமையாற்றும் தமிழர்களை அங்கேயே நிரந்தரமாக வசிக்கச் செய்தல், அவர்களின் அரிசிப் பங்கீடுக் கூப்பன்களை அனுராதபுரத்திற்கு மாற்றச் செய்தல், அனுராதபுரத்திலுள்ள அரசாங்க அலுவலகங்களுக்கு அதிகமான தமிழ் ஊழியர்களை நியமித்தல் முதலியவை இந்த இரகசியத்திட்டத்தின் அம்சங்களாகும்.

### 100 க்கு 80

சுகாதார இலாகா, அரசாங்க மராமத்து இலாகா, புகையிரத இலாகா, அனுராதபுர பிராந்தியப் பகுதி, தபால் இலாகா உட்பட அனுராதபுரம் கச்சேரியிலுள்ள ஏதர பிரதான இலாகா ஆகியவை இப்பொழுதே தமிழ் ஊழியர்களால் நிரம்பியுள்ளன. சில இலாகாக்களில் 100க்கு 80 பேர் ஊழியர்கள் தமிழர்களாவர்.

### காணியும் கேட்டுள்ளனர்

இந்தத் தமிழ் ஊழியர்களில் அநேகர் அரசாங்கக் காணிகள் கோரி மனுச் செய்திருப்பதாகவும், அரிசிக் கூப்பன்களை அனுராதபுரத்துக்கு மாற்றுமாறு கேட்டுக் கொண்டிருப்பதாகவும் அறியப்படுகிறது.

அனுராதபுரத்தில் தற்போது வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள தமிழர்கள் தங்களுக்குத் தேவையான ஊழியர்களை வட பகுதியிலிருந்து கொண்டுவரவே முயற்சி செய்கின்றனர். இந்த ஊழியர்களைச் சிறிது காலம் அந்தந்த வியாபாரத்தில் ஈடுபடுத்தி பின்னர் அவர்களுக்குச் சிறு சிறு வியாபார ஸ்தலங்களை ஆரம்பிக்க ஊக்கமளித்து அனுராதபுரத்தில் அரிசிக் கூப்பன்களையும் பெற்றுக்கொடுத்து நிரந்தமாக அவர்களை அங்கேயே வசிக்கச் செய்வது மற்றொரு உபாயமாகும்.

### தமிழ் வர்த்தகர்கள் வாக்குறுதி

நான்கு திசையிலிருந்தும் அனுராதபுரியை இணைத்துள்ள வீதிகளில் இரு மருங்கிலும் அரசாங்க நிலங்களில் தமிழர்களைக் குடியேற்றுவது இன்னுமொரு நடவடிக்கையாகும். அம்மாதிரி குடியேறும் தமிழர்களுக்கு எல்லாவித உதவிகளையும் செய்வதாக அனுராதபுரம் புதிய நகரில் வசிக்கும் தமிழ் வர்த்தகர்கள் வாக்களித்துள்ளனர்.

தமிழரசுக்கட்சிக்கு அனுதாபம் காட்டும், அக்கட்சியின் "இயங்கும் அனுதாபிகள்" அநேகர் அனுராதபுரத்தில் மராமத்துஇலாகா, தபால் இலாகா, சுகாதார இலாகா ஆகியவற்றினுள் இருக்கின்றனர். அவர்கள் ஸ்தாபனரீதியான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதாகவும் அறியப்படுகிறது.

அனுராதபுரத்தில் பொலீஸ் நிலையங்கள் தவிர இதர இலாகாக்களில் தமிழ் ஊழியர்கள் நிரம்பியுள்ளனர்.

அனுராதபுரத்துக்கு வரும் தமிழ் ஊழியர்கள் நீண்ட காலமாக வேறு இடங்களுக்கு மாற்றப் படாமல் அங்கேயே இருக்கின்றனர் என்றும் அறியப்படுகிறது.




ராஜ பீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும் எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்

ராஜ பீடி ஸ்பெஷல்

ஒன்றே தரான்

புகைத்து பலனடையுங்கள்

ராஜாபீடி கம்பனி

கொழும்பு-14.

டெலிபோன்: 2739

## வேலையற்றிருக்கும் வாலிபருக்கு கமத்தொழிற் பயிற்சி

"கொக்கிளாய் பொருளாதார அபிவிருத்திச் சங்கம்" என்னும் பெயர் கொண்ட கூட்டுறவுச் சங்கம் வேலையற்றிருக்கும் தமிழ் பேசும் வாலிபருக்கு கமத்தொழிற் பயிற்சி அளிப்பதற்கு ஒரு திட்டம் வகுத்திருக்கிறது. இப் பயிற்சி மூன்று வருடங்களுக்கு அளிக்கப்படும். பயிற்சி காலத்தில் சுமாரான ஊதியம் வழங்கப்படும். அத்துடன் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட முறையில் காணி எடுத்துக் கொடுப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்படும்.

பயிற்சிக் காலத்தில் சங்கம் ஒவ்வொருவருக்கும் இலவச உணவுடன் அளிக்கவிருக்கும் ஊதியத்தின் விபரங்கள் வருமாறு:

| | |
|---|---|
| முதல் ஆறு மாதத்திற்கு | — நாளொன்றிற்கு ரூ. 1-50 |
| அடுத்த ஆறு மாதத்திற்கு | — நாளொன்றிற்கு ரூ. 1-75 |
| 2ம் வருடத்திற்கு | — நாளொன்றிற்கு ரூ. 2-00 |
| 3ம் வருடத்திற்கு | — நாளொன்றிற்கு ரூ. 3-00 |
| பயிற்சிக்குப் பின் | — நாளொன்றிற்கு ரூ. 3-50 |

இவற்றுடன், சங்கத்தின் இலாபத்திற் பங்கும்.

தேவைக்கேற்ப, இரவோ பகலோ நாளொன்றிற்கு ஒருவர் 8 மணித்தியால வேலை செய்ய வேண்டும். பயிற்சிக்குத் தெரிவு செய்யப்படுவோர் சங்கத்துடன் ரூ. 50 பிணைக் கட்டி ஒப்பந்தம் செய்தல் வேண்டுய்.

பயிற்சி பெற விரும்புவோர் அதற்குரிய படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பத்தாள்கள் சங்கத்தின் அலுவலகத்தில் (15, பெப்பின்ஒழுங்கை, கொழும்பு-4) 25 சதம் கொடுத்துப் பெறலாம். தபாலில் பெற விரும்புவோர், தமது முகவரியடங்கிய முத்திரையுள்ள தபால் உறையுடனும், 25 சத முத்திரையுடனும் மேற்பார்வையாளர், தொழிற்பயிற்சிநிலையம், தென்னமரவாடி.(ஊடாக) திருகோணமலை என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கலாம்.

# உரிமைக்குப் போராடும் நாம் மற்றவர் உரிமை மறுக்கலாகாது

## சிறுபான்மைத் தமிழர் பிரச்சினை விரைவில் தீர்க்கப்பட வேண்டும்

ஆளும் கட்சியினரிடம் உரிமை கேட்கும் நாம், எமது மத்தியில் உரிமைகள் மறுக்கப்பட்டு வாழும் ஒரு தொகையினர்க்கு உரிமைகள் வழங்குவதில் தீவிரம் காட்டாதவரை, எமது போராட்டத்தில் நியாயமிருக்க முடியாதென்கிறார் இக்கட்டுரையாளர்.

மன்னார் மகாநாட்டுத் தீர்மானத்தின் படி எதிர் வரும் ஏப்பிரல் மாதம் ஈழத் தமிழ் இனத்தின் போர்ராட்ட காலம். நடைபெற இருக்கும் விடுதலைப் போரில் வட, கிழக்கு வாழ் தமிழ் பேசும் இனம் மட்டுமல்ல மலையகம் வாழ் சகோதரர்களும் தோளோடு தோள் சேர்ந்து அகில ஈழ தமிழ் பேசும் இனத்தினதும் விடுதலைப்போராக மிளிரப் போகின்றது.

எமது மொழிக்கு உரிமை வேண்டும். சம அந்தஸ்து வேண்டும்.

எமது இனம் சுதந்திர இனமாக விளங்க வேண்டும்.

எமது தாயகம், பிறப்பிடம் என்றும் எங்கள் உறைவிடமாக இருக்க வேண்டும்.

எமது மலையகச் சகோதரர்களின் பிறப்புரிமை, குடியுரிமை உறுதிப் படுத்தப் பட்டு நிரந்தரப்படுத்தப்பட வேண்டும்.

இந்த கோரிக்கைகளை, உரிமைகளைப் பெறுவதற்காக நடைபெற விருக்கும் விடுதலைப் போரில் ஒரு குறிப்பிட்ட தொகை மக்கள் ஒதுங்கியிருப்பதினால் போராட்டம் பலமிழந்துவிடும் என்பது நாம் கூறித் தான் தெரிய வேண்டும் என்பதில்லை.

### தாழ்வு நிலை மாறவேண்டும்

இன்று தமிழ் பேசும் இனத்தில் ஒரு குறிப்பிட்ட தொகையினர் தாழ்த்தப் [illegible] மூர்கள் என்று முத்திரை [illegible] அவர்கள் [illegible] கப்பட்டு அவர்களின் ஜீவ உரிமைகள் பெரும்பான்மைத் தமிழர்களால் மறுக்கப்பட்டு அடக்கி வைக்கப் பட்டிருக்கின்றன.

சிறுபான்மைத் தமிழர்களின் உரிமைகள் கொடுத்து அவர்களுக்கும் பெரும்பான்மைத் தமிழர்களுக்குமிடையில் நிலவும் தாழ்வுகள் மட்டப் படுத்தப் படாத வரை

—'பரராஸ்'—

யில் உரிமைப் போரைப் பற்றி சிந்திப்பதே வெட்கப் படக் கூடிய கேலிக் கூத்தாகவே இருக்கும். ஆளும் கட்சியினரிடம் தமிழ் பேசும் மக்களின் பறிக்கப்பட்ட உரிமைகளைக் கொடுங்கள் என்று கேட்பதில் எந்த அர்த்தமும் இருக்க முடியாது.

தமிழ் பேசும் இனத்தின் உரிமைகளைப் பிடுங்கிக் கொண்ட ஆளும் இனத்துக்கும் சிறுபான்மைத் தமிழர்களின் அடிப்படை உரிமைகளையே கபளீகரம் செய்யும் பெரும்பான்மைத் தமிழர்களுக்கும் எந்தவிதத்திலும் வேறுபாடு இல்லை. ஆளும் கட்சியினரிடம் எமது உரிமைகளைக் கோருவதற்கு நாம் எம்மைத் தயாராக்கிக் கொண்டு தான் போராட்டத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டும், சிறுபான்மைத் தமிழர் பிரச்சினை தீராத வரையில் உரிமை கோருவதற்கு எமக்கு லாயக்கு இல்லை.

### போராடத்தான் வேண்டும்

ஆளும் கட்சியினரின் மனம் மாறும். தமிழ் பேசும் இனத்தின் அபகரிக்கப்பட்ட உரிமைகளை அவர்களாகவே முன் வந்து மனமுவந்து கொடுப்பார்களென்பது பகற் கனவு. போராடித் தான் பெறவேண்டும்.

பெரும்பான்மை தமிழ் மக்களாகியோரிடம் சிறுபான்மையினர் ஒன்றும் பிச்சை இரக்கவில்லை, காணிக்கைகோரவும் இல்லை, மறுக்கப்பட்ட பிறப்புரிமைகள்— அதைத் தான் தாருங்கள் என்று கேட்கிறார்கள். ஆளும் கட்சியினரிடம் நாம் கோரும் அதே கோரிக்கையைத் தான் சிறுபான்மையினர் உங்களிடம் கோருகிறார்கள். நம் மத்தியில் புரைபோடிவிட்ட பிரிவு வேற்றுமையை அகற்றுவோம்.

இன்று தமிழ் பேசுமினத்தின் ஒரே கட்சி தமிழரசுக் கட்சி.

தமிழ் பேசும் இனத்தின் ஒரே குரல் தமிழரசுக் கட்சி.

தமிழ் பேசும் இன விடுதலைக்குப் போராடும் தகுதியுடைய ஒரே கட்சி தமிழரசுக் கட்சி.

தமிழரசுக் கட்சியின் மூவர்ணக் கொடியின் கீழ் தமிழ் பேசும் இனம் ஒன்று திரள வேண்டுமாயின் சிறுபான்மைத் தமிழர்களுடைய உரிமைகள் கிடைக்க வேண்டும்.

எம் இனத்தின்—சிறுபான்மைத் தமிழர்களின் வளர்ச்சியில், உயர்ச்சியில், வளத்தில் அக்கறை இல்லாதவர்களெல்லாம் பிரச்சினைகளைப் பெரிது படுத்தி குட்டை குழப்பி, தம்மை வளர்க்க தமக்கு புகழையும் சலுகைகளையும் சம்பாதிக்க, எம் மத்தியிலே வேற்றுமைகளை வித்திட்டு வளர்க்கின்றார்கள்.

(13-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கருணைச் சுடர்,
ஏழாலை மேற்கு.

கே: இந்திய இராணுவ வீரர்கள் சீனாக்களை விரட்டி அடிப்பதில் முழுத் திறமையையும் காட்டினார்கள். ஆனால் இலங்கை இராணுவத்தினரின் திறமையை எப்பொழுது உலகம் கண்டு வியந்தது?

ப: சத்தியாக்கிரக சமயத்தில் நிராயுத பாணிகளான பெண்களையும் குழந்தைகளையும் அடித்து நொறுக்கிய போது.

ஃ

இ. பாலேந்திரன்,
பலாங்கொடை.

கே: பாடசாலை மாணவர்கள் சினிமா பார்ப்பது நல்லதா?

ப: நல்லது. ஆனால் அறிவு வளர்ச்சிக்கான சினிமாப் படங்களாக இருத்தல் வேண்டும்.

ஃ

பி. கண்ணையா. பலாங்கொட.

கே: தமிழரசார் தங்கள் அகிம்சைப் போராட்டத்தை மலையகத்திற்கும் விஸ்தரித்தால் விபரீத விளைவு உண்டாகுமா?

ப: அது பிரதமரின் பிரச்சாரம். உரிமைகளை வழங்க வேண்டிய "விபரீதம்" ஏற்படும்.

ஃ

தவராணி, கல்மடு.

கே: பெண்கள் எதை வெறுக்கிருர்கள்?

ப: தங்களைவிட மற்றப் பெண்கள் அழகாயிருப்பதை.

ஃ

இரா நாகலிங்கம், கொழும்பு.

கே: 'தமிழரசுத் தந்தை' யென்று பல காலமாக வெளியிட்டு வந்த ஒரு தினசரி திடீரென இப்போது 'தமிழரசுத் தலைவர்' எனப் பெயரிட்டு வருவதின் மர்மம் என்ன?

ப: ஆறு மாதங்களில் தமிழரசுக் கட்சியை ஒழித்துக் கட்டும் அவர்களின் திட்டங்களில் இதுவும் ஒன்று. தன்னைத் "தமிழரசுத் தந்தை" என்று அழைப்பதையே திரு. செல்வநாயகம் அவர்கள் விரும்புவதில்லை என்ற விஷயம் உங்களுக்குத் தெரியுமா? அது அவரது அடக்கம்—சிறந்த பண்பு. இத் தினசரி எதைக் கூறினுலும் தமிழ் மக்களோ, தமிழரசுத் தந்தையோ கவலைப்படப்போவதில்லை.

ஃ

சு. கந்தசாமி, கந்தரோடை,

கே: கியூபாவில் அமெரிக்கத் தலையீட்டைக் கண்டிக்கும் கொம்யூனிஸ்ட் குஞ்சுகள் சீனுவின் நிலப்பசியைக் கண்டிக்கத் தவறியது ஏன்?

ப: சீனக் கொம்யூனிஸம் இலங்கைக்கும் வரவேண்டுமென்று விரும்புவதால்...

கே: சீனுவின் ஆக்கிரமிப்பை எதிர்ப்பதற்கு இலங்கை அரசாங்கம் படைகளை அனுப்பினுல் இந்தியாவை மீட்க முடியுமா?

ப: இந்திய எல்லையில் சீனுக்காரன் நிராயுத பாணியாக சத்தியாக்கிரகமா செய்கிருன் இலங்கைப் படைகளை அங்கே அனுப்ப? யுத்தம் நடக்கும் இடத்தில் நமது படைகளுக்கு என்ன வேலை?

ஃ

ப. ஜெயகுமாரன்,
பருத்தித்துறை.

கே: அடுத்த நிதி மந்திரியாக ஒரு பெண் வந்தால் எப்படி இருக்கும்?

ப: பிரதமர் சிறிமாவோவுக்குத் துணையாக இருக்கும். யார் நிதி மந்திரியானுலும், அவர் இப்பொதெல்லாம் நிதியில்லா மந்திரியாகத் தான் இருப்பார்.

ஃ

வி. ஆர். சாம்பு, கண்டி.

கே: சீனு—ரஷ்யப் பகைமை வளர்வதால் ரஷ்யா சீனு மீது படையெடுக்கும் சாத்தியக் கூறுகள் உண்டா?

ப: இல்லை. இது ஒரு குடும்பச்சண்டை என்கிருர் கென்னடி. கியூபா தகராறில் அமெரிக்காவையும், ரஷ்யாவையும் ஓர் அணு ஆயுத யுத்தத்தில் சிக்கவைத்து விட்டு, ஆசியாவைச் சுலபமாக விழுங்கிவிடத் திட்டமிட்டிருந்ததாம் சீனு. இந்தச் சூழ்ச்சியில் சிக்காத குருஷேவ் தனது ராஜதந்திர நடவடிக்கைகளின் மூலம் உலக யுத்தமொன்று ஏற்படுவதையே தவிர்த்து சீனுவின் எண்ணத்தில் மண்ணைப் போட்டுவிட்டார். இதனுல் ஆத்திரமடைந்த சீனு குருஷேவைக் கன்னுபின்னு என்று திட்டுகிறது.

ஃ

இதயசூரியன், இறக்குவான.

கே: தமிழகத்தில் தி. மு. க. வை ஒழித்துவிடுவதின் மூலம் பாரதத்தின் சுதந்திரத்தைக் காக்க முடியும் என்று தி. மு. கவை ஒழிக்கவும் சுதந்திரத்தைக் காக்கவும் வீர சபதமெடுத்து ஒரு படை திரட்டப்பட்டதே, தி. மு. க. தற்சமயம் பிரிவினையை வற்புறுத்தாததால் வீர சபதமெடுத்த அப்படையினர் சுதந்திரத்தைக் காக்க வட எல்லை சென்று சீனரோடு போராடுவார்களா?

ப: அது ஒரு "குண்டர்கள்" படை. உள்ளூரிலே காடைத்தனம் செய்யத் தான் அதற்குத் தெரியும்.

ஃ

கே. பாலேந்திரன்,
திருக்கோணமலை.

கே: இரத்த உரித்திலுள்ள பெண்ணை விவாகம் செய்வதற்கும் பிற குடும்பத்திலுள்ள பெண்ணை விவாகம் செய்வதற்குமுள்ள வித்தியாசம் என்ன?

ப: சொந்தப் பெண்ணை மணந்தால் உறவினர் வட்டாரம் விரியாது. பிற குடும்பத்தின் பெண்ணை மணந்தால் உறவினர் தொகை திடீரெனக் கூடிவிடும்.

ஃ

நடராஜா, வலியடைப்பு.

கே: நான் எந்தப் பெண்ணைக் கண்டாலும் தெய்வமாக மதித்து நடப்பவன். அதற்குக் காரணம்?

ப: நீர் பெண் பக்தனுக இருப்பது தான்.

ஃ

குமாரச்செல்வன், காலி.

கே: ஒய்! காலை வாரிவிடும் கபோதிகளுக்குக் காக்காய் பிடித்தும், அம்மையார் சந்நிதியில் அன்னக்காவடி எடுத்தும் பயனில்லை என்று பகிரங்கமாக விட்ட பின்பு என்ன [illegible] செய்யலாம்?

ப: ஒய்! அன்னக்காவடியே! காவடியைத் தூக்கியெறிந்து விட்டு, துப்பாக்கி தாங்கி, சீனனை ஒரு கை பார்க்க போர் முனைக்கு உடனே புறப்படும்.

ஃ

சுனுதானு, நீக்கம்.

கே: ஆக்கிரமிப்பு வெறி கொண்ட சீனுவை ஆதரித்து துண்டுப் பிரசுரம் விடும் இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தில் தமிழர்கள் இன்னும் உறுப்பினர்களாக உள்ளனரா?

ப: அந்த ஸ்தாபனத்தில் தலைவர்களைத் தவிர சிங்கள, தமிழ் உறுப்பினர்கள் அனைவருமே சீன ஆக்கிரமிப்பைக் கண்டிப்பவர்கள் தான்.

ஃ

அருட்சோதி, ஏழாலை மேற்கு.

கே: சீன இந்திய எல்லைப் பிரச்சினையில் இலங்கைப் பிரதமர் தனது ஆதரவு யாருக்கு என்று ஏன் கூறவில்லை?

ப: சீனுவுக்கும் இந்தியாவுக்குமிடையே ஆதரிப்பதற்கு ஏதாவது ஒன்று இருக்கிறதா என்று பிரதமர் இன்னும் தேடிக் கொண்டிருக்கிருராம். இதன் விளைவு இந்தியாவின் பகையை இலங்கை தேடிக் கொள்வது தான்.

ஃ

"வண்ணையூர்க் கலைஞன்"
வண்ணூர்பண்ணை,

கே: சீனப்பிரதமரின் கொள்கைக்கும், இலங்கைப் பிரதமரின் கொள்கைக்கும், இந்தியப் பிரதமரின் கொள்கைக்குமுள்ள வேறுபாடுகள் யாவை?

ப: முறையே பஞ்சமாபாதகம், பஞ்ச தந்திரம், பஞ்ச சீலம் ஆகியவை தான் கொள்கை வேறுபாடுகள்.

ஃ

அருள்வேலழகன், கல்வயல்.

கே: மானிடம் பார்வை பெற்ருர்! மயிலிடம் சாயல் பெற்ருர்! வானிடம் கூந்தல் பெற்ருர்! வண்டிடம் விழிகள் பெற்ருர்! [illegible] பெண்களுக்கு இரவல் என்று கவிஞர்கள் கூறுகிருர்களே. பெண்களுக்கெனச் சொந்தமானது ஒன்றுமே இல்லையா?

ப: ஏன், உள்ளம்! எதையோ கூறுவேனென்று எதிர்பார்த்து ஏமாந்து போய் விட்டீரே!

ஃ

மு. கருணைநிதி, ஏழாலை மேற்கு,

கே: நிதி மந்திரி திரு. கலுகல்லை என்ன செய்து கொண்டிருக்கிருர்?

ப: அரிசிப் பங்கீடு அரைக் கொத்து வெட்டலாமா? ஒரு கொத்து வெட்டலாமா? அல்லது இரண்டு கொத்தையும் அபேஸ் செய்யலாமா? என்ற சிந்தனையில் மூழ்கிக் கிடக்கிருர். ஆனுல் பங்கீடு வெட்டு அவசியம் என்பதை மட்டும் முடிவு செய்து விட்டாராம்.

ஃ

ச. பாலகுருசுவாமி, சுன்னுகம்.

கே: சீனப்பிரதமர் இப்போதென்ன கூறுகிருர்?

ப: அவரை 'நேருசுரம்' என்னும் காய்ச்சல் பிடித்தாட்டுகிறது. 'நேரு ஒரு பிற்போக்குவாதி, நேரு ஓர் ஏகாதிபத்தியகையாள், நேரு ஓர் அமெரிக்க ஏஜண்ட்' என்றெல்லாம் பிதற்றிக் கொண்டிருக்கிருராம்.

கே: பலாலிக்கு ஏன் ஓர் அரசாங்கக் கோஷ்டி சென்றனர்?

ப: சீனு இலங்கையைத் தாக்கினுல் வட இலங்கையை எப்படிப் பாதுகாப்பது என்பதை ஆராய்வதற்காக இருக்கலாம்.

ஃ

அருள், கொழும்பு- 8

நான் ஒரு பெண்ணைக் காதலித்தேன். அப் பெண் என்னையும் மனமாரக் காதலித்தாள். எனது பெற்ருேர், இதற்குக் குறுக்கீடாக நின்று வேருெரு பணமுள்ள பெண்ணை எனக்கு விவாகம் செய்து வைக்க ஏற்பாடு செய்துள்ளனர். இதில் எதைக் கைவிடுவது?

ப: பணம் வேண்டுமா? காதலி வேண்டுமா? என்பது தான் கேள்வி. பணமே பிரதானம் என்ற கருத்தை நீங்கள் ஆதரிக்காவிட்டால், எவ்வகையிலாவது பெற்ருேரின் சம்மதத்தைப் பெற்று காதலியைக் கைப்பிடியுங்கள்.

ஃ

"மாவை" அநுராதபுரம்.

கே: பாரதத்தில் சில "நூஸ்னியூம்கொ" தலைவர்களைச் சிறைப் படுத்தியிருப்பது போல் இலங்கையிலும் உள்ள குஞ்சுகளைச் சிறைப்படுத்தினுல்...?

ப: நீர் ஒரு கொம்யூனிஸ்டோ? எதையும் தலைகீழாய்ப் பார்ப்பவர்கள் அவர்கள் தான்.

ஃ

நாகரீகப்பித்தன், உருத்திரபுரம்.

கே: நாகரீகம் உயர்ந்து வர கச்சை அணிந்த கமக்காரர் கூட கால் முட்ட உடை தரித்துக் கொள்ளுகிருர்கள். ஆனுல் குதிக்கால் தெரியாமல் உடை அணிந்த பெண்கள் மட்டும் அங்கங்கள் தெரிய அணிவதேன்?

ப: நாகரீகம் உயர உயர அவர்களின் உடையும் உயருகிறது.

ஃ

யோ. சிவலிங்கம்,
தெல்லிப்பழை.

கே: எமது தமிழரசுக் கட்சியின் ஒரு பத்திரிகையாகிய சுதந்திரனில் வீண் விளம்பரங்களையும் சினிமா விளம்பரம் முதலியவற்றையும் விடுத்து தாய் நாட்டின் விடுதலை வீரர்கள் அண்ணு, கருணுநிதி, முதலியவர்களின் அரசியல் பேச்சுக்களைப் பிரசுரித்தால் என்ன?

ப: தாராளமாகப் பிரசுரிக்கலாம். ஆனுல் அதற்கு விளம்பரதாரர்கள் பணம் கொடுப்பார்களோ?

## பஞ்ச சீலம்

—"மல்லிகா"—

பஞ்ச சிலம் பேசியவன் படையெடுக்கிருன்
கொஞ்சமேனும் நன்றியின்றிக் கொடுமைசெய்கிருன்
நெஞ்சமற்ற செயலிதடா, நீதிசாகுது
வஞ்சமற்ற பாரதமே வந்துமோதிடு

நஞ்சுவைத்த கலசமான சீனர்கள் தம்மை
கொஞ்சவந்த கிளிகளென்று கூடிக் களித்தாய்!
பஞ்ச சீலப் பால்கொடுத்தாய்—பரிந்தணைத்தாயே!
மிஞ்சிவந்து உனையடிக்க வரமளித்தாயோ?

பார்உனக்குக் கைகொடுக்கப் பாய்ந்துநிற்குது
மார்புதட்டி மறவர்படை மானம்சேர்க்குது
யார்உனக்கு எதிரியிந்த சீனப்பூச்சியா?
தேர்இழுக்கும் யானைமுன்பு சுண்டெலியோடா?

புத்தர்மட்டும் பிறக்கவில்லை உந்தன் நாட்டிலே
கத்திவைத்துப் போர்புரிந்த கட்ட(ப்)பொம்மனும்,
இத்தரையை நடுங்கவைத்த நேதாஜீபோசும்
சொத்துஉன்தன் சொத்துஅடா சோர்வுறுவாயோ?

சுதந்திரன் சந்தா விபரம்
இலங்கை—இந்தியா உட்பட
வருடச் சந்தா ரூபா.10-00
இன்றே உங்கள் சந்தாப் பணத்தை அனுப்பி
சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளுங்கள்!

கிடைக்கும்
சிமிந்தி
சங்கர் பிராண்ட் (இந்தியன்)
இரும்பு சாமான்
எம். எஸ். ரவுண்ட்ஸ்
எல்லா அளவுகளிலும்
எம். எஸ். ஆங்கிள்ஸ்
எம். எஸ். பிளாட்ஸ்
கல்வனைஸ்ட் கூரை தகடுகள்
28, 30, 32 பி. டபிள்யூ. ஜி.
முள் கம்பிகள்
14 கேஜ் அன்ட் 12½ கேஜ்
டி நேச்சர்ட் ஸ்பிரிட்
கலந்து கொள்ளுங்கள்:
ஜாபர்ஜி பிரதர்ஸ்,
நிர் 161, குமார வீதி,
புறக்கோட்டை, கொழும்பு-11.
போன் : 78501

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தித்து வந்தவை

காலைகண்டன்

## உறவினர் வெறுத்த பிரபல திருமணம்

இலங்கையில் உயர்ந்த பதவியொன்றை வகிக்கும் கண்டிச் சிங்கள வகுப்பைச் சேர்ந்த ஒரு பெண்மணி, அதே வகுப்பைச் சேர்ந்தவரும், தன் உறவினருமான ஒருவரை ஓர் உயர்ந்த பதவிக்குத் திடீரென உயர்த்தினார். தன் உறவினருக்கும் தன் சாதிக்காரருக்கும் செய்த 'மிகப்பெரிய சேவை' இது என்று வர்ணிக்கப்பட்டது.

புதிய பெரும் பதவி ஏற்ற பிரமுகரின் மகன் ஏற்கனவே கரைநாட்டுச்சிங்களப்பெண்ணொருவருடன் காதல் கொண்டிருந்தார். இதை முன்னமே அறிந்திருந்த தந்தை, தன் மகனின் காதலுக்கு இடையூருக இருக்கவில்லை.

புதிய பெரும் பதவி திடீரெனக் கிடைத்ததும் மனம் மாறி அவர் தன்னுடைய மகனின் காதலுக்குத் திரையிட முயற்சி செய்தார். உயர்ந்த சாதி என்று கணிக்கப்படும் கண்டிச் சிங்கள வகுப்பைச் சேர்ந்த தன்னுடைய மகன், தாழ்ந்த சாதி எனக்கருதப்படும் கரைநாட்டுச் சிங்களப் பெண்ணை மணப்பதை தகப்பனுர் விரும்பவில்லையாம். அக்கலியாணம் தடை செய்யப்பட வேண்டியதற்கு அரசியற் காரணங்களும் பல இருக்கின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டதாம்.

எவ்வளவோ முயற்சித்தும் மகனின் காதல் திருமணத்தை நிறுத்தி வைக்க முடியவில்லை. கண்டிச்சிங்கள வகுப்பைச்சேர்ந்த பிரபலஸ்தர்கள் பலர் எவ்வளவோ முயன்றனர். பெரும் பதவி வகிக்கும் பெண்மணியும் தன்னுலியன்றமட்டும் இத்திருமணத்தை நிறுத்திவிட முயற்சி எடுத்துக்கொண்டாராம். அதுவும் பலிக்கவில்லை. கொழும்பிலுள்ள பிரபல ஹொட்டேல் ஒன்றில் அதி விமரிசையாகத் திருமணம் நிறைவெய்தியது.

இத்திருமணத்திற்கு பிரபல்யம் வாய்ந்த தந்தை யாரோ அல்லது, அவர்களுடைய நெருங்கிய உறவினரான உயர் பதவி வகிக்கும் பெண்மணியோ செல்லவில்லையாம்.

## ஏமாற்றம்?

பௌத்த சிங்களவர் மத்தியில் பிரதேச வெறியும், சாதித்துவேஷமும் மிகமோசமாகவிருக்கிறது. மேற்குறிப்பிட்ட திருமணத்துக்கு,உயர் சாதிக்கார மணமகனின் பெற்ருரும், உறவினரும் செல்லாததற்குக் காரணம் சாதிப் பாகுபாடும், பிரதேச வெறியும்தான் காரணம் என்றுகூறப்படுவது உண்மையானல்; பௌத்த சிங்களவர்களாகமாறிவிட்டால்சகல உரிமைகளும் கிடைக்கும், அந்தஸ்து உயரும் என்று பெரிய நம்பிக்கையில் மதம் மாறிய நமது சிறுபான்மைச் சகோதரர்களின் நிலைமை என்னுவது?

இலங்கையிலேயே உயர் பதவி வகிக்கும் பௌத்த சிங்கள 'உயர்சாதிக்காரர்கள' மத்தியிலேயே கண்டிச் சிங்களவர், கரைநாட்டுச் சிங்களவர் என்ற பிரதேச பேதம் வளர்ந்துள்ளதே! இது தவிரவும் எண்ணற்ற சாதிகள் அவர்கள் மத்தியில் இருக்கின்றனவே!

மதம் விட்டு மதம் மாறிச் சென்றவர்கள், தமிழ் பேசும் மக்கள் மத்தியில் அனுபவித்து வந்த சலுகைகள் அனைத்தையும் உதறிவிட்டு, பௌத்த சிங்களவர் மத்தியில் ஒரு புதிய சாதியாக, அதுவும் ஆகத் தாழ்ந்த சாதியென்று கணிக்கப்படக்கூடிய நிலைக்கு ஒதுக்கப்படமாட்டார்கள் என்பதற்கு உத்தரவாதம் ஏதாவது உண்டா?

## சீனத் தூதுவராலயத்தில்....

11—11—62 சுதந்திரனில் வெளியான "தூதுவராலயத்தில் இரகசியப் பேச்சு" என்ற செய்தி கொம்யூனிஸ்ட் வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது மட்டுமின்றி மக்கள் மத்தியில் கம்யூனிஸ்டுகள் எப்பேர்ப்பட்டவர்கள் என்பதை விளக்கிவிட்டது.

"இப்படியான சூழ்ச்சிகள் நடைபெறுவதானல் இனிமேல் தங்களுக்கும் கொம்யூனிஸ்ட் கட்சிக்கும் எதுவித தொடர்பும் இராது!" என்று சபதம் செய்தார்கள் சில கொம்யூனிஸ்டுகள்.

"இப்படியும் மக்களை ஏமாற்றுகிருர்களா படுபாவிகள்!" என்றனர் இவர்களை நம்பியிருந்த சிலர்.

"இந்தக் கழுத்தறுக்கும் கொம்யூனிஸ்டுகளை கண்ட கண்ட இடங்களில் வெட்டிப் போட வேண்டும்!" என்ருர் ஒரு இந்திய அபிமானி.

இப்படிப் பலரும் பேசிக்கொள்கையில், 'தான் பிடித்த முயலுக்கு மூன்று கால்' என்று, கருதிக்கொண்டு, தங்களுடைய பிற் போக்குகளுக்கு — முற்போக்கு என்று பெயர் மட்டும் சூட்டிக்கொள்ளும் சில பிற்போக்குகள், செய்தியை நம்ப மறுத்துவிட்டார்கள்.

ஆனல், இச் செய்தி பற்றிக் குறிப்பிட்ட ஒரு கொம்யூனிஸ்ட் பத்திரிகை, செய்தியை நேரடியாக மறுக்காமல், சுற்றி வளைத்து மழுப்பிவிட்டு இறுதியில்,

"அந்தரங்க அறைகளின் சுவர்களில் சமஷ்டிவாதிகளின் ஒட்டைக் காதுகளும், நீட்டுக் கண்களும் இருக்கின்றன என்ற விபரீதம் எல்லோருக்கும் இப்போது தான் தெரியவந்துள்ளது."

என்று கூறுவதன் மூலம் உண்மையை ஒப்புக் கொண்டுள்ளது.

முன்பு 'சுதந்திரன்' செய்தியை நம்ப மறுத்த "பிற்போக்குகள்" தங்கள் பத்திரிகையே உண்மையை ஒப்புக் கொண்ட பின்பு வாயடைத்து விட்டனர்.

இது பற்றி அம்மானிடம் விசாரித்தபோது அவர் திரு. சண்முகதாசனுக்குக் கிடைத்த மரியாதை பற்றி குறிப்பிட்டார்.

பேச்சுவார்த்தைகளை முடித்து வெளியேறிய திரு. சண்முகதாஸனை, சீனத் தூதுவராலயத்தைச் சேர்ந்த நான்கு முக்கிய சீனர்கள் முதுகில் தட்டிக் கொடுத்து, கட்டித் தழுவி கட்டடத்தின் இடது பக்கத்தில் சுவரருகாமையில் நிறுத்தப்பட்டிருந்த கறுப்பு நிற 'போக்ஸ்வாகன்' காரில் ஏற்றி அனுப்பினுர்களாம்.

## ஆசிரிய கலாசாலையில் அநீதிகள்

மட்டக்களப்பு பிரதேசத்தில் இயங்கி வரும் ஒரு ஆசிரிய கலாசாலையில் உத்தியோகம் வகிக்கும் ஒருவரின் அட்டகாசங்கள் அப்பகுதி மக்களுக்கும், குறிப்பாக அக்கலாசாலையில் பயிலும் ஆசிரிய மாணவ மாணவிகளுக்கும், கலாசாலை சம்பந்தப்பட்ட பலருக்கும் பல்லாண்டு காலமாகத் தொல்லைகள் பல கொடுத்து வருகின்றன. குறிப்பிட்ட நபரையிட்டு கல்வி இலாகாவிலும் புகார்கள் அநேகமாக எழுந்தும், விசாரணைகள் நடைபெற்றும், முடிவுகளும் விளைவுகளும் மேற்படி நபருக்கே சாதகமாக முடிவடைந்தது விடுவதுதான் மிகவும் அதிசயமாகவிருக்கிறது.

முன்னுள் மட்டக்களப்பு பகுதி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருடைய தாசானக இயங்கியமையினுல், கல்வி இலாகாவினுள்புகுந்து பல சலுகைகளைச்செய்துவர முடிந்தது இந்நபருக்கு. இந்நாளிலும் இந்நபர் கல்வி இலாகாவினுள் புகுந்து எண்ணற்ற திருவிளையாடல்கள் புரிந்து வருகிருர் என்ருல், ஆளும் கட்சியான சுதந்திரக் கட்சிக்கு வக்காலத்துவாங்குபவர்களில் முதல்வர் இவர் என்பது வெள்ளிடைமலை.

இவ்வுத்தியோகத்தரின் மனைவியின் பிரசவ காலத்தில், கலாசாலை ஊழியர் ஒருவரைத் தனது இல்லவேலைகளைக் கவனிக்க அமர்த்திஞராம். அவ்வூழியர் மறுக்கவே கால்களினுல் உதைத்து வேலை நீக்கம் செய்துள்ளாராம். தொழிலாளர்களுடைய சம்பளத்தை அபகரிப்பது, அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய நியாயமான சலுகைகளைத், தடை செய்வதுபோன்ற மிகக்கீழ்த்தரமான வேலைகளிலும் ஈடுபடுவது இவர் பண்புகளில் சிலவாகும்.

[illegible] தங்கள் பற்றிய தகவல்கள் அம்மான் வசம் சிக்கியுள்ளன. சிலவற்றை இங்கே தருகிறோம்.

மாதாந்தம் மாணவர்களினுடைய உணவுக்கான பணம் விஷயத்திலும் இவர் விளையாடுவதுண்டாம். இப்பணம் பல தனிப்பட்ட வியாபாரப் புரட்டல்களுக்குப் பயன் படுவதை கண்டு பிடித்துள்ளனர். ஒருமுறை திடீரென பரிசோதகர் ஒருவர் சென்று பரிசோதித்த போது, ஏறத்தாழ 3000 ரூபாய் இருக்க வேண்டிய இரும்புப் பெட்டியில் சில சதங்கள் மட்டுமே கண்டு பிடிக்கப்பட்டன. இது பற்றி நடைபெற்ற விசாரணை முடிவு எப்படி முடிவடைந்தது என்பதுஇன்னும்தெரியவில்லை.

அதிபர், ஆசிரியர்கள் ஆகியோர்களுக்கெதிராக மாணவர்களைத் தூண்டுவதும் இவருடைய நடவடிக்கைகளில் ஒன்று.

இவர் செய்கின்ற தீமைகளையிட்டுப் பலமுறை உத்தியோகத்திலிருந்து நீக்கப்பட்டும், பின்கதவால் உள் நுழைந்து விடுகிருர். இவருடைய கொடுமைகள் நீங்கி இக்கலாசாலை நிம்மதியடையும் காலம் எப்போது என்று ஏங்கித் தவிக்கவேண்டியுள்ளது.

## கொம்யூனிஸ்டுக் குஞ்சுகளின் கோணங்கி வேலை

இம்மாதம் 5ம் தேதி சுங்கானையில் நடைபெற்ற காந்தி ஜெயந்தி விழாவை, நடைபெருது தடுக்கும் நோக்கத்துடன் அப்பகுதியிலுள்ள கொம்யூனிஸ்டு குஞ்சுகள் எடுத்த நடவடிக்கைகள் அனைத்தும் அப்பகுதி வாலிபர்களால்முறியடிக்கப்பட்டு விட்டன.

## விஜயாவுக்கு வியாதி

உலக யுத்தம் மூழப் போகிறது, கியூபா பிரச்சினையால் என்ற செய்தி அடிபட ஆரம்பித்ததும் இலங்கைப் போர்க் கப்பல் விஜயாவுக்கு தலையிடி கண்டது. இந்தியாவில் சீன ஆக்கிரமிப்பு ஏற்பட்டு, அதனுல் கிழக்கில் கொந்தளிப்பு நிலை உருவாகியதும், விஜயாவுக்கு பெரு வியாதி கண்டு விட்டதாம்.

காந்தி விழா நடப்பதற்குச் சில வாரங்களுக்கு முன்னர் இந்த கொம்யூனிஸ்டுக் குஞ்சுகள் பாரதி விழா என்ற பெயரில் சங்கானையில் ஒரு கூட்டத்தை நடாத்தி குரங்காட்டம் ஆடியது மக்கள் அறிந்ததே.

எனவே காந்தி ஜெயந்தி விழா சிறப்பாக நடக்கப் போகிறதே என்ற எண்ணத்தில், விழாவை நடைபெருது தடை செய்வதற்குப் பல வழிகளிலும்கொம்யூனிஸ்டுக் குஞ்சுகளால் முயற்சியெடுக்கப்பட்டும்,அனைத்தும் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டன.

முடிவில் யாரோ ஒரு கொம்யூனிஸ்ட்டு அனுமதேயம் 'அமிர்தலிங்கம் தலைமையில் ஆலயப் பிரவேசம்' என்று ஒரு துண்டுப்பிரசுரத்தை வெளியிட்டது. அப்பிரசுரத்தின் கீழ்ப் பகுதி அனைத்தும் கத்தரிக்கப்பட்டு அப்பன் பெயர் தெரியாத பிள்ளைபோல,இரவோடு இரவாக கூட்டம் நடைபெறவிருந்த இடத்துக்கு அண்மைப் பகுதிகளில் ஒட்டப்பட்டிருந்தது.

விழா நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுது மதம் மாற மறந்துவிட்ட கொம்யூனிஸ்டுக்குஞ்சு ஒன்று நல்ல போதை மயக்கத்தில் வந்து, விழா நடைபெற்றுக் கொண்டிருந்த இடத்துக்கு அண்மையிலுள்ள ஒரு சிறு ஆலயத்துள் பிரவேசிக்க வேண்டும் என்று அடம் பிடித்தது.

அவ்வாலயம் மிகவும் சிறியதாக இருப்பதால் பூசகர் தவிர வேறு எவரும்எப்பொழுதும் உள்ளே செல்வது கிடையாது. கூட்டத்தில் நின்றவர்கள் அந்த மதம் மாற மறந்து விட்ட கொம்யூனிஸ்டுக் குஞ்சை உள்ளே செல்வதற்கு அனுமதி கொடுத்தார்கள். பாவம் போதை மயக்கத்தில் நின்ற அந்த கொம்யூனிஸ்டுக் குஞ்சு சிறிது நேரம் வாசல் அண்டையிலிருந்து விட்டு, கூட்டத்தைக் குழப்ப வந்த நோக்கம் வெற்றியடையாது என்று கண்டதும் ஏமாற்றத்துடன் எழுந்து சென்று விட்டது.

## முக்காடு போட்டு மூலையிலிருந்த கொம்யூனிஸ்ட் வீரர்

கன்னுபின்னு என்று, இலக்கணம் இல்லாத மொழி தமிழ் மொழி என்ற எண்ணத்தில், பேனு சென்ற திசையில் எழுதிக் கொண்டு பத்திரிகை ஆபிசுக்குள் இருந்து வீரம் பேசும் ஒரு கொம்யூனிஸ்டுக் குஞ்சு அன்றைய விழாவில்கலந்துஉரை நிகழ்த்தச் சம்மதம் கொடுத்திருந்தது. ஆனுல்கொம்யூனிஸ்டுகளின் வால் ஒட்ட நறுக்கப்பட்டதை அறிந்ததும், விழாவிற்கு வர வசதியில்லை— என்று கடிதம் ஒன்றை அனுப்பிவிட்டு, கூட்டம் நடைபெறும் இடத்திற்கு மிக அண்மையில், ஒரு மூலையில் முக்காடு போட்டுக் கொண்டு மற்றக் கொம்யூனிஸ்டுகளுடன் இருந்து கூட்ட நிகழ்ச்சிகளை உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருந்ததை விழாவை ஒழுங்கு செய்த வாலிபர்களே நேரில் கண்டார்கள். இதுதான் பாவம் பச்சோந்திக்கொம்யூனிஸ்டுகளின் வீரம் போலும்.


## பாடப் புத்தகங்கள்

### தேவை

திரு. வே. சிவக்கொழுந்து ஆக்கமும் சிறந்த பாடப் புத்தகங்களுமான கணிதம் 2—ஜி. ஸீ. ஈ., மனக் கணிதம் 2—ஜீ. ஸீ. ஈ, சூழல் 2—5, மற்றும் உயர் வகுப்பு அக்ஷர, கேத்திர, பூமிசாத்திர நூல்களை விநியோகம் செய்ய தமிழ் பாடசாலைகளுள்ள இடங்களில் விற்பனையாளர்கள் தேவை. இம்மாதம் முடிவுக்குள் விண்ணப்பித்துப் பதிவு செய்து கொள்ளவும்.

உரிமையாளர்

**கலாபவனம் — பருத்தித்துறை.**

ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் அச்சு வேலைகள் எவையாக இருந்தாலும் சரி— அவை கவர்ச்சிகரமாகவும் உங்களுக்குத் திருப்தி அளிக்கும் முறையிலும் செய்து தரப்படும்.

பாடப் புத்தகங்கள், மலர் வெளியீடுகள், சஞ்சிகைகள், துண்டுப் பிரசுரங்கள், அழைப்பிதழ்கள், வர்த்தக ஸ்தாபனங்களுக்குரிய சகல வேலைகள் யாவும் கச்சிதமாகத் தயாரிக்கப்பட வேண்டும் என்று விரும்புபவர்களுக்கு இதே அதற்கு உரிய இடம்:

**சுதந்திரன் அச்சகம்,**

தபால் பெட்டி 1183.

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த,

கொழும்பு-12.

தந்தி : சுதந்திரன் போன் : 3411


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத்தில் மலர்ந்துள்ள கலை மலர்

## நாடு முழுவதும் மணம் பரப்ப வழி காண்போம்

எங்கு நோக்கினும், நாடு முழுவதிலும் நம் மலைநாட்டைப் பற்றியே எல்லோரும் பேசுகின்றனர். மலையகத்து எழுத்தாளர்களே; அங்கு வாழ்கின்ற தமிழ்ப் பெருங்குடிகளைப் பற்றிப் பேசியும், எழுதியும் வருகின்ற பெரியவர்கள்—அம் மலையக மக்களிடையே பின்னிப் பிணைந்து கிடக்கும் கலைப் பண்புகளை ஊன்றி யறிந்து, ஊரறியச் செய்வதில் ஏனோ அக்கறை காட்டவில்லை.

இன்று, மலையகத் தோட்டத் தொழிலாளர்களிடையே நல்லதோர் விழிப்புணர்வும், புத்துணர்வினால் கிளர்ந்த புதுமை வேகமும் ஏற்பட்டுள்ளதைக் காண்கின்றோம். ஆனால் இத் தன்மை பெருமளவில் இளைஞர்கள் மத்தியிலேயே இடம் பெற்றுள்ளது. அதன் பயனாகவே தோட்டங்கள் தோறும் மன்றங்கள் அமைக்கப்பட்டன. அம் மன்றங்கள் வாயிலாக 'ஆடி வேல்' (ஆடிப்பூசை) விழாவிலும், தமிழர் திருநாளாம் தைப் பொங்கல் விழாவிலும்-நாடகங்கள் நடிக்கப்படுகின்றன. பல கலை நிகழ்ச்சிகள் பாங்குடன் நடத்தப்படுகின்றன.

நாடகமும்-கலை விழாக்களும் தான் மலையக மக்களின் கலையா? இவைதானா கிராமியக் கலைகள்?—எனக் கேட்பவர்களுக்கு நல்ல ஏற்ற பதிலாக; இன்னும் எத்தனையோ, இதயத்தை ஈர்க்கின்ற சிறப்பான கலை இயல்புகள் அவர்களுடன் இணைந்திருக்கின்றன.

பெண்களின் கும்மி, காமன் கூத்து, ஒயிலாட்டம், கரக ஆட்டம், காவடியாட்டம், கோலாட்டம் என்ற இந் நிகழ்ச்சிகள் அனைத்தும் இசையோடு இணைந்த இன்பந்தரும் கூத்துகளாகும்; ஆட்டங்களாகும்!

தில்' உள்ள பெண்களும் கூடிக் கும்மி கொட்டும் வழக்கம் இன்றும் நடந்து கொண்டே இருக்கின்றது.

பெரும்பாலும் மார்கழி மாதங்களில் ஒவ்வொரு வீட்டு வாசலிலும் கோலமிடப்பட்டு, பறங்கிப் பூ வைக்கப்பட்டு— அதிகாலைப் பொழுதிலேயே அழகு நடம் புரியும். இந் நாட்க

—தமிழோவியன்—

ளில் இரவுப் பொழுதில் எல்லா 'லயங்'களிலும் ஒரே கும்மி மயம் தான்.

### காமன் கூத்து

இக் கூத்து ஒரு குறிப்பிட்ட மாத நாட்களிலே ஆடப்படும். மன்மதனுக்கும் அழகின் இலக்கணமாம் ரதிக்கும் ஏற்பட்ட காதற் தொடர்புகளை அழகுற வர்ணிப்பது தான் காமன் கூத்து.

"ரதியே! ரதிக்கிளியே!
ரதிக்கேற்ற மன்மதனே!
காமானே! பூமானே!
கரியவன் தன் மகனே!"

என்று அவர்கள் பாடித் தப்படித்து ஆடும் காட்சி பார்ப்போர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும். மன்

பெருமிடத்தை ஆண்களே ஆட்கொண்டுள்ளனர். கிராமியப் பண்பு மிளிரும் பாடலே தெம்மாங்கு. ஒருத்தியை நோக்கி :

"கூடைமேலே கூடைபோட்டுக்
கொழுந் தெடுக்கப்
போறவளே—நீ
சாடையிலே என்னைப் பார்க்
கும்
சங்கதியும் தெரியுமடி !"

என்றொரு இளைஞன் இசைப்பது தெம்மாங்கே தான். ஆணைப் பெண்ணும், பெண்ணை ஆணும் நையாண்டி செய்து பாடி வருவதே தெம்மாங்கு. கிண்டலும் கேலியும் இதனகத்தே நிறைய உண்டு.

தாலாட்டுப் பாடல் தான் உண்மையிலே நம் தாய்க் குலத்தின் தனிப் பெருமையைத் தரணி அறியச் செய்வது. தங்கள் அன்புச் செல்வங்களைத் தொட்டில்களில் இட்டு அவர்கள் தாலாட்டும் போது தமிழ்ச் சுவையில் மெருகேறும், இதோ—

ராராரோ ராரீரேரோ—எங்
கண்ணே
ராராரோ ராரீரேரோ!
கண்ணனைக் கண்ணுறங்கு
—எங்கப்பா!
கானகத்து மயிலுறங்கு!
பொன்னனைப் பொன்னு
றங்கு— என்
பூமலரே நீ யுறங்கு!
—ராராரோ
அழுதால் அரும்புதிரும் —நீ
'ஆ'ன்னு அழுதா முத்து
திரும்
சிரித்தால் சிலம்பதிரும்
—என்
செல்லமகன் குரலோசை




தெம்மாங்கு பாடுதல், தாலாட்டு, ஒப்பாரி என்பதெல்லாம் இசையாகி நம் இதயங்களைத் தொட்டுக் கெட்டியாக ஒட்டிக் கொள்வனவாகும்.

இதையன்றி அந் நாட்களில் மலையக மக்களால், இசைக் கூத்தாக நடித்துக் காட்டப்பட்டு வந்த 'வள்ளி திருமணம்', 'சத்திய வான் சாவித்திரி' 'மகாபாரதம்' 'இராமாயணம்' 'பவளக் கொடி' போன்ற நிகழ்ச்சிகள் எல்லாம், இன்று வயது சென்ற கிழவர்களின் வாய்ப் பாடல்களாகவும், பாட்டிமார்களின் பொக்கை வாய் பகரும் பொழுது போக்குக் கதைகளாகவுமே உள்ளன.

இனி முன்னர் சுட்டப்பட்ட இசை, கூத்து, நிகழ்ச்சிகள் எவ்வாறு எச் சூழலில் இடம் பெறுகின்றன என்பதைத் தெளிவாக்க வேண்டும்.

### கும்மி

தோட்டத்தில் — கோயில்களில் நடக்கும் சிறப்பு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் இளம் நங்கையர்கள் பலர் கூடி கதைகளைப் பாடிக் கும்மி கொட்டுவார்கள்.

இதை விட, நிலாக் காலங்களிலும், ஒவ்வொரு 'லயத்

மதனை எரிக்கும் காட்சியோ நம் மனதையே உருக்கும்.

### ஆட்டங்கள்

ஒயிலாட்டம், பழைய மன்னர்களின் வரலாற்றைப் பாட்டால் உணர்த்தும் ஆட்டம். இவ் வாட்டத்தை எல்லா ஆனந்த நாட்களிலும் மலையக இளைஞர்கள் ஆனந்தமாக ஆடுவர். கரக ஆட்டமும், காவடியாட்டமும் கோயில் திருவிழாத் தினங்களில் மிகவும் நடைபெறும்.

பொன்னர் சங்கர் கதை, மாரியம்மன் தாலாட்டு என்பன கரக ஆட்டங்களில் பெருமிடம் பெற்றவை. காவடி ஆட்டம் பக்தர்களுக்கே உரியதாயினும், பரவசத் திளைப்பிலும் ஆடப் பெறுகின்றது.

கோலாட்டம் மாணவ உலகுக்கே உரித்தெனினும், தொழிலாள இளைஞர்களுக்கும் அதில் ஈடுபாடுண்டு. வீர விளையாட்டில் சிலம்பாட்டத்தைச் சிறப்பாகச் சொல்லலாம். அவர்கள் கம்பினைச் சுழற்றி வீசுகையில் வீரமும் தீரமும் விளையாடிப் பேசும்.

### இசைவகை

தெம்மாங்கு ... பெண்களும் பாடினாலும்,

என்ற தமிழ் அன்னையின் யின் தாலாட்டைக் கேட்டீர்களா?

இப்படி எத்தனையோ ஆயிரமாயிரம் தாலாட்டுகள் மலையகத் தாய்களின் மனதிலும்— வாயிலுமே ஒலித்துக் கொண்டிருக்கின்றன. அவற்றைத் திரட்டி ஆன வழியில் பயன் படுத்துதல் நம்மின் அதி முக்கிய பொறுப்பு.

ஒப்பாரியைப் பற்றி அதிகம் விளக்கத் தேவையில்லை. 'மரண வீட்டில்' மனங் கசிந்து மங்கையர்கள் அழுகையுடன் இசைப்பதே ஒப்பாரி. சிலர் தனிமையில் மனந்தாங்க முடியாத கவலையோ— துக்கமோ ஏற்பட்டு விட்டால் அழுது புலம்புவதும் ஒப்பாரி தான்.

"வாசலிலே காளை போல
வந்திருக்கும் என் மகனே!
பேசாமே போயிட்டியே
பெத்தவளே பார்க்
கலையோ!"

மகனை இழந்த மாதா பிதற்றும் மொழிகளை— இவ் வரிகளை மீண்டுமொருமுறை படியுங்கள். 'அ' என்ற எழுத்தின் வடிவம் அறியாத ... தொட்டிலைத் தேடும் ஒரு சிலருக்குள்ள

திறமையைவிட எவ்வளவோ மேல்.

இவைகளை விடத் தோட்டப் பகுதியில் மற்போர் விளையாட்டும், கைப்பந்தாட்டமும் நிறையச் செல்வாக்குடன் மிளிர்கின்றன. வாய்ப்பாட்டிசையிலும். இசைக் கருவிகளை இயக்குவதிலும் நல்ல திறமையுள்ளவர்கள் நிறைய உண்டு. அவர்களை நாடறியச் செய்ய வேண்டியது நம் இளைஞர் கூட்டத்தின் கடமை.

### உரலும் சிம்மாசனமும்

தோட்டப் பகுதிகளில் நாடகக் கலைக்குள்ள சிறப்பை எடுத்த எடுப்பிலேயே குறிப்பிட்டுள்ளேன். எனினும் இன்னும் சில அதைப் பற்றிச் சொல்லல் நலம் பயக்கும்.

நம் பாட்டன், பூட்டன் நாட்களில் நடைபெற்ற நாடகங்களுக்கும் இன்றைய நாடகங்களுக்கும் ஓரளவு வேறுபாடுண்டு.

அந் நாட்களிலே உரலே அரசரின் சிம்மாசனம். இன்றோ இயற்கை நடப்புகளையும்— உண்மை அமைப்புகளையும் மலையக நாடகங்களில் கண்டு மகிழ்கிறோம்.

திரை உலகில் காண முடியாத கலைஞர்களை நாம் தோட்டத்தில் காணலாம். நடிகர் திலகத்தைப் போலவும், மக்கள் திலகத்தைப் போலவும், இலட்சிய நடிகர் போலவும் அப்படியே நடிப்பவர்களைக் கண் கூடாகக் காணலாம். அவர்களை உரிய வகையில் உயர்த்திட வாய்ப்பில்லையே என்று வருந்துகிறோம்.

சௌந்திரராசன், கோவிந்தராசன், சீனிவாசு போன்ற இசைக்குரல், உடைய எத்தனை இளைஞர்கள் மலையகத்தில் உண்டு. அவர்களை ஏற்றவாறு பயன் படுத்த வேண்டும்.

மலையகத்தில் மலர்ந்துள்ள கலை மலரின் மணம் எல்லோரையும் ஈர்க்கும் பெற்றியது. என்றும் குன்றா நிறை மணமாம் நம் மலையகக் கலை மணத்தை எல்லோரும் நுகர வழி காண்போம்.

## உழுகங்கை விநாயகர் கோவில் கும்பாபிஷேகம்


கண்டி மடுவக் கொல்லைப் பகுதியைச் சேர்ந்த உழுகங்கையில் நிறுவப்பட்டிருக்கும் ஸ்ரீ கங்கை விநாயகர் கோயில் கும்பாபிஷேக உற்சவம், 13—11—62, செவ்வாய்க் கிழமை காலையில் நடைபெற்றது.

விநாயகப் பெருமானுக்கு யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ ச.இராமசாமி குருக்களும், ஆர். சண்முக சர்மா குருக்களும், சோமய்யர், சின்னய்யா பண்டாரம் முதலியவர்கள் ஸ்னபன அபிஷேகமும்,விசேஷ பூஜையும் நடத்தினார்கள். அன்று விசேஷ மேளக் கச்சேரியும் நடைபெற்றது.

அன்று பூராவும், பொல்காவிலை மாயனை தமிழ் வளர்ச்சி சங்க ஞாயிறு சைவ சமய பாடசாலையைச் சேர்ந்த ஆசிரியர்கள் திரு. சேதுரத்தினம், கருப்பையா தலைமையில சென்ற மாணவிகள், செல்விகள் குணமணி, மகேஸ்வரி, மனோரஞ்சிதம், சரோஜினி, கனகபூஷணம், மதனசுந்தரி, மீனாட்சி முதலியவர்கள் கூட்டுப் பிரார்த்தனையும் தோத்திரப் பாடல்களும் பாடினார்கள்.

பிற்பகல் 5 மணிக்கு மேல் கோவில் சபா மண்டபத்தை உருவாக்கிய உயர்திரு உப்பரசிமு-ம. சுப்பிரமணியம் பிள்ளை அவர்களின் உருவப் படத்தை நக்கல்ஸ் குரூப் அதிபரும், கோவில் தர்மகர்த்தாவுமான திரு. எஸ். எம். பி. ஆர். நடராசாபிள்ளை அவர்கள் தலைமையில் ஜே. ஏ. பஸ்நாயக்கா ஜே. பி. அவர்கள் திறந்து வைத்தார்.

இவ் விழாவை முன்நின்று நடத்தியவர்கள் நக்கல்ஸ் தோட்டத் துரை திரு. எஸ். முத்தையாவும், திரு.ரா. சண்முக சர்மாவும் ஆவர். இரவு மடுவக் கொல்லை சின்னக் கந்தைக் கட்டி வி. இராமன் கோஷ்டியாரின் கரக, காவடி ஆட்டமும் நடைபெற்றது.



மேல் படம்: கோயில் சபாமண்டபத்தை உருவாக்கிய திரு. உப்பரசி மு. ம. சுப்பிரமணியம் பிள்ளையின் படத்தை திரு. பசநாயக்கா ஜே. பி. திறந்து வைத்தார். பக்திப் பாடல்கள் பாடிய வரக்காப்போலை மாயனையைச் சேர்ந்த ஆசிரியரும் மாணவிகளும் திரு.ஆர். சண்முகசர்மாகுருக்களும் காணப்படுகின்றனர்.

கீழ் படம்: கும்பாபிஷேக தினத்தன்று அபிஷேகம் நடைபெறுகிறது.

படம் : கிங்ஸ்லி செல்லையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் பேசும் மக்களை

# சூழ்ச்சி வலையில் வீழ்த்தச் சதித் திட்டம்!

## இலக்கியத்தைக் காட்டி ஏமாற்றிவிட எண்ணம்

### சாகித்திய மண்டலத்தின் சூழ்ச்சிகள் அம்பலம்

சாகித்திய மண்டலத்தினுளே அண்மையில் புகுந்துள்ள தீவிர சிங்களவாதிகள்—தமிழ் ஒழிப்பு வீரர்கள்— யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும் நயவஞ்சகமாகத் தங்கள் செல்வாக்கைப் புகுத்தித் தமிழ் பேசும் மக்களைத் தங்கள் சூழ்ச்சி வலைகளிற்வீழ்த்த முனைகிறார்கள். சாகித்தியமண்டலம் யாழ்ப்பாணத்தில் நடத்தப் போகும்இலக்கிய விழாவே இதற்குச் சான்றாகும். இந்த விழாவை கலாசாரப் பகுதி அமைச்சர் திரு. மைதிரிபால சேனநாயக்கா தொடக்கி வைப்பாராம்.

தமிழ்த் தாயின் கழுத்தை நெரித்துக் கொல்லத் திட்டமிட்டுப் பல வழியிலும் முயன்று வரும் அரசாங்கத்தின் மந்திரியார், குற்றுயிராய்க்கிடக்கும் அவளுடைய கழுத்துக் கயிற்றை இறுக்கிக்கொண்டு, தவிக்கும் அவளுக்கு ஒரு மலரை இட்டுத் தமிழ் பேசும் மக்களை ஏமாற்றுவதற்கு முற்படுகிறார். சாகித்திய மண்டலம் இவ்வளவு காலமும் தமிழ்பேசும் மக்களின் சொந்த இடங்களைக் கவனிக்காமற் புறக்கணித்துவிட்டு இப்பொழுது இலக்கிய விழா நடத்துவதற்கு முன்வருவதன் காரணம் யாது? தமிழ் மக்களை ஏமாற்றி வெளியுலகுக்குத் தாங்கள் தமிழுக்கு விழா எடுக்கிறோம் என்பதையும் தமிழ் பேசும் மக்களின் பரம்பரை இடத்திலே, தமிழ் பேசும் மக்கள் சிங்கள அமைச்சரையும், தமிழை ஒதுக்கும் சாகித்திய மண்டலத்தையும் வரவேற்கிறார்கள் என்பதையும் காட்டவும், தமிழ் மொழிக்குச் சிங்கள அரசாங்கம் செய்து வரும் அநீதிகளை நினைத்து நினைத்துக்கொதித்தெழும்பியுள்ள தமிழ் பேசும் மக்களின் கொதிப்பை ஆற்றி, அவர்களைத் திசைதிருப்பி விழுத்திவிடவுமே யாழ்ப்பாணத்தில் சாகித்திய மண்டலம் தமிழ் விழா எடுக்க முன்வந்துளது.

#### சூழ்ச்சிகள்

தமிழரசுக் கட்சிக்கு எதிரான தமிழரையும், அக்கட்சியுடன் வழுவழுப்பான உறவு கொண்ட தமிழரையும் அப்

பெருவாணர்

பாவிகளான தமிழறிஞரையும் கைப்பொம்மைகளாகக் கொண்டு தமிழர் உரிமைப் போராட்டத்தை நசுக்கவும் அரசாங்கத்தோடு ஒத்துழைக்கவும் சூழ்ச்சிகள் செய்யப்படுகின்றன. நினைத்தாலே நெஞ்சம் கொதிக்கும் இந்தச் சூழ்ச்சிகளின் விளைவே இந்த இலக்கிய விழா. இன்னும பல விழாக்களும் நாடகங்களும், சங்கங்களும் தோன்றும். அண்மையில் உருவான கிழக்கிலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கக் கேலிக்கூதது இவற்றின் முன்னோடியென்பது பலருக்குத் தெரியாமலிருக்கலாம்.

தமிழுக்காக நாளும் பொழுதும் பாடுபடும் ஒரு பெருமகனோடு சேர்ந்துவிட்டால்-அவரோடு பாராட்டப்பட்டால்-தாங்கள் தமிழ் பேசுமினத்துக்கும், தமிழ் மொழிக்கும், தமிழ் உரிமைக்காகப் போராடுவோருக்கும் மாறுகச் செய்த துரோகச் செயல்கள் மறைந்து போகும் என மனப்பால் குடிப்பவர்களின் போலி நாடகமே அண்மையில் மட்டக்களப்பு நகரில் நடைபெற்ற ஒரு விழாவாகும். இந்த நாடகத்தை ஒருவாறு உணர்ந்தமையாலேயே மட்டக்களப்புத் தமிழ் எழுத்தாளர் சங்கம் புதிய காளான் சங்கத்துடன் எவ்வித தொடர்புங்கொள்ள மறுத்துவிட்டது. முன்னர் ஒன்றோடொன்று பகைமை பாராட்டிய துருவங்கள் இரண்டு ஒன்றுபட்டுத் தீட்டிய திட்டங்களில் ஒன்றே பாராட்டு விழாவாக உருவாகிற்று என்பதையும் பலர் அறியாமலிருக்கலாம்.

தமிழ் பேசுமினத்தையும், தமிழ் மொழியையும் சிங்கள தீவிரவாதிகளுக்குக் காட்டிக் கொடுத்து, மானம் இழந்து, மதிப்பிறங்கிக் கிடந்த சில தமிழ்த்துரோகிகளும், இவர்கள் மண்டியிட்டு, கால்பிடித்துப் பூசைசெய்து, தலையில் ஏற்றிப் போற்றுகின்ற சிங்கள தீவிர வாதிகளும் சேர்ந்தே இந்தச் சூழ்ச்சிகளில் ஈடுபட்டுளராம். இவர்களின் பெயர்களைப் பின்னர் வெளியிடுவோம்.

#### உண்மையான சொரூபம்

சாகித்திய மண்டலத்தின் மொழிக் கொள்கை என்ன? அதன் செயற்குழுவிலுள்ளோரின் கடந்த கால சரித்திரம் யாது? இவற்றை அறியும் எவரும் தமிழின் பெயரைத்தானும் சொல்ல இந்தச் சாகித்திய மண்டலத்துக்கு அருகதை இல்லை என்பதை உணர்வார்கள். சுருங்கக் கூறின் சாகித்திய மண்டலம் சிங்களம் மட்டும் எனும் கொள்கையுடன் தமிழ் ஒழிப்பையும் கைக்கொண்டுளது. இம் மண்டலம் நடத்தும் விருந்துகள், விழாக்கள் முதலியவற்றுக்கு விடுக்கும் அழைப்பிதழ்களில் தமிழ் இடம் பெறுவதில்லை; சிங்களமும் ஆங்கிலமுமே இடம்பெறுகின்றன. ஆங்கிலத்துக்கு அளிக்கும் இடத்தைத் தானும் தமிழுக்கு அளிக்க முடியாத சாகித்திய மண்டலம் தமிழ் இலக்கிய விழா எடுக்கிறது. இது ஆட்டுக் குட்டிக்கு ஓநாய் குழைகொடுக்கும் செயல்தான். இநத மண்டலத்துக்குத்தமிழிலே கடிதம் எழுதிய எழுத்தாளர்களுக்கு ஆங்கிலத்திலே மறுமொழி அனுப்பப்படுகிறது. இம்மண்டலத்தின் செயற்குழுவில்

(11-ம் பக்கம் பார்க்க)

## மக்கள் குரல்

### சரித்திர 'சர்க்கஸ்' விளையாட்டு!

'கிழக்கு மாகாணத்தில் அதிக உணவு உற்பத்தி' என்ற தலைப்பின் கீழ் ('டைம்ஸ்' 10-1●-62), கந்தளாய் செருவில் நிலப்பகுதியில் 6,000 ஏக்கருக்கு, ஒரு தேரோவின் தலைமையில், நீர்ப்பாய்ச்சப்படுமென ஒரு செய்தி அறியத் தருகிறது. இந்த நிலப்பரப்பில் குடியிருக்கப் போகிறவர்கள், சிங்கள பௌத்தர்களாகத்தான் (கத்தோலிக்க இயக்கத்தினரல்ல) இருப்பார்களென ஊகிக்கிறோம். இவர்கள் நகரவாசிகளாகத்தானிருப்பார்கள்.

கிழக்கு மாகாணத்துள் மேலும் சிங்கள பௌத்தர்கள் பெருமளவில் ஊடுருவல் நடத்துவதை, இரண்டு சரித்திர முடிவுகளால் ஆதரிக்க முயற்சி பண்ணப்படுகிறது.

ஒன்று: இந்த நிலப்பரப்பு, சிங்கள பௌத்த அரசன் எனக் கருதப்படும் காவன் திஸ்ஸாவின் ஆட்சிக்குட்பட்ட நிலப்பரப்பின் ஒரு பகுதியாகும் என்பது.

இரண்டு; பொலன்னறுவையிலிருந்து வெலிக்கந்த, திருக்கோணமடு, வெருகல் அணைக்கட்டு வழியாகச் செல்லும் ரோடு சிங்கள மன்னர் காலத்தில் உபயோகிககப்பட்டதென்பது.

முதலாவது கூற்றை ஆராயும் பொழுது காவன் (காக்கவன்ன) திஸ்ஸா என்ற பெயர் முந்திய பாலி வரலாற்றுக்களிலோ அல்லது டாக்டர் ஜீ. ஸி. மென்டிஸின் 'இலங்கையின் ஆரம்ப சரித்திரம்'என்ற நூலிலோ காணப்படவில்லை.

அனுராதபுரத்தில் எல்லாளன் (2 கி. மு.) ஆண்ட காலத்தில், தெற்கிலங்கையில் துட்டகெமுனுவின் தந்தையாக விளங்கிய, ருகுனுவிலிருந்து வந்த இந்த நாகர் தலைவன், எப்படி வட- கிழக்கிலுள்ள கந்தளாய்- செருவிலப் பகுதியின் 'சிங்கள அரசனுக' வர முடிந்தது? இந்தச் செய்தியை தீப வம்சத்திலோ அல்லது மகாவம்சத்திலோ காண முடியவில்லை.

'இலங்கையின் பல்கலைக் கழகச் சரித்திரம்' என்ற நூலில் (பக்கம் 56), டாக்டர் எஸ். பரணவித்தான, 14ம் நூற்றாண்டில் அனுமதேய பிக்கு எழுத்தாளர் ஒருவரினல் எழுதப்பட்டதெனக் கூறப்படும் தாத்து வம்ச என்ற நூலிலிருந்து சாட்சியங்கள் புதிதாக எடுத்துக் காட்ட முற்பட்டிருக்கிறார். இதே தாத்து வம்ச — இலங்கைக்குப் புத்தர் செய்த விஜயங்கள் பற்றிக் கூறியிருப்பதை, அண்மையில் தான் டாக்டர் எஸ். பரணவித்தான சரித்திர ஆதாரமற்ற, நம்பமுடியாத கூற்றுக்கள் எனக் கூறியுள்ளார். ஆனல், எந்தச் சரித்திர நூலாசிரியராலும் சரித்திர நூலாக ஏற்றுக் கொள்ளப்படாத, நம்பத்தகாத இந்த நூலில், செரு (செருவாவில) என்ற இடத்தில் காவன் திஸ்ஸ புனித "தாது"களை பிரதிஷ்டை செய்தார் என்னும் கதையை டாக்டர் அப்படியே ஏற்கிறார். அதே நூலிலிருந்து, இப்பிரதேசத்தின் அரசன் சிவா என்பவன் காவன் திஸ்ஸ அல்ல-(ப.148) என்பதையும் சரித்திர உண்மையாக ஏற்கிறார். சிவா என்பவன், பௌத்தராக இருந்திருக்க முடியாது என்பது பெயரிலிருந்தே தெரிகிறது. இலங்கையை அவ்வமயம் ஆண்ட எல்லாளனின் கீழ், அப்பிரதேசத்தை ஆண்ட சைவத் தமிழ்த் தலைவனக விருந்திருக்கலாம்.

மேலும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பெயர்கள் — கந்தளாய் (தமிழ்— கந்தலி, சிவன் கடவுளுக்கு அர்ப்பணிக்கப்பட்டது), செருவில (தமிழ் — செரு வில்லு), வெலிக்கந்த (தமிழ்— வெளி கண்டம் — திறந்த வெளி நிலப்பரப்பு), திருக்கோணமடு, வெருகல் (உண்மையில், தமிழில், பெருகல் — மகாவலியின் பெருக்கு)— இவையெல்லாம் தமிழ்ப் பெயர்களே.

பழமை வாய்ந்த வெருகல் கோவில்களிலுள்ள தமிழ்ச் சாஸனங்களின் ஆங்கில மொழி பெயர்ப்பை நெவிலுடைய 'தம்பிரபானி'யில் பார்க்கலாம். திருகோணமலை மாவட்டத்தில், பல நூற்றாண்டுகளாக, போர்த்துக்கேயர் வந்தபின் கூடச் சில காலமாக, தமிழ்த் துணையரசர்களே ஆண்டு வந்திருக்கிறார்கள்.

இரண்டாவது கூற்றின் படி, பொலனறுவையிலி

(13-ம் பக்கம் பார்க்க)

## கடலே இரையாதே! காற்றே நீ வீசாதே!

—துறைநிலன்—

நள்ளிரவு நேரமது! வெண்ணிலா வானிலே நீந்தி விளையாடிக்கொண்டிருக்கிறது. காதலனைப் பிரிந்த காதலியின் உள்ளம் போல, அந்தக்கடல் குமுறிக் கொந்தளித்துக் கொண்டிருக்கிறது. காற்றுச் சற்றுத் தன் வேகத்தைக் கூட்டிக் கொண்டு வீசத் தொடங்கியது!

கடலின் இரைச்சலும், காற்றின் உறுமலும் அந்த இரவின் அமைதியைக்குலைத்துக் கொண்டிருந்தன. வெண்ணிலவு மங்கை

கிராமிய இலக்கியம்

இடைக்கிடையே மேகமென்னும் தன்காதலனின் அணைப்பிலிருப்பதும், விடுபடுவதுமாக ஜாலங் காட்டிக்கொண்டிருந்தாள்!

இந்த வேளையிலே......அந்தக் குளத்தோரத்தில்!.........

"அத்தான், வீட்டில் அம்மா விழித்துக் கொள்ளும் நேரமாகிவிட்டது. இன்னும் நேரமாகி விட்டால், நான் அங்கு போகவே' முடியாது. இப்போது நான் போகப் போகிறேன்; நாளைக்கு நேரத்தோடு வருகிறேன்"—என்று கூறித்தன் காதலனிடம் விடை கேட்டு நின்றாள் அந்த வேல்விழியாள்!

அந்தத் தலைவன் தான் என்ன செய்வான்? அவள் கூறும் காரணம் உண்மை தானே? எனவே அவளை விட [illegible]

"போய் வா" என்று விடை கொடுத்தான்.

அழகுச் சிற்றடிகளை வைத்து — அரவமேதும் கேட்காது, அவள் அன்னமென ஆடி அசைந்துநடந்து கொண்டிருக்கிறாள். நிலவொளியில் நன்றாகத் தெரிகிறது. அவளது உருவம் மறையும்வரை, அவளை அப்படியே பார்த்து அசையாது நிற்கிறான் அந்தத் தலைவன். நிலவு மங்கையை மேகம் அணைத்துக் கொண்டது-நிலவொளி சற்று மங்கித் தெரிகிறது. அவள் நடந்து மறைந்தாள்.

ஆமாம்! காதலி பிரிந்தாள்; கவலை கொண்டான் காளை. இந்த நள்ளிரவு நேரத்தில், அவள்தம் வீட்டிற்குத் தனிமையிற் போகிறாளே! என்ன நேருமோ ஏது ஆகுமோவென்று அச்சம் கொண்டான்! சலனமற்றிருந்த அவன் நெஞ்சத்தில், இப்போதுதான் ஏதோ ஒரு சபலம் குடியேற ஆரம்பித்தது!......

நிலவு மேகத்திடமிருந்து விடுபடுகிறது—ஒளி எங்கும் பரவுகிறது! தன்னை விட்டுத் தன் காதலி பிரிந்த பின்பு தான், நிலவு எறித்துக் கொண்டிருப்பதையும், கடல் இரைவதையும், காற்று வேகத்தோடு வீசுவதையும் அவனல் உணர முடிந்தது! அந்த இடத்தை விட்டு நகர அவனல் முடியவில்லை—அவனது கால்கள் கற் தூண்களாகிவிட்டன. ஆனல் அவனது மனம் நிலைகலங்கித் [illegible]தது.

(13-ம் பக்கம் பார்க்க)

தமிழ்
G. C. E.
101 வினு விடை

பரீட்சை துணை நூல்கள்
கடந்தகால
வினு விடைகள்

பரீட்சையில் சித்தி தலைவிதியைப் பொறுத்ததல்ல. வினுக்களுக்கு ஏற்ற விடை எழுதுவதில் தங்கியுள்ளது. பரீட்சைக்கு விடை எழுதும் முறைகளுடன் கூடிய புத்தகங்கள் உங்கட்கும் சித்தியைத் தரவல்லன.

| | ரூ.ச. |
|---|---|
| தமிழ்ப் பாஷை | 3-00 |
| எண் கணிதம் | 3-00 |
| குடிஇயல் | 3-00 |
| சரித்திரம் | 3-00 |
| பூமிசாத்திரம் | 3-00 |
| சுகாதாரம் | 3-00 |
| ஆங்கிலம் | 3-00 |
| பயிற்சிச் சிங்களம் | 3-00 |
| றோமன் கத்தோலிக்கம் | 3-00 |
| இந்து சமயம் | 3-00 |
| இஸ்லாம் சமயம் | 3-00 |

வி. பி. பி. கிடையாது
தபாற் செலவு 35 சதம்

விபரங்கட்கு:
அற்லஸ் ஹோல்
723, மருதானை ரோட்,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாளிகைவாசிகள் மத்தியில் வாழும் பிரதமர்

## மக்கள் நிலை அறிவாரா?

## அறிந்திருந்தால் பன்னிரண்டாயிரம் ரூபாயில் நாய் இல்லம் கட்டுவாரா?

பன்னிரண்டு ரூபாய் வாடகையிலே ஒரு அறை எடுக்க முடியாது தவிப்பவர்கள் ஆயிரக்கணக்கிலுள்ள இந்த நாட்டிலே—

பன்னிரண்டு பத்து ரூபாய்களில் படுத்தெழும்ப ஒரு மண் குடிசை கட்ட வழியில்லாதவர்கள் கணக்கிலடங்காத இந்த நாட்டிலே—

பன்னிரண்டு ரூபாய்களை முழுதாக ஒரு நேரத்திலே தங்கள் வாழ் நாளிலேயே கண்டிராத பலர் வாழும் இந்த நாட்டிலே—

எங்கள் பிரதமர் தனது நாய் வசிப்பதற்குப் பன்னிரண்டாயிர ரூபாயில் நாயில்லம் கட்டுகிறார். ஒன்று இரண்டல்ல பன்னிரண்டாயிரம். எண்ணிக் கொள்ளுங்கள். ஏழைப் பங்காளர் என்று பொது மேடையிலே பெருமையாகப் பீற்றிக் கொள்ளும் பிரதமர் ஏழைகள் பகுதிகளை என்றும் பார்த்ததில்லையா? பகலெல் பிச்சையெடுத்துண்டு, வீதிகளிலே திரிந்து, இரவிலே தெருத் திண்ணையில் தூங்கியெழும் துரதிருஷ்டசாலிகளைப் பிரதமர் கொழும்பு வீதிகளிலே கண்டதில்லையா? கடுங்குளிரிலே பாதுகாப்புக்குப் பாழடைந்த குடிசை தானுமில்லாது, போர்த்திக் கொள்ளக் கந்தல் துணிக்கும் வழியில்லாது வீதியோரத்திலே விறைக்கும் குழந்தைகள் கதைகளைப் பிரதமர் கேட்டதில்லையா? வெட்ட வெளியிலே சமைத்து, குடும்பம்நடாத்தி வரும் விந்தையைப் பிரதமர் அறிந்ததில்லையா?

மாளிகை வாசிகளின் மத்தியிலே வாழும் பிரதமருக்கு மண் குடிசைக்கும் வழியில்லாத மக்களின் மனக்குறை தெரியாதுதான். இந்தப் பன்னிரண்டாயிரரூபாயிலே எத்தனை பேருக்குப் புனர்வாழ்வளிக்கமுடியும்? என நீங்கள் கேட்கலாம். ஒப்புக் கொள்கிறோம். ஆனால் பிரதமரின் இந்தச் செயல் ஏழைகளுக்கு எத்தனை ஆத்திரத்தை அளிக்கும் என்பதை அவரும் அந்த ஏழைகளில் ஒருவராயிருந்தால் தான் அறியமுடியும்.

இடுப்பு நோவுகண்ட பின்னும் பணவசதியில்லாத காரணத்தால் நடந்தே பிரசவசாலைக்குச் செல்லும் போது வழியிலே வீதி ஓரத்திலே பிரசவித்து விடும் பெண்களின் பரிதாபக் கதைகளை அன்றாடப் பத்திரிகையிலே காண்கிறோம்.

கொழும்பு பெரியாஸ்பத்திரி வாசலிலே பகல் வேளை சென்று பார்த்தால் பணமற்ற காரணத்தால்-சாதாரணமாக உடல் நலத்துடன் இருப்பவர்களே பிரயாணம் செய்ய விரும்பாத பஸ்ஸிலே பச்சை உடம்புடன் செல்லும் தாய்மார்களைக் காண்கிறோம். நடந்தே வீடு செல்பவர்களையும் காண்கிறோம்.

நோயால் நலிந்த குழந்தைகளைத் தோளில் சுமந்தவாறு கடுகடுக்கும் வெயிலிலே கால் பதைபதைக்க நடந்தே வைத்தியசாலைக்குச் செல்லும் தாய்மார்களைத் தினமும் பார்க்கிறோம். ஆபத்து வேளைகளிலே வாடகைக்காருக்கென்ன, கட்டை வண்டிக்கே வசதியில்லாத பல ஆயிரம் மக்கள் வாழும் இந்த நாட்டுப் பிரதமருக்கு இருக்கின்ற இரு கார்களும் போதாதென்று மூன்றாவதாக ஒன்றும்! இது இவருக்கும் தேசாதிபதிக்கும் உத்தியோக தேவைகளுக்குப் பாவிப்பதற்காகவாம். சொந்தக்காரிலேயே உத்தியோகத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடாதா பிரதமர்? அப்படிச் செய்வதால் அவர் மதிப்புக் குறைந்து விடுமா? மூன்றாவது இக் கார் அத்தியாவசியமா?

—அறிவழகன்—

### அறியாமையா அல்லது அகங்காரமா?

இந்த நாட்டிலே எத்தனை குடும்பங்களுக்கு மூன்று வேளையும் திருப்தியான சாதாரண உணவு கிடைக்கிறது?

இந்த நாட்டிலே ஒரு வேளை உணவும், இரு வேளை நீராகாரமும் வாயுபட்சணமுமாக வாழும் குடும்பங்களெத்தனை தெரியுமா?

அந்த ஒரு வேளை உணவு கூட வார முழுவதும் சோறுகக் கிடைக்காத குடும்பங்களெத்தனை தெரியுமா இந் நாட்டிலே?

குடும்பத் தலைவன் ஒரு வேளை கூலிக்கு உடல் நலமற்றுப் போகாவிட்டால் மறுவேளை அக்குடும்ப முழுவதுமே உபவாசமிருக்கும் நிலையிலிருப்பவர்களெத்தனை? இந்த நிலையிலேதான் பிரதமர் அரைக்கொத்து அரிசியை நாட்டு நன்மைக்காக மக்களிடமிருந்து பறிக்க முயன்றார்.

“வேண்டாம் அம்மா அநியாயம். அரிசியைக்குறைத்து அரைப்பட்டினி போடாதீர்கள்” என்றால் “நான் கூட எனது குழந்தைகளுக்கு அன்றாடம் கொடுக்கும் சாக்லேட்டில் ஒரு பகுதியைக் குறைத்து விட்டேன். மிகுந்த மன வேதனையுடன் இதைச் செய்யும் எனக்கு அரிசி வெட்டால் ஏற்படும் வேதனை புரிகிறது” என்கிறார். கவனியுங்கள்! குறைத்து விட்டாரல்லாது நிறுத்தவில்லை. ஏழை மக்களின்—அன்றாடங் காய்ச்சிகளின்—உணவுக்கும் தனது குழந்தைகளின் சாக்லேட்டுக்கும் உவமை காண்கிறார் எங்கள் பிரதமர். இது அறியாமை காரணமா அல்லது அகங்காரத்தை எடுத்துரைப்பதா?

மறு வேளை உணவுக்கு யாது செய்வேன்? என்ற கவலை பிரதமருக்கு இல்லை. அடுத்த வேளை உணவு கேட்கும் குழந்தைக்கு யாது சொல்வேன் என்ற பிரச்சினை அவருக்கு இல்லை.

பசியால் வாடும் குழந்தைகளையும் கணவரையும் கண்டு கலங்கும் நிலை இல்லை அவருக்கு. அதனாலேதான் சாக்லேட்டு சோற்றுக்குச் சமம் என்கிறார்.

சிறு குடலைப் பெருங்குடல் விழுங்கப்பார்க்கும் விந்தை பிரதமருக்குப் புரியாதது.

[illegible] தெரியாதது அவருக்கு.

கஞ்சியோ கூழோ ஊற்றினால் போதும் என்று வாடுகிற வயிறு கெஞ்சுவது அவர் அறியாதது.

அதனாலேதான் கூறுகிறார்: “நான் சாக்லேட் குறைத்ததைப் போல் நீங்களும் உங்கள் குழந்தைகளுக்குச் சோற்றைக் குறையுங்கள்” என்று.

இப்போது நாட்டு மக்கள் பாலும் பழமும் உண்பதாக எண்ணுகிறார் பிரதமர். அதனாலே தான் கூறுகிறார் கிழங்கு வகைகளை உண்ணுங்களென்று.

மேசை மீது பரப்பியிருக்கும் உணவு வகைகளில் எதை உண்பது என்று திகைக்கும் நிலையிலுள்ள பிரதமருக்குப் பசி புரியாது. நாளும் விருந்துண்டு புளியேப்பம் விடுபவர்களுக்கு மத்தியில் வாழும் பிரதமருக்கு ஏழைகளின் பசிக்குரல் கேட்காது.

### உண்மையில் வாடுவது யார்?

வரி வரி என்று பண்டங்களின் விலையை ஏற்றி விடுவதனால் யார் வாடுகிறார்கள். ஏழை மக்களா? கொழுத்த வியாபாரிகளா?

ஏழை மக்களின் அன்றாட உணவான கோதுமை மா, ரொட்டி, இவைகளின் விலையை ஏற்றிய அரசாங்கம், மின் விளக்கைப் பார்த்தே அறியாத பாமர மக்களின் குடிசைகளிலே ஒளிதரும் மண்ணெண்ணெய், தீப்பெட்டி இவற்றின் விலையை ஏற்றிய அரசாங்கம், மாளிகை வாசிகளின் கேளிக்கைப் பொருளான மதுவை ஒழித்து மிச்சப் படுத்தக் கூடாதா பணத்தை?

அதிகாரிகளின் அசிரத்தை காரணமாகத் துறைமுகப் பண்டக சாலையிலே அழுகும் வெண்காயம்— உழுத்துப் போகும் உருளைக் கிழங்கு— மண்ணோடு மண்ணாகும் கருவாடு— இவை மக்கள் பசியை ஆற்ற உதவக் கூடாதா?

ஸ்திரமற்ற திட்டங்களுக்கு இறக்குமதி செய்யப்பட்ட பல பொருட்கள் மக்கி மண்ணாவது இல்லாமல் மக்களுக்கு உதவக்கூடாதா?

உடுக்க உடையின்றி உண்ண உணவின்றி எத்தனையோ ஏழைமக்கள் வாடும் இந்த நாட்டிலே மந்திரிமார்களின் கேளிக்கைகளுக்குப் உல்லாசச் சுற்றுலாவுக்கும் பணம் வாரியிறைக்கப் படுவது சரியா?

அதிகாரத்தின் தலைமைப் பீடத்திலிருப்பவர்கள் கௌரவத்தைக் காப்பாற்றச்சிறிதளவு ஆடம்பரம் அவசியம் என்பதை அறிவோம். ஆனால் அது அளவுக்கு அதிகமாகலாமா?

### இது யார் பணம்?

வீட்டிலே வறுமை நிலவினாலும், காரியாலயத்திற்குச் செல்லும் குடும்பத் தலைவன் ஓரளவு கண்ணியமாக உடை உடுத்துப் போகத்தான் வேண்டும். அதற்குச் சுத்தமான பருத்தி உடையே போதுமே? கம்பளியோ பட்டுடையோ அணிவது அநீதியல்லவா? அதிகாரிகளின் அசிரத்தையால் அழியும் பணம்— ஸ்திரமற்ற திட்டங்களினாலே செலவாகும் பணம்— மந்திரிமார்களின் கேளிக்கைகளுக்குப் பாழாகும் பணம் — இவையெல்லாம் ஆண்டவன் அளித்ததல்ல— வானத்திலிருந்து கொட்டியதல்ல— பூதம் பாதுகாத்துக் கொடுத்த புதையலுமல்ல. அது இந் நாட்டுப் பணம். இந்தநாட்டு மக்களின்பணம். அது விரயமாவதேன்? என்றுகேட்கஎமக்கு உரிமையுண்டு. அதிகாரமுண்டு. எடுத்ததற்கெல்லாம் முன்பு ஆண்ட கட்சியைக் குறை கூறும் இந்த அரசாங்கம் பதவியேற்று ஆண்டுகள் ஆறாயின. பொருளாதாரத் துறையில் என்ன அபிவிருத்தி கண்டோம்? பல சட்டங்களை இயற்றினோம் எனலாம். சட்டம் சோறு தருமா?

நாட்டின் வளத்தை வளர்க்க முடியாத இந்த அரசாங்கம் வகுப்பு வாதத்தை வளர்த்து நிலைமையை மோசமாக்கியது. மக்கள் நலனுக்கு நேரத்தைச் செலவிட முடியாத அரசாங்கம், தனது பதவி பறி போகாது காப்பாற்றுவதற்கே காலத்தை விரயமிடுகிறது. முடியு

(13-ம் பக்கம் பார்க்க)

இலக்கியம்:

## கோடும் கொடும் புருவம்!

— தேனி —

என்னைக் கண்களால் கொன்று, அவதிக்குள்ளாக்கி வரும் அந்த ஆரணங்கு-அத்தமிழ்ப் பெண்-என் அருமைக் காதலிக்கு, அவள் புருவங்கள் கூடத் துணை செய்கின்றனவே!

என் உயிரைக் குடிக்க வரும் விழிகளைப் பார்த்து ‘நில்லுங்கள்’ என்று தடையுத்தரவு போடுகின்றனவா அப்புருவங்கள்?

இல்லை.—இல்லவே இல்லை!

பதிலுக்கு அவை, அவ் விழிகள் என் உடலெல்லாம் நடுக்கமுறும்படி செய்வதற்கு வழி விட்டல்லவா கொடுக்கின்றன?

அப்புருவங்களுக்கும் என் மீது இரக்கமில்லாமல் போய் விட்டதே!

எப்படி இரக்கம் வர முடியும்?

அவைக்குச் சொந்தக்காரியாக இருப்பவளுக்குள்ள குணம் தானே அவைக்கும் இருக்கும்?

அது தான் அப் புருவங்களும் நடு நிலைமை தப்பி, என்னை நடுக்கமுறச் செய்யும் அவளின் விழிகளுக்கு—என்னைத் துன்புறுத்தும் அவள் கண்களுக்கு—உறுதுணை புரிகின்றன.

அவை மட்டும் வழி மறுத்தால், அவ்விழிகள் என் மீது பாய முடியுமா?

முடியாது!

ஆனால், அவையோ நெளிந்து வளைந்து விழிகளின் வழிக்கு இயைந்து விட்டுக்கொடுக்கின்றனவே!

அவள் எத்தன்மைத்தவளோ. அத்தன்மைத்தனவாகத்தானே அவள் புருவங்களும் இருக்க முடியும்?


ஆமாம்! அவளின் ஒவ்வொரு உறுப்பும் என்னை வருத்தும் நோக்கம் கொண்டதாகவே விளங்குகின்றது!

அப்படியிருக்கையில், அவள் புருவங்கள் மட்டும் விதி விலக்கா என்ன?

இப் புருவங்கள் மட்டும் தமது நடு நிலைமை தப்பாது நிற்குமானால், அவ்விழிகள் என்னை வருத்த முடியாதே!

இவ்விதம் அலக்கணுறும் இலக்கியக் காதலனையே நம் கண் முன் நிறுத்துகிறான் வள்ளுவன், தனது களவியலில்.

கொடும் புருவங் கோடா மறைப்பின் நடுங்கஞர்
செய்யல மன்னிவள் கண்.

தொலைபேசி 693.
HIRATA
தந்தி "சேகரன்"
உறுதியான
நைலோன், தருலோன்
நூல்களும்,
வலைகளும்

கிடைக்குமிடம்:
சேகரம் & சன்ஸ்
74, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்

SUTANTIRAN

1962 நவம்பர் மாதம் 25-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு - 12.

தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183


## போர் நிறுத்தம் ?

சீன—இந்திய யுத்தத்தில் ஒரு புதிய திருப்பம். சீன திடீரெனப் போரை நிறுத்திவிட்டது. அதிசயந் தான். இது ஒரு பிரசாரக் குண்டு— போர்த் தந்திரம் என்பது விமர்சகர்கள் கருத்து. "ஏமாந்து விடாதீர்கள்" என்று இந்தியாவை எச்சரிக்கின்றன பிரிட்டிஷ் பத்திரிகைகள். பிரசாரக் குண்டாயின் இது புஷ்வாணமாகிவிடும், காரணம், இனி சீனவை நம்புகிறவர்கள் இவ்வுலகில் யாருமில்லை.

போர் நிறுத்தமா? அதனை இரு நாடுகளும் சேர்ந்தல்லவா செய்ய வேண்டும்? ஓர் உடன்பாட்டின் அடிப்படையிலே இரு நாடுகளும் போரை நிறுத்தினல் தானே சமரசம் பேச முடியும்?

யுத்தத்தில் ஒரு நாடு திடீரெனச் சுடுவதை நிறுத்திவிட்டால் மற்றநாடு என்ன செய்யும்? தொடர்ந்து தாக்கத்தானே செய்யும். ஆனல் "சரணுகதியாக" இருந்தால், தொடர்ந்து தாக்குவது தவறு. சீன சரண் புகுந்து விட்டதா? இல்லையேல் சமரசம் பேச இந்தியா விதித்த நிபந்தனையை ஏற்றுக் கொண்டதா? இரண்டும் இல்லையே? அப்படியானல் இந்தியா எப்படிப் போரை நிறுத்தும்? ஒரு தலைப்பட்சமான போர் நிறுத்தம் சரணுகதியாக இருந்தாலன்றித் தகராறைத் தீர்க்க உதவாது.

சீன போரை நிறுத்தியது ஏன்? பிரசாரமாகவும் இருக்கலாம். நடுநிலைமை நாடுகளின் மூளையைக் குழப்பி உலக அபிப்பிராயத்தை மாற்றுவது, ஆக்கிரமித்த பகுதிகளில் தன் ஆதிக்கத்தை நிலை நிறுத்த அவகாசம் பெறுவது, ஒரு நொண்டிக் காரணத்தின் மீது மீண்டும் யுத்தத்தை தொடங்குவது ஆகியவையும் போர் நிறுத்தத்தின் நோக்கமாயிருக்கலாம்.

ஆனல் வேறுபல நிர்ப்பந்தங்களும், சங்கடங்களும் சீனவுக்கு ஏற்பட்டுள்ளன. அதன் எதிரொலியே இத்தற்காலிகப் போர் நிறுத்தமென்று கூறலாம்.

(1) கியூபா யுத்தத்தை உலக யுத்தமாக மாற்ற சீன முயன்றது. கென்னடியும் குருஷேவும் ஓர் அணு குண்டு யுத்தத்தில் சிக்கிக் கொண்டால் ஆசியாவைக் கபளீகரம் செய்யலாம் என்று திட்டமிட்டது சீன.

குருஷேவோ ஒரு குள்ள நரி; சீனரின் ஸ்டாலினிஸ்ட் தந்திரங்கள் அவருக்கு தலை கீழ்ப்பாடம். அவர் தலை சிறந்த உபாயங்களைக் கையாண்டார். யுத்தத்தைத் தவிர்த்தார். சமாதானத்தை நிலை நிறுத்தினர். சீனனின் எண்ணத்தில் மண்ணைப் போட்டார். சீனவின் திட்டம் தவிடுபொடியாயிற்று. சீன—ரஷ்யா பகைமை வளர்ந்தது. ரஷ்யாவின் அனுதாபமும் இந்தியாவுக்குக் கிடைத்துவிடுமோ என்ற பீதி வேறு. எனவே போரை நிறுத்த வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியது.

(2) தக்க சமயத்தில் பாகிஸ்தானைக் கொண்டு 2-ம் போர்முனை தொடங்கவும் திட்டமிட்டது சீன. பாகிஸ்தானுடன் பேச்சு நடத்தியது. காஷ்மீர் முழுவதும் பாகிஸ்தானுக்கே சொந்தம் என்பதையும் சீன அங்கீகரித்ததாம்: அயூப்கானும் ஓரளவு மயங்கினர். இதனல் இந்தியாவுக்கு ஆபத்து அதிகரித்தது.

பாகிஸ்தானுக்குப் பிரிட்டன் புத்திமதி சொல்லியது. கேட்பதாயில்லை. அமெரிக்கா சில வாக்குறுதிகளைக் கொடுத்தது. ஏற்பதாயில்லை. உடனே அமெரிக்கா எச்சரித்ததாம். "இந்தியாவைத் தாக்கினல் பாகிஸ்தான் அமெரிக்காவின் பகைவனுகிவிடும். அமெரிக்காவே பாகிஸ்தானைத் தாக்கக் கூடும்" என்ற ரீதியில் மறைமுக எச்சரிக்கை வந்ததாம் அமெரிக்காவிலிருந்து.

பாகிஸ்தான் குரலை மாற்றிக்கொண்டது. சீனவின் எண்ணத்தில் இடி விழுந்தது. பாகிஸ்தானைக் கருவியாக உபயோகிக்கும் திட்டமும் நொறுங்கியது. போர் நிறுத்தத்திற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

(3) சீன ஆக்கிரமிப்பை அகில உலகமும் கண்டித்தது, சோஷலிச நாடுகளும்கூட சீனவை ஆதரிக்கவில்லை. ரஷ்ய அபிப்பிராயம் சீனவுக்கெதிராகத் திரண்டது. சூ-என்-லாய் அதிர்ச்சியுற்றுர். முழு உலகத்தையும் எதிர்த்து நிற்கும் நிலை—எனவே எதோ ஒருவகையில் யுத்தத்தை நிறுத்தவேண்டிய நிர்ப்பந்தம்.

(4) இந்தியாவின் திடீர் எழுச்சி உலகைக் குலுக்கியது. இந்தியப் பிரதமரின் போர்ச் சங்கநாதம் கேட்டதும் பாரதத்தாய் வீறுகொண்டெழுந்தாள். கட்சிகள் ஒன்று கூடின. சுதந்திர உணர்ச்சி பொங்கியது. மாதர், மாணவர், தொழிலாளர், விவசாயிகள் அனைவரும் போர்க் கொடியேந்தினர். நாடே ஓரணியிற் திரண்டது. இப் பேரெழுச்சியைக் கண்டு அகில உலகமும் அதிசயித்தது. சீன பீதி கொண்டது. 40 கோடி மக்களில் ஒவ்வொருவரையும் எதிர்த்துப் போராட வேண்டிய நிலைமை. போர் நிறுத்தத்துக்கு இதுவும் ஓர் ஏதுவாகும்.

(5) மேலைய நாடுகள் ஓரளவு இந்தியாவுக்கு உதவி செய்யும் என்று சீன எதிர்பார்த்தது. கிடைக்கும் உதவியைப் பாகிஸ்தானின் பலத்த ஆட்சேபத்தைக் கொண்டு தடுக்கலாம் என்றும் நினைத்தது. அந்த எண்ணமும் தகர்ந்தது. மேற்கு நாடுகள் பிரமாண்டமான அளவில் ஆயுதங்களையும், யுத்த தளபாடங்களையும் இந்தியாவில் கொண்டு வந்து குவிக்கின்றன. அமெரிக்கா, பிரிட்டன் துரிதவேகத்தில் ஆயுதங்களை அனுப்புகின்றன. மேலைய நாட்டுக் கூட்டில் சேராத நேருவுக்கா இத்தகைய இராணுவ உதவி? அணுஜலஜ குண்டுகள் கூட இந்தியாவுக்கு வந்து விடும் போலல்லவா தெரிகிறது! சூ-என்-லாய்க்குப் பெரும் கலக்கம்—ஏமாற்றம்! பிரமாண்டமான இராணுவ உதவி சீனவைப் பின்னடையச் செய்துள்ளது.

சீனப் போர் நிறுத்தம் தற்காலிகமானதுதான். ஆக்கிரமிப்பு எண்ணத்தை அது கைவிடவில்லை. தக்க சூழ்நிலை ஏற்பட்டதும் மீண்டும் தாக்கும். நியாயம், தர்மம், நேர்மை என்பதெல்லாம் சீனக் கொம்யூனிஸ்டுகளிடம் கிடையா. சமரசம் பேசும் போதே தாக்கிவிடுவார்கள்.

சீனப் படையெடுப்பு ஒரு நன்மையையும் செய்துள்ளது. நயவஞ்சக நண்பனை நம்பித் தூங்கிக் கொண்டிருந்த பாரதச் சிங்கத்தைத் தட்டியெழுப்பிவிட்டது. இப்படையெடுப்பால் இந்தியா விழித்துக் கொண்டது. அது தன் படை பலத்தைப் பெருக்கி, வல்லரசாகும் நாள் இனி வெகு தூரத்தில் இருக்க முடியாது. இந்தியாவின் கண்ணை [illegible] திரையைக் கிழித்தெறிந்த பெருமை சீனவுக்கே உரியது.

யாழ். மாநகர சபை

# சீர்குலைவுக்கு காரணம் யார்?

## முன்பு நிர்வாகத்திலிருந்தோரே முழுவதற்கும் காரணமாவர்

யாழ்ப்பாணம் மாநகரசபையின் இன்றைய சீர் குலைவுகளுக்கு முக்கிய காரண கர்த்தாக்கள் முன்பு பதவி வகித்தவர்களே யன்றி, இன்று நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டவர்களல்ல. முன்பு நகர முதல்வராக விருந்தவர்கள் ஏற்படுத்திய சீர்கேடுகள் இன்று அம்பலமாவதைத் தடுப்பதற்காக அரசாங்க உதவியைப் பெற்று நகரசபையைக்கலைத்துவிட பகீரதப் பிரயத்தனம் செய்து வருகிறுர்கள். இதற்கு உடந்தையாக சில உறுப்பினர்களும் கரணம் போடுகின்றனர்.

யாழ் மாநகர சபை பற்றி தினம் தினம் பத்திரிகைகளில் புதிது புதிதாக செய்திகள் வந்த வண்ணம் இருக்கின்றன. இதற்குக் காரணம் என்ன என்பதைத் தெரிந்து உண்மை விடயத்தை மக்கள் அறிய ஆவலுடையவர்களாக உளர்.

மாநகர சபையில் இத் தொல்லைகள், கஷ்டங்கள் அனைத்தும் கடந்த மாநகர சபைத் தேர்தலோடு ஆரம்பமாயின. எந்தக் கட்சிக்கும் சரியான பெரும்பான்மைப் பலமில்லாத காரணத்தால், சபை முதல்வர் பதவிக்கு கட்சிகள் மத்தியில் கூட்டுச் சேரவேண்டி ஏற்பட்டது. இதனல் முதல் ஆண்டுச் சபைக்கு முதல்வராக தமிழ் காங்கிரஸ் ஆதரவாளரான திரு. துரைராசா, தமிழரசுக் கட்சியின் ஆதரவுடன் தேர்ந்தெடுக்கப்பட்டார். இரண்டாமாண்டுக்கு தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த ஒருவர் சபை முதல்வராகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனல் இருபாலருக்குமிடையில் இருந்த ஒப்பந்தம் முறிந்த காரணத்தால் திரு. ஜேக்கப் சபை முதல்வராகத் தெரிவு செய்யப்பட்டார்.

திரு. ஜேக்கப் சபை முதல்வரானதும் யாழ்ப்பாணப் பிரதிநிதி திரு. ஏ. ரி. துரையப்பா நகரசபை விடயத்தில் அத்துமீறிப் பிரவேசிக்க முற்பட்டார். இது பெரும்பான்மை உறுப்பினரின் எதிர்ப்பைச் சம்பாதித்தது. எனவே திரு. ஜேக்கப் சபை முதல்வர் பதவியிலிருந்து இறக்கப்பட்டு, டாக்டர் எஸ். ஏ. தருமலிங்கம் சபை முதல்வராகத் தெரிவு செய்யப்பட்டார்.

### தீராத போர்

டாக்டர் எஸ். ஏ. தருமலிங்கம் சபை முதல்வராகத் தெரிவு செய்யப்பட்டது யாழ்ப்பாண எம். பி., ஏ. ரி. துரையப்பாவுக்கு மிகுந்த கஷ்டத்தையும் நஷ்டத்தையும், தொல்லைகளையும் ஏற்படுத்தியுள்ளது.

திரு. ஏ. ரி. துரையப்பா பத்து ஆண்டுகளுக்கு மேலாக நகரசபை உறுப்பினராகவும், சில காலம் நகர சபை முதல்வராகவும் இருந்தவர். கடந்த தேர்தலின் போது தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த திரு. ஜே. எஸ். அழகையாவினல் தோற்கடிக்கப்பட்டார். அன்று தொடக்கம் மாநகர சபையைக் கலைப்பதற்கு பல முறை முயற்சியெடுத்து வந்துள்ளார். நகர முதல்வர் எந்த முயற்சியிலும் ஈடுபட்டாலும் அதற்குத் தடையாக முட்டுக்கட்டை போடுவதே யாழ். எம். பி. யின் முழு நேர வேலையாக உள்ளது. இதற்கு மறுப்பும், ஆப்பும் தெரிவிப்பதிலே மாநகர சபையின் பெரும்பான்மை நேரமும் சக்தியும் விரயமாகிறது. சுருங்கக் கூறின் யாழ்.எம்.பி. மாநகர சபைத் தேர்தலில் தோல்வியைக் கட்டியணைத்த நாள் முதல், அன்னுருக்கும் மாநகர சபைக்குமிடையில் தீராத போர் நடக்கிறது.

### யாழ். எம். பி. யின் தந்தி

சென்ற ஆண்டு அவசரகாலச் சட்டம் அமுலுக்கு வந்த போது, அப்பொழுது இருந்த சபை முதல்வர் திரு. துரைராசாவும், யாழ். எம். பி.யை நகரசபைத் தேர்தலில் தோற்கடித்த திரு. ஜே. எஸ். அழகையாவும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார்கள். அப்பொழுது இருந்த மாநகர சபை ஆணையாளருக்கும் இடமாற்ற உத்தரவு வந்தது. இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி யாழ். எம். பி., நகரம் சீர்கெட்டு விட்டது, நகரத்தில் சபை செய்து வந்த வேலைகள் ஸ்தம்பித்து விட்டன என்று ஆட்சியாளருக்குத் தந்திமேல் தந்தி அனுப்பிவைத்தார்.

அச்சமயம் வடமாகாணத் தொடர்பதிகாரியாக இருந்த இராணுவ அதிபர், நகர நிர்வாகம் செவ்வனே நடைபெறுவதாகவும், யாழ். எம். பி. யின் கூற்று தவறுனது என்றும் கண்டித்து அறிக்கை அனுப்பியிருந்தார்.

### மந்திரியாருடன் பேட்டி

மாநகர சபை உடன் கூட வேண்டியதின் அவசியத்தை உணர்ந்த நகரசபை உறுப்பினர்கள், இராணுவ அதிபரை பேட்டி கண்டு, யாழ். எம். பி. சத்தியாக்கிரகத்தில் பங்கு கொண்ட அளவு தானும், சபை முதல்வர் சார்ந்துள்ள அரசியல் கட்சி கலந்து கொள்ளவில்லையென்று எடுத்துக் கூறினுர்கள். மேலும் மந்திரி மைத்திரிபால சேனநாயக்காவை பேட்டி கண்டு, சபை முதல்வரை விடுதலை செய்யும் படியும், ஆணையாளர் இடமாற்றத்தை நிறுத்தி வைக்கும் வண்ணமும் கோரினுர்கள். கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டு, சபை முதல்வர் விடுதலை செய்யப்பட்டதுடன், ஆணையாளர் மாற்றத்தையும் பின்போட்டார்கள்.

### தருமலிங்கம் தலைவராதல்

திரு. துரைராசாவின் பதவி காலம் முடிவடைய, சிறிது காலம் திரு ஜேக்கப் சபை முதல்வராக இருந்தார். பின்னர் டாக்டர் எஸ். ஏ. தருமலிங்கம் சபை முதல்வராகத் தெரிவு செய்யப்பட்டார்.

டாக்டர் தருமலிங்கம் சபை முதல்வராகத் தெரிவு செய்யப்பட்டதும் மின்சார விநியோகம் மூலம் நகர சபைக்கு ஏற்படும் நஷ்டத்துக்கு உரிய காரணத்தைப் புரியலானுர்.

### மின்சார எஞ்ஜினியர் விவகாரம்

யாழ் நகர் மின்சார விநியோகத்தில் அடிக்கடி தடையேற்பட்டது இது நகர மக்களைப் பெரும் கஷ்டத்துக்குள்ளாக்கியது. யாழ். நகர சபை மின்சாரம் உற்பத்தி செய்வதில்லை. நகரசபை அரசாங்கத்திடமிருந்து மொத்தமாய் மின்சாரத்தைப் பெற்று சில்லறையாக மக்களுக்கு விநியோகிக்கிறது. ஆனல் நாட்டிலுள்ள இதர நகரசபைகள் இலாபமடைவது போல, இலாபம் அடைய முடியவில்லை. பதிலுக்கு வருடமொன்றுக்கு சராசரி 70,000 ரூபாய் நட்டம் அடைந்து வருகிறது நகரசபை.

இந்தக் கேடுகளுக்கெல்லாம் மின்சார என்ஜனியரே காரணமென்றும் அவரை இடமாற்றம் செய்யவேண்டும் அல்லது அவரை இளைப்பாற வைக்க வேண்டுமென்றும் கடந்த ஆண்டு சபை ஏகமனதாய்த் தீர்மானித்தது. மாநகரசபை உறுப்பினராகவும், முதல்வராகவும் இருந்த காலத்தில் இத்தஎன்ஜினியரை யாழ் நகரசபையிலிருந்து அகற்ற முயன்ற யாழ் எம். பி. இப்பொழுது அந்த என்ஜினியர்யாழ் நகர சபையிலேயே இருக்கவேண்டுமென்று வக்காலத்து வாங்குகிறுர். எனவே, யாழ் நகரசபையைச் சீர்கெட வைப்பதில் யாழ் எம். பிக்கு உள்ள எண்ணம் எத்தகையது என்பது புலனுகிறது. யாழ் நகரசபையைச் சீர்கெட வைக்கும் கைங்கரியத்தை சில காலம் அண்டியிருந்து கெடுக்க முயன்றும் பார்த்தார்—யாழ் எம். பி. திரு. ஏ. ரி. துரையப்பா. முடியவில்லை, இப்போது பகைத்துப் பார்க்கிறுர்.

### வேலை நிறுத்தம்

மின்சார என்ஜினியர்பிரச்சினை ஒரு பக்கமிருக்க, மறுபுறத்தில் நகரசுத்தித்தொழிலாளர் சிலர் வேலைநிறுத்தத்தில் இறங்கியுள்ளனர். நகர சுத்தித் தொழிலாளர்களின் கங்காணிகளில் ஒருவராகிய திரு. சூசை மைக்கேலின் மரணத்தால் ஏற்பட்ட காலி ஸ்தானத்திற்கு முன்னுள் நகர முதல்வர் திரு. டி. எஸ். துரைராசாவினல் தற்

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைக் கொம்யூனிஸ்ட் கட்சி

# கோட்டைக்குள்ளே குத்து வெட்டு!

## சீர்குலைவுக்கு...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

காலிக கங்காணியாய் நியமிக்கப்பட்ட பிரச்சினைக்குரியவராக்கப்பட்ட திரு. அ. தம்பிராசா, 27-12-61ல் நடைபெற்ற மாநகரசபைக் கூட்டத்தின் ஏகமனதான தீர்மானத்தின்படி நிரந்தரமாக்கப்பட்டார். பத்து மாதங்களுக்கு முன்னர் நியமிக்கப்பட்ட ஒரு நியமனம் பற்றி இன்று வேலை நிறுத்தம் நடைபெறுகிறதென்றால், பின்னணியில் ஒரு சில சக்திகள் மறைமுகமாக இயங்கிவருகின்றன என்பது தெளிவு.

அன்று இந்தியமனத்தை மனப்பூர்வமாக ஆதரித்த உறுப்பினர்கள் சிலர் இன்று வேலை நிறுத்தத்திற்கு ஆதரவாக இருப்பது மேலும் வேடிக்கையாக உள்ளது. குறிப்பாக சமசமாஜக்கட்சியைச் சேர்ந்த நகரசபை உறுப்பினர் தேவபாலசுந்தரமும், யாழ் எம். பியின் ஆதரவாளர்களாக உள்ள சில உறுப்பினர்களுமே இதற்கு உடந்தையாகவுள்ளனர்.

### உறுப்பினர்களின் முரணான செயல்

இவர்களின் இன்றைய கூச்சல் சேவைகால அடிப்படையில் நியமனம் செய்யவேண்டுமென்பதாகும். அன்று 27-12-61ல் இவர்கள் அனைவரும் சேர்ந்தே இந்திய மனத்தைஏகமனதாக நிறைவேற்றியதை இன்று மறந்துவிட்டார்கள் போலும். இதற்கு அவர்களைக் குறைகூறிப்பயனில்லை, காரணம் அவர்கள் சார்ந்திருக்கும் அரசியல் கட்சிகளே நிமிடத்துக்கு ஒரு கொள்கை என்ற அடிப்படையில் உயிர் வாழ்வன.

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் நகர சுத்தித் தொழிலாளர் மிகச் சிலரே. ஆனால் யாழ் எம். பி. திரு.ஏ. ரி. துரையப்பா பாராளுமன்றத்தில் இப்பிரச்சினையை மலை போன்றதாகக் காட்டியுள்ளார்கள். காரணம் நகரசபையைக் கலைக்க வேண்டுமென்ற தனது மறைமுகக் கோரிக்கையை வலுப்படுத்தவே.

### தமிழரசுத் தலைவர்கள் தந்தி

உண்மை நிலையை விளக்கி திருவாளர்கள் எஸ். ஜே. வி. செல்வநாயகம், அ. அமிர்தலிங்கம், செனட்டர் ஜீ. நல்லையா, மு. பாலசுந்தரம், வி. ஏ. கந்தையா, டாக்டர் நாகநாதன் ஆகியோர் ஸ்தல ஸ்தாபன மந்திரிக்கு தந்தி கொடுத்திருந்தார்கள். இதற்கு யாழ் எம். பியின் ஆதரவாளர்களும், சமசமாஜக்கட்சி ஆதரவாளர்களும் கூப்பாடு போடுகிறார்கள், தமிழரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் நகரசபை விடயத்தில் பிரவேசிக்கிறார்கள், என்று.

### யாழ் எம்- பி. கூச்சல்

யாழ் எம். பி. கூச்சல் இடுவதற்கும், குறுக்கிடுவதற்கும் காரணம் உண்டு. சபை நிர்வாகம் தமிழரசுக்கட்சி உறுப்பினரான டாக்டர் தருமலிங்கத்தின் கையிலிருந்து மாற்றப்பட வேண்டும், இல்லாவிடின் சபை கலைக்கப்பட வேண்டும். ஏனெனில் யாழ் எம்.பி. திரு. ஏ. ரி. துரையப்பா சபை முதல்வராக இருந்த காலத்தில், சபை நிர்வாகத்தில் ஏற்பட்ட ஊழல்கள், சீர்கேடுகள் மறைக்கப்பட வேண்டுமல்லவா?

## சம்மேளனத்தின் சதியால் சரிகிறது கோட்டை

## தோட்டத் தொழிலாளர் சங்கத்தில் பிளவு?

**சீனாவின் ஆக்கிரமிப்புக்கு ஆதரவு தெரிவித்து இலங்கை தொழிற் சங்க சம்மேளனம் வெளியிட்ட துண்டுப் பிரசுரத்தால் கொம்யூனிஸ்ட் கட்சி சார்புடைய தோட்டத் தொழிலாளர் சங்கத்துக்குள் பலத்த எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. கொம்யூனிஸ்ட் கட்சி தலைமைப் பீடமே ஆட்டம் காணும் அளவுக்கு இலங்கைக் கொம்யூனிஸ்ட் கட்சிக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. கோட்டைக்குள்ளேயே குத்தும் வெட்டும் ஏற்பட்டுவிட்டது. இலங்கைக் கொம்யூனிஸ்டுகள் ஒழுங்கு செய்த ஆசிய-ஆபிரிக்க ஒற்றுமைக் குழுப் பொருளாதார மகாநாட்டுக்கு இந்தியக் கொம்யூனிஸ்ட் கட்சியினர் ஆதரவு கொடுக்க மறுத்ததும்பிளவு மேலும் வலுவடைகிறதாம். கொம்யூனிஸ்ட் கோட்டையே சரிந்து விடுமோ என்று கருதவேண்டியுள்ளது.**

மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் பத்தியில் இயங்கும் இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கத்துள் பெரும் பிளவு ஏற்பட்டுள்ளது. இந்தியாவுக் கெதிராக ஆக்கிரமிப்பு நடத்தும் சீனாவுக்கு ஆதரவு காட்டுமுகமாக இலங்கை தொழிற் சங்க சம்மேளனம் வெளியிட்ட துண்டுப் பிரசுரமே இந்தப்பிளவு உண்டாவதற்குக் காரணமாகும் எனத் தெரிகிறது.

இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தின் ஓர் அங்கமாக இருக்கும் தோட்டத் தொழிலாளர்கள் சங்க உறுப்பினர்கள் பெருவாரியினர் இந்திய வம்சா வளியினர், இந்திய—சீன எல்லைப் போர் சம்பந்தமாக தொழிற்சங்க சம்மேளனத் தலைவர்களின் தீர்க்கமான முடிவு என்ன? என்று இவ்வுறுப்பினர்கள் தங்கள் தலைவர்களைக் கேட்டுள்ளனர். இதே சமயத்தில் தான் தொழிற் சங்க சம்மேளனத்தின் சீனாவை ஆதரிக்கும் துண்டுப் பிரசுரமும் வெளியாகியது. துண்டுப் பிரசுரத்தைக் கண்ணுற்ற தொழிலாளர்கள் மத்தியில் உருவாகிய அபிப்பிராய பேதமே பெரிய வெடிப்பை ஏற்படுத்தியிருக்கிறதாம்.

### தலைமைக்கும் எதிர்ப்பு!

இந்திய — சீன எல்லைப் போராட்டம் சம்பந்தமாக இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சி கடைப்பிடிக்கும் கொள்கை பற்றி, கட்சியின் முக்கிய உறுப்பினர்களுக்குள் பலத்த அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டுள்ளன. இதன் காரணமாக கட்சியையும், தலைமைப் பீடத்தையும் பல உறுப்பினர்கள் பகிரங்கமாகவே தாக்க முற்பட்டுள்ளனர். இலங்கைக் கொம்யூனிஸ்ட் கட்சி நடத்தவிருந்த ஆசிய ஆபிரிக்க ஒற்றுமைக் குழுப் பொருளாதார மகாநாட்டில் கலந்து கொள்ள இந்தியக் கொம்யூனிஸ்டுகள் மறுத்ததும், மேற்படி அபிப்பிராய பேதங்கள் தீவிரமடைந்து விட்டனவாம்.


### சுவரொட்டிகள்

இலங்கையின் பல பாகங்களிலும் புது வகையான சுவரொட்டிகள் இப்பொழுது காணப்படுகின்றன. ஆங்கிலத்தில் அச்சிடப்பட்ட அச்சுவரொட்டிகளில் கொம்யூனிசச் சின்னமான அரிவாளும், சுத்தியும் பொறித்துக் காணப்படுகிறது.

"கியூபா கியூபாவினருக்கே! இந்தியா சீனருக்கே!" என்று அச்சுவரொட்டிகளில் சுலோகங்கள் காணப்படுகின்றன.

## முத்தமிழ் விழா

நீண்ட காலமாக மலையக தொழிலாளர் நலனுக்காக உழைத்தவரும், பகுத்தறிவு வாதியும், சிறந்த பேச்சாளருமான திரு. டி. எம். பீர்முகமது தமிழகம் செல்லவிருப்பதை முன்னிட்டு, அவரைச் சிறந்த முறையில் கௌரவிப்பதற்கு நிதி சேர்க்கும் முகமாக வரும் 25-11-62 அன்று கொழும்பு விவேகானந்தா மண்டபத்தில் ஒரு முத்தமிழ் விழா ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.



## மட்டக்களப்பு தீர்மானத்துக்கு நேருஜி நன்றி

'சீன ஆக்கிரமிப்பால் அல்லலுறும் இந்தியாவுக்கு, மட்டக்களப்பு வாழ் தமிழ் பேசும் மக்கள் தங்கள் பரிபூரண அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றனர்' என்று கடந்த 2-11-62ல் மட்டக்களப்பு மைதானத்தில் நடைபெற்ற சீன ஆக்கிரமிப்பு எதிர்ப்புக் கூட்டத்தில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப் பட்டது. அத் தீர்மானத்தை தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகமும், மட்டக்களப்பு பிரதிநிதி திரு. செ. இராசதுரையும் கையெழுத்திட்டு தந்தி மூலம் பாரதப் பிரதமருக்கு அனுப்பி வைத்தனர்.

மேற்படி தீர்மானத்தை ஆழ்ந்து கவனித்ததாகவும், அதற்காக மனமார்ந்த நன்றி தெரிவிப்பதாகவும் பிரதமர் நேருஜி, திரு. செல்வநாயகத்துக்கு 12-11-62 தேதியிட்டு ஒரு கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

## இந்தியாவில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கச் செய்தி கிடைத்ததின் பேரிலேயே மேற்கண்ட திடீர் நடவடிக்கையை எடுத்ததாம். இந்திய கொம்யூனிஸ்ட் கட்சி சீனர்களின் ஐந்தாம் படை ஸ்தாபனமாக இயங்குவதால் அது விரைவில் தடை செய்யப்படலாம் என்பது அரசியல் அவதானிகள் கருத்து.

இந்தியக் கொம்யூனிஸ்டு ஒவ்வொருவனும் சீனக் கொம்யூனிஸ்டுகளின் ஒற்றன் எனபது இந்திய மக்களுக்கு நன்றாகத் தெரியும்.

இந்தியக் கொம்யூனிஸ்டுகளுக்கும் இலங்கை கொம்யூனிஸ்டுகளுக்கும் இடையே நெருங்கிய தொடர்புகள் உண்டு. இந்திய பாதுகாப்பு சம்பந்தப்பட்ட அநேக இரகசியங்கள் இலங்கை வழியாகச் சீனாவுக்கு அனுப்பப்படுகிறதென்று கூறப்படுகிறது. இதில் ஆச்சரியம் எதுவுமில்லை. எந்தச் செய்தியையும் இங்கிருந்து தாராளமாகத் தடையின்றி சீனாவுக்கு அனுப்பலாம். அதற்குத் தடங்கல் எதுவும் தற்போது இங்கில்லை.

அடிக்கடி இந்தியக் கொம்யூனிஸ்டுகள் சிலர் இலங்கைக்கு வந்து போகிறார்களாம். அவர்கள் மூலமும் இதர வழிகளிலும், இந்தியக் கொம்யூனிஸ்டுகள் திரட்டி அனுப்பும் இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த தகவல் இலங்கையிலிருந்து சீனாவுக்கு அனுப்பப்படுகிறதாம்.

### ஐந்தாம் படைத் தளம்

இலங்கையில் சீனருக்கு ஓர் ஐந்தாம் படை மத்தியக் காரியாலயமொன்று இருப்பதாகவும், இலங்கைக் கொம்யூனிஸ்டுகளே அந்தக் காரியாலயத்தை இயக்குவதாகவும் நம்பகமான செய்தி கிடைத்துள்ளது.

ஒரு தமிழர் பீகிங் வானொலியில் இந்தியாவுக்கு விரோதமாக தமிழில் பிரசாரம் செய்வதற்காகவே இங்கிருந்து அனுப்பப்பட்டுள்ளார்.

இலங்கையில் சீனக் கொம்யூனிஸ்டுகளின் ஐந்தாம் படைத் தளமொன்று இயங்க அனுமதிப்பதால் எதிர்காலத்தில் இலங்கை— இந்திய நல்லுறவு பாதிக்கப்படலாமென்று விஷயமறிந்த வட்டாரங்களில் கூறப்படுகிறது.


கண் நிறைந்த காட்சிக்கும்!!
எண்ணிறந்த நாட் சேவைக்கும்!!

லதா!!!



லதா அச்சடி கிளேஸ்ட் கொட்டன்!!
கவர்ச்சி தரும் நிரந்தர பல அழகிய நிறங்களிலும்;
புகழ்ச்சி பெறும் புதிய டிசைன்களிலும்;
உயர்ச்சி மிகு உறுதிப்பாட்டுடனும் உருவானது.

லதா போப்லின்!!
ஆடவர் தம் சேட் முதலியவற்றிற்கேற்ற அற்புத நிறங்களில் நீண்ட நாட் சேவை புரியும்படி தயாரிக்கப்பட்டது.




எலைட் சுப்பர்லோன்
வியாபாரிகள் எல்லோரிடமும் கிடைக்கும்

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாலை நாலு நாற்பத்தைந்திலிருந்து ஐந்து மணி வரை இலங்கை வானொலி வர்த்தக ஒலிபரப்பில் குண்டன்மால்ஸ் ஸ்தாபனத்தார் அளிக்கும் "லண்டன் கந்தையா" நிகழ்ச்சியைக் கேட்டு மகிழுங்கள்.

குண்டன்மால்ஸ் லிமிடெட்,
மொத்த விற்பனைப் பகுதி: 26, கெய்ஸர் வீதி, கொழும்பு. சில்லறை விற்பனைப் பகுதி: 110 &114, மெயின் வீதி. —Mylads/KL.642/62—


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பைத்தியம்

**நீதிபதி உட்பட எல்லோரும் பைத்தியம் என்ருர்கள்... ஆனல் விஷயம் தெரிந்தவர் எல்லோரையும் பைத்தியக்காரராக்கிவிட்டார்!**

நீ மன்றம்... கிராம நீதி மன்றந்தான்... என்ருலும், விசித்திரமான மனிதர்களை மாசமொரு தடவை 'அது' வரவழைக்கத் தவறுவதில்லை.

அது நிறுவப்பட்டிருந்த இடம், மிகமிக அமைதியான இடம். சுமார் மூன்று நான்கு மைல் தூரத்திற்கு குடிமனைகளோ, கடைகளோ இல்லாத மனித சஞ்சார மற்ற அந்தரமான இடம். மாதத்திலொரேயொரு நாள் மட்டுந்தான் மனிதர்கள் கூடுவார்கள்.

சில காலங்களில் வழிப்பறிக் கொள்ளைக்காரர்களுக்கு தங்குமிடமாகவும் அது உபயோகப்படுவதாக கிராமங்களில் பேசிக் கொள்வார்கள்.

அன்று... கோர்ட்டு முறையாகவே வழக்காளிகளென்றும், எதிரிகளென்றும், சாட்சிகளென்றும் சனங்கள் கூடிவிட்டனர். நீதிபதி வருவதற்கு நேரமிருந்தது... அவர் சுமார் இருபது மைல் தூரத்திலிருந்து வரவேண்டும்.

கட்டைக் காற்சட்டை போட்ட கிராமக் கோர்ட்டுக் காவற்காரனுக்குச் சிலர் காட்டிய 'மரியாதை' அடிமை மனப்பான்மை விளங்கவில்லை. நாடு சுதந்திரம் பெறவில்லையென்பதைத் துலம்பரமாகச் சொல்லிற்று.

கோழி மேய்க்கும் வேலையெண்டாலும் கோறணமேந்து வேலையை புருட லட்சணமாக— பிறவிப் பயனக மதித்துப் போற்றிய காலந்தானே, அந்தக் காலம்.

நீதிபதி வரும் நேரம் நெருங்க நெருங்க—

வழக்குகளை, விசாரணை முறைகளை, நீதிபதியின் கர்ண கடூரங்களை, இரக்கத்தை எண்ணி யெண்ணிச் சிலர் சிரித்தார்கள். சிலர் அழுதார்கள். மெய்ப்பாடுகளல்ல, மானஸீகமாக.

அன்று தான் முதன் முதல் கோடேறச் சென்றவர்களுக்கு, கோர்ட்டில் எப்படியெப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று பயிற்சியளித்துக் கொண்டிருந்தனர்.

வெற்றிலைப் பிரியர்கள் அவசர அவசரமாக வெற்றிலை போடத்தொடங்கினர்கள்...

கோடு ஆரம்பிப்பதற்கிடையில் வெற்றிலையைச் சப்பிக் குதப்பிச் சுவைத்துதுப்பி, வாயைக் கழுவித் துப்புரவாய் நிற்கவேண்டும். அந்த நீதவானுக்கு வெற்றிலை போடுகிறவர்களைக் கட்டோடு பிடிக்காது... வெற்றிலை போட்டபடியே கோர்ட்டுக்குள் சென்ற பலருக்கு வெற்றிலை போட்ட குற்றத்திற்காக— வெள்ளைக்காரனின் அடியொற்றி — அவர் தெண்டம் விதித்திருக்கிருர்.

வெற்றிலைச் சுகியர்கள் யாவரும், தாம்பூல இன்பத்தை சில நிமிட நேரம் மனக்கட்டுப்பாட்டுடன் அனுபவித்து விட்டு வாய்களைக் கழுவித் துப்புரவாக்கி கொண்டனர்.

இப் பூமியின் கண் பிறந்த காலத்துக்கு அன்று தான் சின்னப்பிள்ளை முதன் முதல் கோடேறப் போகிருள்.

\+ + +

சின்னப்பிள்ளை சுமார் முப்பத்திரண்டு வயசு மதிப்பிடக் கூடிய கிராமப்பெண், ஐந்து வருட இல்லற வாழ்வுடன் கணவனையிழந்து கஷ்டப்படும் ஒரு கைம்பெண். சின்னப்பிள்ளையின் ஒரேயொரு மகன் பொன்னனும் பத்து வயசு நிரம்பிய மைனர்ப்பிள்ளை.

இன்னும் இரண்டு மூன்று வருடம் சென்ருல், பொன்னன் நிச்சயமாகச் சின்னப்பிள்ளையின் 'பிச்சைப் பெட்டி'யைப் பறித்தெறிந்து விடுவான் தான்!

ஆனல் தற்பொழுது ?

சின்னப்பிள்ளை மறுமணம் செய்யவும் விரும்பவில்லை...

மனதிலே உறுதியும் வாக்கினிலே நேர்மையும் நினைவுகள் நல்லனவாயுமுள்ள சின்னப்பிள்ளை, வாழ்க்கைப் படகை உலக சமுத்திரத்திலே செலுத்தத்தான் செய்தாள்.

கூலிக்குக் குற்றி, களை பிடுங்கி, நாற்று நட்டு, அருவி வெட்டி, ஊப்பட்டி கூட்டி, அப்பம் சுட்டு இவ்வாருக...

சின்னப்பிள்ளைக்கு ஒரு ஏக்கர் சொந்தக் காணியுண்டு. அந்த வயலை அவள் வருடா வருடம் குத்தகைக்குக் கொடுத்து, கிடைத்ததைப் பெற்றுத் திருப்தியடைந்து கொள்வாள்.

அந்தக் கமத்திற்கு நீர் பாய்ச்சப்படும் குளமோ

**எஸ். எல் சவுந்தரநாயகம்**

போதிய தண்ணீர் கொள்ள முடியாத பொட்டற் குளம்.

இரண்டு வருடங்களாக சிரான மழை பெய்யவில்லை.



எனவே, காணியின் மூலமாகச் சின்னப்பிள்ளைக்கு வரும்படியெதுவுங் கிட்டவில்லை...

வருமானம் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும், காணிக்குரிய குளக்கடமைகளை வருடாவருடம் செய்து தானகவேண்டும். ஆமாம்.

வன்னிநாட்டிலே அரசாங்கத்தினுல் வரி அறவிடப்படும் குளங்கள் ஒரு சில தான். 'வரி' கட்டும் குளங்களுக்குரிய காணிக்காரர்கள் வரிப்பணம் செலுத்திஞல் போதும். குளத்துக்கு வேலையெதுவுஞ் செய்யத் தேவையில்லை.

வரி அறவிடப்படாத குளங்கள் அனந்தமுண்டு. வரி அறவிடப்படாத குளங்களிலிருந்து நீர் பாய்ச்சி வேளாண்மை செய்யும் கமக்காரர்கள், வருடந்தோறும் குளவேலை செய்ய வேண்டும். வருடத்திற்கொரு தடவை மண் வேலையும் வருடம் இருமுறை மந்து வேலையும் செய்ய வேண்டும்.

ஒவ்வொரு கமக்காரரும் தத்தம் காணிக்கேற்றளவு வருடா வருடம் மண் வேலையும், மந்து வேலையும் கட்டாயமாகச் செய்யவேண்டும்.

இது சட்டத்தின் ஒழுங்கு முறை...

பெரும்பாலான கமக்காரர்களும், கம விதானையும், குள உத்தியோகத்தரும் கூட்டுச் சேர்ந்து சிலபோது சட்டத்திற்கு 'டிமிக்கி' கொடுத்து விடுவதுமுண்டு.

உரிய காலத்திலே, ஒவ்வொரு கமக்காரரும் ஒரு 'புஷல்' காணிக்கு இவ்வளவு காசென்று சேர்த்துக் கம விதானையர் மூலமாக குள உத்தியோகத்தரிடம் கொடுத்து விடுவார்கள்.

குள உத்தியோகத்தர் உரிய காலத்தில் 'மண்வேலை, மந்து வேலையனைத்தும், செய்து முடிக்கப்பட்டுவிட்டதென்று அரசாங்கத்துக்கு அறிவித்து விடுவார்.

பல கமக்காரர்கள், சில போது க்வலை செய்யாமலும் குள உத்தியோகத்தரைக் கவனிக்காமலும் தற்செயலாக மறந்து விடுவார்கள்.

கமக்காரர்கள் மறந்தாலும், குளஉத்தியோகத்தர் ஒருபோதும் மறக்கவேமாட்டார். "வேலை செய்யப்படவில்லை"யென்று வழக்குப் போட்டு விடுவார், சட்டப் படி.

கமக்காரர்கள் விழித்தெழுந்து, வழக்குத் தவணைக்கு முன்பு குளஉத்தியோகத்தரைச் சந்திப்பார்கள். சந்திப்பின் பலன்......?

வழக்கு விசாரணையின் பொழுது, "தவணைக்குப் பிறகுதான் வேலைசெய்யப்பட்டது" என்று, குளஉத்தியோகத்தர் நெஞ்சார (பொய்) கூறுவார். நீதிபதி தவணைதப்பி வேலைசெய்த குற்றத்திற்காக ஒவ்வொருவருக்குப் தலா ஐந்து ரூபா அபராதம் விதிப்பார். விஷயம் தீர்ந்து போகும்.

சின்னப்பிள்ளை அந்த வருடத்திற்குரிய வருடாந்த மண்வேலை செய்யவில்லை. மண்வேலைக்குரிய பணத்தைக் குளஉத்தியோகத்தரிடம் கட்டவுமில்லை. மற்றைய கமக்காரர்களுடன் சேர்ந்து சட்டத்துக்குப் புறம்பான வழியிற் போய்க் குளஉத்தியோகத்தரைச் சந்திக்கவும் இல்லை.

எனவே—

"மண்வேலை செய்யவில்லை" யென்று குளஉத்தியோகத்தர் சின்னப்பிள்ளை மீது வழக்குத்தொடர்ந்தார். அப்படிச் செய்தது நியாயமுந்தானே!

வழக்கு விசாரணைத் தினத்திலன்ருே அல்லது அதற்கு முன்பாகவோ சின்னப்பிள்ளை குளஉத்தியோகத்தரைக் கண்டு கதைத்து ஒழுங்கு பண்ணவில்லை. எனவே, கூடுதலான தெண்டம் அடிபடப் போகுதே, அவள் பாவியின்ரை காணி ஏலத்தில் விற்கப்படப் போகுதேயென்று சிலர் அனுதாபப்பட்டார்கள்.

சரியாக ஒன்பது மணி...

நீதிபதி வந்து சேர்ந்தார். அவர் வழமைப்படி காரிலிருந்து இறங்கிச் சமாதான அறைக்கு இளைப்பாறச்சென்ருர்.

பரபரவென்று பலர் எழுந்து நின்று தோளிற் கிடந்த சால்வைகளையெடுத்துக் கக்கத்தில் வைத்தும் இடுப்பில் கட்டியும் மரியாதைச் செலுத்திஞர்கள்.

நேரம் 9-30 ஆகியது......

நீதிபதி அறைக்குள்ளிருந்து வெளிவந்து சிம்மாசனத்தில் அமர்ந்தார்.

முதலில் குளவழக்குகள் தான் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

முதலாவது வழக்கு—

"தேவர்புரம் கிழக்குப் பகுதி வீ. சீ. ஒ.?"

"வாசுகியூர் கந்தசாமி கைம்பெண் சின்னப்பிள்ளை?"— பெயர்கள் கூப்பிடப்பட்டன...

சின்னப்பிள்ளை இலேசான நடுக்கத்துடன் போய் நீதிபதியின் முன்பு நின்ருள்...

"சின்னப்பிள்ளை! நீ வாசுகியூர்க் குளத்திற்கு வருடாந்த மண்வேலை செய்யவில்லை. குற்றவாளியா—சுற்றவாளியா?"

இது நீதிபதியின் கேள்வி.

"ஐயா நானெரு 'அறுதலி'யையா. எனக்குப் புரியவில்லை. என்ரை புள்ளையும் சின்னப்பயல். வேலைவெட்டி செய்ய ஏலாதவன். ரெண்டு வரியமாய்க் காணியும் குத்தகைக்குக் குடுக்க இல்லை. எனக்கு மண்வெட்ட ஏலாது. காசுமில்லைக் குடுத்து வேலை செய்விக்க...... மத்தவங்க எல்லாம் வீ. சீ. ஓ. ஐயாக்குத் தலைக்கு அஞ்சஞ்சு ரூவாக்குடுத்து ஒழுங்கு பண்ணிஞங்க...... எனக்கு அதுக்குங் காசில்லையையா...... இதை எடுத்துக்கிண்டு வழக்கைத்தள்ளி விடுங்க ஐயா..."

சின்னப்பிள்ளை இன்னும் தனது முறைப்பாட்டை முடிக்கிறதாயில்லை. நீதிபதி இடையிலே தடுத்து நிறுத்திஞர், பின் வருமாறு:-

"ஏய் என்ன உளறுகிருய்? கேட்டதற்கு மட்டும் பதில் சொல்லு! இதென்ன கையிலே வைத்திருக்கிருய்? நீ குற்றவாளியா—சுற்றவாளியா?"

"ஐயா அப்படிச்சொல்லாதேயுங்க ஐயா! இது ஒரு போத்தல் தேனும் நாலு தோடங்காயும் ஐயா! அவர் நல்ல மனுசன். இதைக் கொண்டைக் குடுத்து உன்ரை 'தம்மானி'யைச் சொல்லு. வழக்கைத்தள்ளி விடுவார் எண்டு ஆக்கள் சொன்ஞங்கையா. அதுதான் கொண்டந்த நான். இதை எடுத்துக்கிண்டு வழக்கைத் தள்ளி விடுங்க ஐயா......"

சின்னப்பிள்ளை அழுதழுது கெஞ்சிஞள்.

நீதிபதியுட்பட எல்லோரும் 'கொல்'லென்று சிரித்தார்கள்.

ஒவ்வொரு கிராமத்தவர்களிலுமுள்ள இவ்விரண்டு பிரமுகர்களாக பத்துப்பன்னிரண்டுபேர் 'ஜூரர்'களாக அந்த நீதிமன்றத்தில் உட்கார்ந்திருப்பது வழக்கம்.

நீதிபதி ஜூரர்களைப் பார்த்து, "இதென்ன இந்த மனுஷியின் வேலையும், கதையும்?" என்று விசாரித்தார்.

சின்னப்பிள்ளையின் கிராமத்து ஜூரர்களிருவரும் எழுந்து நின்றனர்.

(13-ம் பக்கம் பார்க்க



# ரிஷி
## அஜமாமிச லேகியம்

ஆட்டிறைச்சியின் சுத்தமான சத்துக்களோடு பல விலை உயர்ந்த மூலிகைகளையும் சேர்த்து தயாரிக்கப்பட்ட சிறந்த லேகியம். இதை பாவித்து வந்தால் தேக புஷ்டியும், வீரியமும், திடகாத்திரமும், கெம்பீர தோற்றமும் உண்டாகி சரீரத்தில் உள்ள சகல வியாதிகளையும் சூரியனைக் கண்ட பனிபோல மறைத்து விடும். ஆண், பெண் இருபாலரும் சாப்பிட உகந்தது. இல்லற வாழ்க்கைக்கு இன்றியமையாதது. பத்தியமில்லை.

விலை 1 ருத்தல் ரூபா 35/00

" ½ " ரூபா 22/50

[தபாற் செலவு 95 சதம்]

ஆயுர்வேத டாக்டர்:

**T. H. மதுரநாயகம் வைத்தியராஜ்**

**ஞானசுந்தர வைத்தியசாலை**

187, செட்டியார் தெரு, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘தடுப்புக் காவலில் நாம்’ 17.



## அன்பு மகள் அன்பரசிக்கு,

### புதுமை லோலன்

தடுப்புக் காவல் நிலையம்,
பனாகொடை,
ஹோமகம.
23—5—1961

மகளே அன்பரசி!

நேற்றைய மடலில், தடுப்புக் காவல் குடும்பத்தவர்களில் அறியத் தாராதவர்களைப் பற்றி அறியத் தருவேன் என எழுதினேனல்லவா? அவர்களைப் பற்றியே இன்று எழுதப் போகின்றேன். ஒருவரா இருவரா? எழுபத்தினன்கு பேரல்லவா? அதனால் ஒவ்வொருவரையும் பற்றி ஒரே மடலில் எப்படி எழுத முடியும்?

**க. க. வைத்திலிங்கம்**

“தலையைக் கொடுத்துத் தமிழைக் காக்க முன் வருக தமிழன்னையின் தனயனே நீ நீடூழி வாழிய...” என எழுதிக் கைச்சாத்தையிட்டார்கள் திரு. க. க. வைத்திலிங்கம் அவர்கள். இவர் மன்னாரைச் சேர்ந்த மாத் தமிழ் வீரர்; பொதுநலத் தொண்டர்; மன்னார் அறப்போருக்கு உதவிக்கரமாக அமைந்தவர்; உணர்ச்சி மிக்க பெரியார்.

**வே. கைலாயபிள்ளை**

“எல்லோருமின்புற்றிருக்க நினைப்பதுவேயல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே...” எனத் திரு. வே. கைலாயபிள்ளை அவர்கள் எழுதிக் கைச்சாத்திட்டார்கள். மன்னாரைச் சேர்ந்த இலுப்பைக் கடவையில் முதலியார் கமத்தைத் தனது சொந்த ஊராகக் கொண்டவர். முதலியார் கமம், திருக்கேதீஸ்வரத்திலிருந்து செல்ல வேண்டியது. இவரும் இன்னுமொரு குடும்பமுமே அக்கிராமச் சொந்தக்காரர்கள். இவர் சட்டக்கல்லூரி மாணவர். சளசளவெனப் பேசாது அமைதியாகவே இருப்பார். மாலையில் கந்தையா வைத்தியநாதனுடன் சேர்ந்து யோகாசனம் செய்கின்றார். பகலெல்லாம் தனது சட்டக் கல்லூரிப் பரீட்சைக்கு ஆயத்தம் செய்கின்றார். தாடி வளர்க்கின்றார். செயல் வீரர் என்பது தெரிகின்றது. மன்னாரில் நமது கட்சிக்கு ஒரு தூண் போன்றவர்.

**கே. எஸ். ஏ. கபூர்**

“பிறந்துவிட்ட மனிதன் இறப்பது ஒரு முறை தான். அதை நம் இனத்தின் எழுச்சிக்குப் பயன்படும் வழியில் பயன் படுத்துவதே நாம் இனத்திற்குப் புரியும் சிறந்த பணி...” என எழுதிக் கையொப்பமிட்டார் ஜனாப். கே. எஸ். ஏ. கபூர் அவர்கள். இவர் மன்னாரிலுள்ள எருக்கலம்பிட்டியைச் சேர்ந்தவர். அடிக்கடி கொள்கையை உடை மாற்றுவது போல மாற்றி நம்பிக்கையை இழந்து வரும் இஸ்லாமியர் மத்தியில் இவர் ஒரு கொள்கைத் தங்கம். ‘தமிழ் எங்கள் மூச்சு— எமது தாய் மொழி தமிழே’ எனக் கூறிடும் கபூர் அவர்கள் தமிழரசுக் கட்சியில் நீங்காத பற்றுக்கொண்டவர். நல்ல பேச்சாளர். அத்துடன் எழுத்தாளருங்கூட. ஒவ்வொரு கணமும் கட்சி பற்றியே சிந்திக்குமிவர், நூல்கள் எழுதுவதிலேயே நேரத்தையெல்லாம் போக்குகின்றார். வரலாற்று உண்மை செறிய, நூல்கள் ஆக்கும் பணியில் ஈடுபட்டுள்ள இவர், தடுப்புக் காவல் முடிந்து வெளியேறியதும் இவற்றை அச்சிட உள்ளார். நல்லவர், திறமைசாலி.

**க. வைத்தியநாதன்**

கைச்சாத்தை பட்டுமிட்டார் சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள். இவரை அறியாத ஈழத்து மக்கள் இருக்கமுடியாது. ஆட்சி சக்கரத்தை உருட்டிய மூளைகளில் ஒன்று. இப்போது திருக்கேதீஸ்வரத்தில் யோகி போல மதம் வளர உதவும் இவர் ஓர் பக்திமான். தமிழறிஞர். மன்னார் அறப்போரின் போது, சத்தியாக்கிரக வீரருக்கு உணவு கொடுக்கும் பணியை மேற்கொண்ட இவரையும், ஆட்சியாளர் தடுப்புக் காவலில் இட்டுவிட்டனர். பகவத் கீதை, சிலப்பதிகாரம் என்பவற்றை படிப்பதும், மற்றையோருக்கு உரைப்பதும், யோகாசனம் செய்வதும், ஆகப் பொழுதெல்லாம் நன்றாகக் கழிக்குமிவர், நேரத்தையெல்லாம் பொன் போலக் கழித்து எமக்கு வழி காட்டுகின்றார். பழைய காலம், தன் அரசாங்க உத்தியோகம், அப்போதைய மந்திரிமார், முதலான கதைகளைக் கூறும் போது கேட்க ஆச்சரியமாயிருக்கும். சிறந்த பண்பாளர் என்பதை அவர் வதனமே பேசாமல் பேசுகின்றதே.

**ச. சா. கோபாலரத்தினம்**

மட்டக்களப்பு மண்ணில் தமிழரசு விதையைத் தூவி வளர்த்த பெரியார்களுள் ஒருவராகிய திரு. ச. சா. கோபாலரத்தினம் அவர்கள் கைச்சாத்தை மட்டுமிட்டார்கள். முதிய நேரம், உணவுகளில் கூடிய கவனமெடுக்கவேண்டிய வயது எனினும் தடுப்புக் காவலில் வாழ வேண்டிய சூழ்நிலை. தன்பாடும் தானுமாக அமைதியுடன் வாழ்ந்து வருகின்றார்.

**ம. சி. பொன்னுக்கோன்**

“அறப்போர் தொடுத்து அடைபட்டிருக்கும் மறத் தமிழ் வீரரே மனம் சோர்வுறுதிர்” என எழுதிக் கைச்சாத்தையுமிட்டார் திரு. ம. சி. பொன்னுக்கோன் அவர்கள். இவர் மன்னாரிலுள்ள நானாட்டான் மேற்குக் கிராமச் சங்கத் தலைவர். தோற்றம் போல அமைதியான போக்குக் கொண்டவர். அதிகம் வெளியே வராது தனது அறையிலேயே தங்கி வருகின்றார்.

**ச. கு. கணேசனுதன்**

“வாழ்க தமிழ் இனம்” என்றெழுதிக் கைச்சாத்திட்டார் திரு. ச. கு. கணேசனுதன் அவர்கள். மட்டக்களப்பைச் சேர்ந்த இவ்விளைஞர், “மாதங்களில் அவள் மார்கழி” என்ற கண்ணதாசனின் சினிமாப்பாட்டைப் பாடியபடியே மேன்மாடியெங்கும் திரிகின்றார். தாடியை வளர்க்கின்றார். மட்டக்களப்பு அறப்போரில் முக்கிய பங்கு கொண்டிருந்த அன்பரிவர்.

**சாம். பெ. த. தம்பிமுத்து**

“வாழ்க தமிழ் அரசு” என்றெழுதிக் கைச்சாத்திட்டார் திரு. சாம். பெ. த. தம்பிமுத்து அவர்கள் இவர் இளைஞர்; புது வழக்கறிஞர். மட்டக்களப்பில் கட்சித் தொண்டருள் குறிப்பிடக்கூடிய ஒருவர். இவரும் தாடி வளர்க்கிறார் என்ன செய்வது இவருக்கு அடர்த்தியாக வளருவதில்லையே! என்னுடன் கரம் ஆடி மகிழ்கின்றார். நூல்கள் படித்து நாட்களை ஓட்டுகின்றார்.

**கெ. வி. கிருஷ்ணக்குட்டி**

“மொழி, மதம், கலை, கலாச்சாரம் போன்ற மனித உரிமைகள் பெறு, சரணடும வர்க்கத்தை ஒழித்து, முயற்சியும் சுயநலமற்ற சேவையும்தான் ஒவ்வொருவரதும் கடமை. புரட்சி வணக்கம்”... என எழுதிக் கைச்சாத்திட்டார் திரு. கெ. வி கிருஷ்ணக்குட்டி அவர்கள். இவர் மட்டக்களப்பில் வாழும் கம்யூனிஸ்ட் நண்பர். நான் யாழ்ப்பாணத்தில் சில கம்யூனிஸ்ட் நண்பர்களுடன் நன்றாகப் பழகுபவன். ஒரு சிலரின் பழக்கத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டவன். தெருவெங்கும் ஆ......ஊ எனப் பிதற்றியபடி, முன் பின் முரணாக, ஒழுக்கமற்று வாழும் சிலரை எனக்குத் தெரியும். கொள்கை ஒரு பக்கமிருக்க மனித நெறிப்படிகூட சில கம்யூனிஸ்டுகளுக்கு நடக்கத் தெரியாது. இதைக் கம்யூனிஸ்ட் நண்பர்களே ஒப்புக் கொள்வர். மாதகல் கந்தசாமி, அளவெட்டி வ. பொன்னம்பலம் ஆகியோர் பண்புடன் தாம் நம்பும் கொள்கைக்காக ஊழியம் செய்யும் பண்பைக் கண்டிருக்கிறேன். அதே போன்ற தன்மையுடன், அமைதி நிலவ, பண்புடையாளராகக் கிருஷ்ணக்குட்டி காணப்படுகின்றார். ஏழ்மை துரத்தியடிக்கப்பட்டு, சுபீட்சம் நிலவப் பாடுபடும் இவருடன் யான் அடிக்கடி பேசுவது வழமையாகிவிட்டது. கிஞ்சிற்றும் வேறுபாடு காட்டாது—வேறு கட்சியாளன் என்பதற்காக, ஒத்துழைக்காது-நடக்கும் பண்பு இல்லவே இல்லை. கம்யூனிஸ்ட் உறுப்பினராயிருந்தும், மட்டக்களப்பு இரகசிய பொலிஸ் பகுதி ஆட்சியாளருக்குக் கொடுத்த அறிக்கையின் தப்பாலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளார். இதை இவர் ஆட்சியாளருக்கு அறிவித்துள்ளார். விரைவில் விடுதலையடைவார் என்றே நம்புகின்றேன். கண்ணியமுடன் நடந்து கொள்ளும் தன்மை கண்டு யான் எண்ணினேன்... யாழ்ப்பாணத்தில் தெருவெல்லாம் தமதுஎழுத்தைப் பற்றித் தம்பட்டமடிக்கும் அமைதியற்ற கம்யூனிஸ்ட் எழுத்தாளர், பண்பில்லாது நடக்கும் சில கம்யூனிஸ்ட் தோழர்கள், கிருஷ்ணக்குட்டியைப் பார்த்துப் படிக்க அதிகமுண்டு கம்யூனிஸ் கட்சிக்குக்கிடைத்த நல்ல தொண்டர் கிருஷ்ணக்குட்டி.

**மசூர் மவ்லானு**

“அன்பினால் ஆகாதொன்றில்லை—அன்பிலேல் செயற்கரிய காரியமெலாம்......” என எழுதிக் கைச்சாத்தையுமிட்டார் மசூர் மவ்லானு. கல்முனையைச் சேர்ந்த இவர் தற்போது கொழும்பில் வாழ்கின்றார். சட்டக் கல்லூரியில் படிக்கின்றார். ஈழத்து அரசியல் பேச்சாளருள் குறிப்பிடக்கூடிய இவரிடம், நிறையக் கேலியும், கிண்டலும் காணப்படும். எமது மேன்மாடியெங்கும் கலீரிடும் சிரிப்பையும், கடகடவென அங்குமிங்கும் துடிப்புடன் நடந்து திரியும் ஒலியையும் அடிக்கடி கேட்கின்றோம். கட்சியை வளர்த்த பேச்சாளருள் இவரும் ஒருவர். நகைச்சுவையும் உணர்ச்சியும் சேரப் பேசக்கூடிய திறன் கொண்டவர். இஸ்லாமியரிடையில் கொண்ட கொள்கை மாறாத இலட்சியப்பற்றுக் கொண்டவர். வேறு சில முஸ்லிம் தலைவர்களின் புரட்டுத்தனம் கண்டோ என்னமோ தன்னைக்கூடச் சந்தேகக்கண்ணுடன் நோக்குவதாகவும், இது ஒரு அநியாயம் என்றும் என்னிடம் கூறி வேதனைப்பட்டார். உண்மையையுணராது முடிபுக்கு வருவதை வெறுக்கும் நான் இவரது வருத்தத்தை எப்படி நீக்குவது என்று தெரியாது உள்ளேன். ஆனால் யார் என்ன சொன்னாலும் கட்சி மேல் நீங்காத பற்றும், அரசியலில் இஸ்லாமியரும் சமஷ்டிப் பாதை மூலமே உரிமை பெற்று வாழலாம் என்றும் நம்புமிவருக்குநல்ல எதிர்காலம் இருக்கின்றது.

**கோ. நடேசபிள்ளை**

“சொல்லின் செல்வத்தோழ, ஆராய்ந்து செயல்புரி. உயர்வு பெறுவாய்......” என்றெழுதிக் கைச்சாத்திட்டார் திரு. கோ. நடேசபிள்ளை அவர்கள். இவர் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் வவுனியாக் கிளைக் காரியதரிசி. வவுனியாச் சிவசிதம்பரத்தை ஆதரித்து நிற்பவர். தொழிலாளர் உரிமை காணத் துடிக்குமிவர் நன்கு சொற்பொழிவாற்றும் திறனும் கொண்டவர். நூல்கள் வாசிப்பதிலேயே தன்ஓய்வைப்போக்கி வருகின்றார். மனம் திறந்து என்னுடன் பேசுவார்; நண்பராகி விட்டார்.

(13-ம் பக்கம் பார்க்க)

# சூழ்ச்சி வலையில் வீழ்த்த....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

அப்பொழுது தமிழர் ஒருவருக்குத்தானும் இடமில்லை.

**தமிழ் ஒழிப்பு வேலைகள்**

இச்செயற்குழுவில் புதிதாக டாக்டர் நந்ததேவ விஜயசேகராவும் அவருடைய இலாகாவில் அவரின் கீழ் வேலை பார்க்கும் ஒருவரும் சேர்ந்துள்ளர். இம்மண்டலத்தின் துணைத் தலைவராகவும் திரு. விஜயசேகரா கடமையாற்றுகிறார். இவரின் கீழ் இயங்கும் உத்தியோக மொழி இலாகாவில் நடைபெறும் தமிழ் ஒழிப்பு வேலைகளைத்தமிழர் யாவரும் அறிவர்.

தமிழுக்கு எவ்வெச் சலுகைகளை அளிக்கலாம் என்று ஆராய முதலமைச்சர் ஐந்து உத்தியோகத்தர் கொண்ட குழு ஒன்றை அமைத்தமையை நாடு அறியும். இந்த குழுவில் திரு. விஜயசேகரா ஓர் அங்கத்தவராக இருந்தார் இக்குழுவினர் தமிழுக்குச்சில சலுகைகளை வழங்குமாறு சிபார்சு செய்தனர். இந்தச் சலுகைகள் சிங்களம் மட்டும்சட்டத்திற்குமாறுபாடானவை என்று திரு. விஜயசேகரா தமது பெரும் மறுப்பைத் தெரிவித்தார். இதன் பயனாகவோ, என்னவோ அச்சிபார்சுகள் மாண்டுபோயின.

திரு. விஜயசேகராவும் அவருடைய ‘எடுபிடி’ ஆளாகக் கருதப்படுபவருமே சாகித்திய மண்டலத்தின் செயற்குழுவில் செல்வாக்குடையவர்களாம். இவர்களின் ஆட்சியில் சாகித்திய மண்டலம் யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும் தமிழ் இலக்கிய விழா நடத்தப் போகின்றது. இந்த விழா, தமிழ் ஒழிப்பு விழாவாக நடந்தாலும் சந்தேகப்படுவதற்கு இடமில்லை.

சாகித்திய மண்டலத்தில் உள்ள தமிழ் ஒழிப்பு வீரர்களைப் பெருமைப்படுத்தவும் அவர்களுக்கு நன்றிக் கடன் செலுத்தவும் உத்தியோக மொழி இலாகாவிலுள்ள, சாயம் போன, சில துரோகத் தமிழர்களுக்கு இவ்விழா வாய்ப்பளிப்பதால் மட்டக்களப்பிலே தலைகாட்டிச் சிலரை மயக்கிய பின்னர், தங்கள் உறவினரையும் சேர்த்து யாழ்ப்பாணத்தில் இந்த இலக்கிய விழாவை நடத்த இவர்கள் இரவு பகலாக முயல்கின்றனர். இது தமிழ் பேசும் மக்கள் பரம்பரை, பரம்பரையாக வசிக்கும் வடக்கு கிழக்குப் பகுதிகளில் சிங்கள ஆதிக்கத்தை மறைமுகமாகப் புகுத்தும் கைங்கரியத்துக்கு அத்திவாரமாகும்.

எனவே இச் சூழ்ச்சித்திட்டத்தை முறியடித்து, இலக்கிய விழா நடவாமல் தடை செய்தல் தமிழ் பேசும் மக்கள் ஒவ்வொருவரதும் கடமையாகும். தமிழை ஒழிக்கும் அரசாங்கத்தின் அமைச்சர் யாழ்ப்பாணம் வந்து இலக்கிய விழாவிற் பங்கு பற்ற வாய்ப்புக் கொடுக்காதீர்கள்! இந்தச் சூழ்ச்சித்திட்டத்தை உருவாக்கித் தமிழ் பேசும் மக்களை ஏமாற்ற முனைந்த தமிழ்த் துரோகிகளினதும், சிங்கள தீவிரவாதிகளினதும் சூழ்ச்சிகளை அம்பலப்படுத்துங்கள்! தமிழினத்தின் மானத்தைக் காப்பாற்றுங்கள்! தமிழ்த் துரோகம் வதைப்பவர்களுக்குப் பாடம் படிப்பியுங்கள்!


# ஆனந்தா லேகியம்

## இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள்தோன்றும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, ணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் “ஆனந்தா தைலத்தை”த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு

தயாரிப்பாளர்:

**ஆனந்தா வைத்தியசாலை,**

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## தளபதி மாருட்டம்

இந்திய போர்க் கப்பல்களில் ஒன்ருன "விக்ராந்த்" என்ற கப்பல் அண்மையில் சென்னை துறைமுகத்துக்கு வந்திருந்தது. அக் கப்பலின் தளபதிக்கும், உத்தியோகத்தர்களுக்கும் விருந்துபசாரம் ஒன்று வைக்க டைரக்டர் ஸ்ரீதர் ஏற்பாடு செய்திருந்தார்.

குறிப்பிட்ட நேரத்துக்கு ஒரு பெரிய கார், விருந்துபசாரம் நடைபெறவிருந்த விஜயா கார்டனில் வந்து நின்றது. கம்பீரமான உடை அணிந்த ஒருவர் காரை விட்டு இறங்கினுர். தாங்கள் எதிர்பார்த்திருந்த தளபதி அவர் தான் என்று எண்ணியதனுல், தளபதிக்களிக்க வேண்டிய சகல மரியாதைகளும் அவருக்கு அளிக்கப்பட்டன. மலர் மாலைகள் சூட்டப்பட்டன. பூச்செண்டுகள் வழங்கப்பட்டன. வந்த பிரமுகரும் தனக்குக் கிடைத்த வரவேற்பை சிறப்பாக ஏற்ருர். கப்டல் தளபதியை இதற்கு முன்னர் பார்த்தவர்கள் எவரும் அங்கு இல்லாததனுல், இம்மரியாதைகள் யாவும் வேறு ஒருவருக்குக் கிடைத்து விட்டதைப் பின்னர்தான் உணர்ந்தனர். உண்மையான தளபதி சற்றுத் தாமதித்துத்தான் அங்கு வந்தார். ஏற்கனவே வந்திருந்த கப்பல் சிப்பந்திகள் பிறகு வந்திருந்த உண்மைத் தளபதிக்கு எழுந்து மரியாதை செய்தமையினுலேயே ஸ்ரீதரும் மற்றவர்களும் உண்மை உணர்ந்தனர்.

பட விமர்சனம்

# அழகு ராணியும் திருடர்க்கரசனும்

—0—

## (ரூப் கி ராணி-சோரன் கா ராஜா)

ரூபா—தன் நடன அரங்கேற்றத்தை ஆண்டவன் சந்நிதானத்தில் நடத்த தாயாருடன் செல்லும் அழகி.

சாகன்—தன் மகனின் ஊன அங்கத்தை நிவர்த்தி செய்த ஆண்டவனுக்கு செல்வந்தர் ஒருவர் கொண்டு செல்லும் விலை மதிப்பற்ற இரத்தினத்தை அபகரிக்க ஏவிவிடப்பட்ட கொள்ளைக்காரன்.

சாது—பால்ய விதவைகளுக்கு கடைத்தேறும் மார்க்கம் தேடி, விதவைகளுடன் புறப்பட்ட துறவி.

எழுத்தாளன்— தன்னுடைய அடுத்த கதைக்கு உரிய தகவல்களைச் சேகரிக்கப் புறப்பட்ட ஒரு புரட்சியாளன்.

சமீந்தார்— குடிவெறியால் குடும்பத்தை உதறி மனைவியை மடியவிட்டு, மது அரக்கனைப் பழி தீர்க்கப் புறப்பட்ட புகழ் விரும்பி.

இது போன்ற உலக மேடையில் நாடகமாட வந்த பல பாத்திரங்களையும் ஒரே நீராவிப் படகில் மோத விட்டு வேடிக்கைப் பார்க்கிருர் கதாசிரியர் சுரித்கார்.

அழகு ராணியான ரூபா பல கட்டுப்பாடுகளைக் கடந்து, துன்பப் புயலையும் மீறி திருடர்களுக்கு அரசனைப் போல் விளங்கும் சாகனை அடைகிருள். நடன

### "தியாக மலர்"

மாணவர் ஐக்கிய மன்றத்தார் தங்களது மூன்றாவது தயாரிப்பான நாடகத்திற்கு "தியாக மலர்" என்று பெயரிட்டிருக்கிருர்கள். இந் நாடகம் யாழ்ப்பாணம் பண்ணையூரில் பெரும்பாலும் டிசம்பரில் அல்லது ஜனவரித் தொடக்கத்தில் அரங்கேற்றப் படுமென எதிர்பார்க்கப்படுகிறது. உயிரிளங்குமரனது வசனம் கதைக்கு உயிரூட்டுகின்றது. மணி மாறதாஸ் இந்நாடகத்தின் இயக்குநராவார்.

அழகி ரூபாவாக வஹிதா ரஹ்மானும், திருடன் சாகனுக தேவ்-ஆனந்தும் தோன்றி அபாரமாக நடித்துள்ளனர். பரத நாட்டியத்தை நன்கு பயின்றவரான வஹிதா ரஹ்மான் பரவசமூட்டக் கூடிய நடனம் ஆடியுள்ளார். வட நாட்டு இசை இரட்டையர்களான சங்கர்-ஜெய்கிஷனின் இசையும், லதா மங்கேஷ்கார், தலாத் முகம்மது போன்ருரின் தொனிகளும் செவிக்கின்ப மூட்டுகின்றன.

தரமான ஒளிப்பதிவும், வெளிப்புறக் காட்சிகளும் சிறப்பாக விருக்கின்றன.

படகுத் துறையில் ஆரம்பித்த கதை படகிலே தொடர்ந்து படகிலேயே சுமுகமாக முடிவடைகிறது.

'கெடுவான் கேடு நினைப்பான்' என்ற முது மொழிக்கும் படத்தில் முக்கிய இடம் கொடுக்கப்பட்டுள்ளது. நொண்டியான திருடனின் முடிவுதான் இதற்கொரு எடுத்துக்காட்டு. கொழும்பு சென்ட்ரலில் நடைபெறும் இப்படம் சிறப்பான அம்சங்களுடன் நகரும் சுவையான காவியம்.

—நாதன்

நாடக விமர்சனம்:

# புலித்தேவன்

யாழ்ப்பாணம் மனோகரா படமாளிகையில், யாழ் திருக்குறள் நாடக மன்றத்தினரால் அண்மையில் 'புலித்தேவன்' அரங்கேற்றப்பட்டது. ஆயுதசாலையிலே துருப்பிடித்துக் கிடக்கும் ஆயுதங்கள்போல், நல்ல திறமை வாய்ந்த பல நடிகர்கள் நம்மிடையே இருந்தும் அவர்கள் செயல் வெளியிடமுடியாத வகையில்எங்கள் நிலைஇருக்கிறதே என்பது வருந்தத்தக்கது தான். தமக்கென்ருேர் ஆட்சியில், நடிப்புக்கலை வளர்க்கப்படுமானுல்......

புலித்தேவனுக நடித்த மு. கணேசு, புலிசங்கரான செ. குணராசா, ஹெரனுக வந்த மரியாம்பிள்ளை, அரசியான சந்தானலட்சுமி போன்ருேர், அமெச்சூர் நடிகர்கள்தான் என்ருலும், சிறப்புற நடித்துள்ளனர்.

மாற்ருனின் படையெடுப்பைக் கண்டு வெகுண்ட போதும், மந்திரிகளுடன் ஆலோசனைகளைக் கேட்ட போதும், சொன்னபோதும், முகபாவங்களின் நெளிவு சுளிவுகள் புலித்தேவனுகத் தோன்றிய கணேசிடம் காணப்பட்டன.

புலிசங்கரனுக நடித்த செ. குணராசா, வீரம், காதல், சோகம் ஆகிய இடங்களில் தன் திறமையை சரிவரச் செய்திருக்கிருர். ஹெரனுக நடித்த மரியாம்பிள்ளை அசல் வெள்ளைக்காரனே தான். பேச்சு, நடை, செயல் முறை அத்தனையும் அப்பாத்திரப் படைப்பாகவே அமைந்து விட்டது. அரசியாக நடித்த சந்தான லட்சுமி வீரமாக புலித்தேவனுடன் பேசும் போதும், உபதேசம் செய்யும் வேளையிலும் புலித்தேவனுக்கு அரசியாகவே நடித்திருக்கிருர். புலிசங்கரன் காதலி வடிவாக வந்த செல்வி மகாலட்சுமியின் நடிப்பு அவ்வளவாக எடுபடவில்லை.

'மைக்' ஒத்துழையாமை ஒரு குறைதான். ஹாஸ்ய பாத்திரங்களை ஏற்ற இராசலிங்கம், சண்முகநாதன், செல்வி சரஸ்வதி ஆகியோர்கள் நல்ல இடத்தை எடுத்திருக்கின்றனர். இராசலிங்கத்திற்கு வருங்காலம் நல்ல காலம்.

நாடகத்தின் வெற்றியில் இயக்குனர் புதுமைலோலனின் பங்கு அதிக இடத்தை ஆக்கிரமித்துள்ளது.

—கலைஞன்



புலித்தேவனுகத் தோன்றிய மு. கணேசு

# பாதுகாப்பு நிதிக்கு நாடகம்

தமிழர் முன்னேற்ற கலை மன்றத்தின் நடிகவேள் குழுவினர்கள், இந்திய தேசிய பாதுகாப்பு நிதிக்காக டிசம்பர் மாதம் 23-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் 'தாய் நாட்டின் எல்லையிலே' என்ற சரித்திர வரலாற்று நாடகத்தை நடாத்த இருக்கிருர்கள். இந்த நாடகத்தின் மூலம் வசூலாகும்பணத்தை இலங்கை, இந்திய, வர்த்தக சங்கத்திடம்ஒப்படைப்பார்கள் எனத் தெரிகிறது.

முற்றிலும் நல்ல பல புதிய அம்சங்களையும் உணர்ச்சிகரமான சம்பவங்களையும் தத்துவக் கருத்துக்கள் நிறைந்த வசனங்களையும் கொண்டதாக இருக்குமாம் இந்நாடகம். காலத்தின் கோலத்திற் கேற்றவாறு கதையை அமைத்துள்ளார் கதாசிரியரும், டைரக்டரும் ஸ்டார் நடிகருமான திரு. நடிகவேள் லடீஸ் வீரமணி.

இந்த நாடகத்தின் உணர்ச்சிகரமான வசனங்களை 'கட்டப்பொம்மன்', 'கங்காணி மகள்' புகழ், திரு. பி. எஸ். ராஜன் எழுதியுள்ளார். பிரபல நடிகர்களான டி. ராஜராஜன், ஏ. எஸ். ராஜா, ஏ. கிதார், பி. உதய குமார்,வால்டர்பர்ஞந்தோ, புதுமுகம்சித்திரகலா,சந்திரகலா, ராஜமணி, புதுமுகங்கள் ஸ்டீபன், என். செபஸ்தியான் அழகிரி, லடிஸ் வீரமணி ஆகியோர் நடிப்பர்.

எஸ். சண்முகநாதன் (சானு) மேற்பார்வையில் உருவாகும் இந்த நாடகம், நடிகவேள் லடீஸ் குழுவினரால் இலங்கை முழுவதிலும் நடாத்த ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

நாடக விமர்சனம்:

# மனித வலை

இந்நாடகம் கே. எம். வாச[illegible] குழுவினரால் ஞாயிறு 18-11-62 அன்று, பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் அரங்கேற்றப்பட்டது. நாடகத்தின் கதை இது தான்:

செருக்குப் பிடித்த உடையார். அவர் ஒரே மகள் சீதா—சமூக சீர்திருத்தவாதி சுந்தரத்தைக் காதலிக்கிருள். சுந்தரம் உடையாரின் உதவி பெற்று இந்தியாவில் படித்த இளைஞன். ஆனுல் அவன் உடையாரின் மிடுக்கை எதிர்த்துப் போராடி, ஏழைகளுக்கும், தாழ்ந்த சாதி மக்களுக்கும் உரிமை வாங்கித் தருகிருன்...இதனுல் உடையாரின் செல்வாக்கு பாதிக்கப்படுகிறது. ஆத்திரமடைந்த உடையார் சுந்தரத்தை பழி வாங்கத் துடிக்கிருர். ஆனுல் அவர் விரிந்த வலை தவறியதால் சுந்தரத்தின் செல்வ மகள் சீதாவும், சுந்தரத்தின் தந்தையான கந்தையாவும் தியாக மரணம் அடைகிருர்கள்...உடையார் தவறை உணர்ந்து கொள்கிருர்.

காட்சிக்குக் காட்சி, பொருத்தமாக, சிந்தனையைக் கிளறும் சிறந்த வசனங்கள் அமைந்திருந்ததால், சிரிப்பொலியும் அழுகையும், உணர்ச்சிக் குறிகளும் மண்டபத்தில் மாறி மாறி எழுந்தன.

கொடுக்கப்பட்ட பாகங்களை எல்லோரும் உணர்ந்து நடித்திருந்தார்கள். கந்தையாவாக நடித்த கிதார், தரகர் கே. தில்லைநாதன் பாத்திரத்தோடு, பாத்திரமாகி விட்டார். உடையாரின் நடிப்பில் மிடுக்கில்லை. ஹாஸ்யம் இருந்தது. பண்டாவாக நடித்தவர்...சேட்டைகளைக் குறைத்து வசன உச்சரிப்பில் கவனம் செலுத்தியிருந்தால் நல்லாயிருந்திருக்கும்.

முருகனுக வந்தவர் பயூன் வேலை செய்து அந்தப் பாத்திரத்தையே கொலை செய்து விட்டார் என்றுதான் சொல்ல வேண்டும். கிளாக்கர், சுந்தரம், கணபதி பாத்திரங்கள் சுமாராக விருந்தன. சீதாவாக நடித்த புஷ்ப குமாரியின் நடிப்பு நன்ருக இருந்தது. ஆனுல் குரல் போதாது.

பொதுவில், 'மனிதவலை' ரசிக மக்களின் ஆதரவைப் பெறும் வகையில் அமைந்திருந்தது.

—'மானு'



கொழும்பு ராணி அரங்கத்தார் வவுனியாவில் அரங்கேற்றவிருக்கும் "பார்க்கிறேன் ஒரு கை" என்ற நாடகத்தில் தோன்றும் உதயன் பாட்சா—சூரியகுமாரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு மகள் அன்பரசிக்கு

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

### த. நல்லையா

கைச்சாத்தை மட்டுமிட்ட திரு. த. நல்லையா அவர்கள், வவுனியா ரொச்சிமோட்டையைச் சேர்ந்தவர். வவுனியாச் சிவசிதம்பரத்தை ஆதரித்து இங்கு வந்தாலும், தற்போது கட்சியாளராக விருப்பதே போற்றக்குரியது என்கிருர். நமது கட்சி பற்றிப் பலவற்றைக் கேட்டறிகின்ருர். கடவுள் பக்தர்; அமைதியான போக்குக் கொண்டவர்.

### பொ. பரராசசிங்கம்

"அன்ப! தங்களின் தேசியத் தொண்டை நினைந்து மகிழ்ச்சியடைகின்றேன். வருங்காலத்தில் தேசியத் தொண்டர்களைச் சிருஷ்டிப்பது தங்களின் கைகளிலிருக்கிறது ஆகவே சிந்தித்து செயலாற்றும்படி வேண்டுகின்றேன்" என்று எழுதிக் கைச்சாத்திட்டார் திரு. பொ. பரராசசிங்கம் அவர்கள். வவுனியாவிலுள்ள பத்தினியார் மகிழங் குளத்தில் வாழும் இவர் சிகரெட்டாகவும், சுருட்டாகவும் ஊதித் தள்ளியபடி மகிழ்வாக, ஞானசேகரத்துடன் கேலி பேசியபடி உள்ளார்; நல்லவர்.

### கரிகாலன்

"இன்று கட்டுண்டோம், பொறுத்திருப்போம், நாளை காலம் மாறும்......" என்று எழுதிக் கைச்சாத்துமிட்டார் தி . கரிகாலன் அவர்கள். எனது அறையிலே என் கட்டிலருகே தங்குமிவர் பரீட்சைக்கு ஆயத்தஞ் செய்வதும்; அடிக்கடி ஏதாவது அரசியல் சர்ச்சையில் ஈடுபடுவதுமாகவிருக்கின்ருர். இளம் வயதிலேயே தடுப்புககாவலில் சுதந்திர மற்று இவரும் இருக்கிருர் என்டதை எண்ண எமக்கெல்லாம் வேதனையே! எழுது மாற்றல், உணர்ச்சி உந்தலுடன் பேசும் ஆற்றல்என்பவற்றை இயல்பாகக் கொண்ட இவர், ஈழத்தமிழர் உரிமைகாண எதையும் செய்யும் தன்மை வாய்ந்தவர். கட்சியின் சிறந்த தொண்டருள் ஒருவர். சென்ற தேர்தலில் சண்டமாருதம், மேடையெங்கும் கர்ஜித்த சிங்கம் இவர் என்பதை நாடு அறியும். இளந்தமிழர் இயக்கத்தை உருவாக்கி, வாலிபப் படையை நாட்டுத் தொண்டுக்கு உரித்தாக்கிய திறமைசாலி.

### க. சிவகுரு

"எதையும் தாங்கும் இதயம் வேண்டும்" என்றெழுதிக் கைச்சாத்திட்டார் ஆசிரியர் க. சிவகுரு அவர்கள். திருமலையில் வாழும் இவர் கட்சிக்காகப் பல தியாகங்களைப் புரிந்தவர். அறப்போரின் போது, அறப் போரில் பங்கு கொண்டமைக்காக டெனியாயா என்ற சிங்கள நாட்டுக்கு மாற்றப்பட்டார். பல மாதச் சம்பளத்தை இன்னும் பெறவில்லை. ஏழு குழந்தைகளுக்குத் தந்தையான இவர்,இந்நிலையிலும் மகிழ்வு சூழ, நாட்டுக்காக என்னுலியன்றதைச் செய்கின்றேன் என்ற திருப்தியுடன் உலவுகிருர். தனது நிலைமையைப் பலமுறை என்னுடன் மனந்திறந்து பேசுகின்ருர். இவரது தியாகம் பெரிது என்பதை உணருகின்றேன். படிப்பதும் படுப்பதுமே தமது நேரத்தைப் போக்க வைத்துக்கொண்டுள்ளார்.

### சபா. சுப்பிரமணியம்

"எப் பொருள் யார் யார் வாய்க் கேட்பினும், அப்பொருள் மெய்ப் பொருள் காண்பதறிது" என்று எழுதிக் கைச்சாத்திட்டார் திரு.சுப்பிரமணியம். இவர் வவுனியா பட்டினசபைத் தலைவர். கொள்கைப் பற்றில் ஒப்பாரும் மிக்காரும் அற்றவர்; பேசுமாற்றலும் கடமை புரியும் திறனும் ஒருங்கே வாய்க்கப் பெற்றவர்; இளைஞர். வவுனியா மக்களின் அபிமானமும் பெற்ற இவர், கட்சி வளரப் பெரிதும் பாடுபட்டவர். தாடி வளர்த்தபடி இடைக்கிடை மௌன விரதமும் அனுட்டித்தபடி தன் பொழுதை, எல்லோரும் மெச்ச அமைதியாகப் போக்குகின்ருர். இவர் நல்லவர்; வல்லவர்; என் நல்ல நண்பர்களில் ஒருவர்.

### கே. கயிலாய பிள்ளை

"தேசியத் தொண்டா! உன் பங்கைப் பெற முன் உனது சகோதரனுடைய பங்கைப் பெற்றுக் கொடு..." என்றெழுதி கைச்சாத்திட்டார் திரு. கே. கயிலாயபிள்ளை அவர்கள். துணுக்காயைச் சேர்ந்த இவர் கட்சியின் நல்ல தொண்டர்: உணர்ச்சிமிக்க வாலிபர். என் அறையிலே தங்கிவருமிவர், இரவிரவாகத் தனது இறந்த கால, நிகழ் கால வாழ்வியலைக் கூறி மெய்ப்பாடுகள் கொள்வார். இவருக்கு வாழ்வில் பல பிரச்சினைகள் இங்கிருக்கும் போது வந்தன. மனம் திறந்து கூறுவார். என்ன செய்வார்? மேன்மாடியிலிருந்து அசைய முடியுமா? கட்சியில் பற்றுக் கொண்ட இவர், வழுக் கண்டால் படாரெனக் கோபமடைகின்ருர். ஆனுல் நெஞ்சமோ வெள்ளை.

### சு. செகராசசிங்கம்

"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயல்லாமல் வேறொன்றறியேன்" என்றெழுதிக் கைச்சாத்திட்டார் திரு. சு. செகராசசிங்கம். திருமலையைச் சேர்ந்த இவர், கட்சியின் சிறந்த தொண்டருள் ஒருவர், வஞ்சகமற்று வளர்ந்த உடலமைப்பு உடையவர். மேன்மாடியெங்கும் நடப்பதும், மகிழ்வாகப் பேசுவதும் தன் தாயை எண்ணி நோவதுமாகவுள்ளார்.

### இ. சம்பந்தர்

திருமலை வழக்கறிஞர் ஆகிய இ. சம்பந்தர் அவர்கள் கைச்சாத்தை மட்டுமிட்டார்கள். அறப் போரின் போது ஒய்வற்றுத் திருமலையில் தொண்டாற்றியமைக்காகக் கைது செய்யப்பட்டவர். பண்பும் அமைதிப் போக்கும் கொண்டு திகழ்கின்ருர்.

அன்பு! இன்னும் எமது தடுப்புக் காவல் குடும்ப விபரம் முடிவதாயில்லை. இன்னும் சிலருண்டு. நிச்சயமாக அடுத்த மடலில் முடித்து விடுவேன். இன்னும் எத்தனை எத்தனையோ எழுத வேண்டுமே! ம்...! உனக்குக் கடிதம் எழுதும் பொழுது வெகு வேகமாகவும், மகிழ்வாகவும் கழிகின்றதே! அன்பரசி! உன்னை மடியிலே இருத்தி 'அன்பு' என்றழைத்து, உன் கன்னத்தில் முத்தம் சொரிந்த, உன் செல்ல மழலை மொழிகளைக்கேட்டு மகிழும் நாள் என்று? நாளை! ஓடு... மீதி அடுத்த மடலில்...

உன் தந்தை
புதுமைலோலன்.

(தொடரும்)

# மாளிகைவாசிகள்..

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

மட்டும் அதிகாரத்தை அனுபவித்துவிட்டு நெருக்கடியான சந்தர்ப்பத்திலே பிரதமரும் அவரது மந்திரிகளும் தமது ராஜிநாமாவைச் சமர்ப்பிக்கலாம். அது பிரச்சினைகளைத் தீர்த்து விடாது.

### நாம் வாழ்வது 20ம் நூற்றுண்டு

புராண காலத்திலே நாம் பிறந்திருந்தால் பசித்து அழும் எமது குழந்தைகளுக்குப் பார்வதி சிவபெருமான் சமேதராய் வந்து பால் கொடுக்கக் கூடும்.

மணிமேகலையின் காலத்திலே அட்சயப் பாத்திரம் அனைவருக்கும் உணவு தரும்.

ஏசுநாதர் அவதரித்த காலமாயிருந்தால் ஆப்பத்தை பங்கிட்டது போல அனைவருக்கும் உடைகளைப் பங்கிட முடிந்திருக்கும்.

அலாவுதின் காலமாயிருந்தால் பூதத்தை ஏவி அனைவருக்கும் வசிக்க வீடு கட்டலாம். ஆனுல் நாமிருப்பது இருபதாம் நூற்றுண்டின் மத்திய பகுதியையும் கடந்து விட்ட காலத்தில். நல்லதொரு ஆட்சி பீடம் தான் தான் நமக்குச் சுபீட்சமளிக்க முடியும்.

அரசாங்கத்திற் கெதிராக குடிமக்கள் துரோகம் செய்யக் கூடாதென்பதை ஏற்றுக் கொள்கிற அதே சமயத்தில் அரசாங்கமும் நாட்டு மக்களுக்குத் துரோகம் செய்யக் கூடாதென்பதைத் தெரியப்படுத்த விரும்புகிறோம்.

நாட்டு மக்கள் பிரதமரைத் தாய் போல் எண்ண வேண்டுமென்பதை ஒப்புக் கொள்ளுகிறோம். ஆனுல் — அவர் மக்கள் அனைவரையும் தமது குழந்தைபோலக்கருதி நடக்கிருரா?

எங்காவது ஒரு தாய், குழந்தைகள் [illegible] டைக்கும்வழியில்லாது திண்டாடும் போது தான் மட்டும் பட்டுப்பீதாம்பரம்தரித்துப் பவனிவருவாளா?

பசியால் வாடுகிற குழந்தைகளுக்குப் பராக்குக் காட்ட ஒன்றுக் கொன்று வேற்றுமை சொல்லிச் சண்டை மூட்டி விடுவாளா? அல்லது ஒரு குழந்தை பசியால் துடிதுடிக்கும்போது மற்றக் குழந்தைக்கு அறுசுவையுண்டி தருவாளா? இல்லை— வீட்டுக்கு வரும் விருந்தாளிக்கு ஒரு குழந்தையை அறிமுகப்படுத்தி விட்டு மற்றக் குழந்தை இருக்கும் விபரமே தெரியாத படி செய்வாளா? கூறுங்கள் பார்க்கலாம்?

## உரிமைக்கு...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்க சலுகைகள் பெற்றுத் தருகின்றோம், பௌத்த மதத்தில் சேருங்கள் என்று கூட ஆலோசனை கூறுவோரும், அதே வழியில் தம் வாழ்வை மட்டும் வளம் படுத்துவோருமான முற்போக்குக் குஞ்சுகளின் மாய வலை எங்கும் விரிபடுகிறது. பெரும்பான்மை மக்கள் இவ்வேலையிலும் உதாசீனம் செய்வார்களேயானுல்,வசதியற்றவர்களாக்கப்பட்டவர்கள் அம் மாயவலையில் சிக்கி விடுவார்கள்.

மேடைகளில் சாதி ஒழிப்பு பிரச்சாரம் செய்து கொண்டிருந்தால்மட்டும்போதாது. அமரர் கோப்பாய் கோமகனைப் போல் நேரடிச் செயலில் இறங்க வேண்டும், எமக்கும் உயிர் பெரிது அல்ல. உரிமை தான் உயிர். நாம் காக்கை வன்னியர்களாய் மாற மாட்டோம். எம் உரிமையைப் பெற்று இன விடுதலைப்போரில் மூவர்ணக் கொடியின் கீழ் அணி திரளும் விடுதலைப் படையின் முன்னணியில் நிற்போர் நாம்; உயிர்ப்பலி கொடுப்போரும் நாமே.

# பைத்தியம்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

"இந்த மனுசிக்கு அட்டமி அமுகாசைபருவ நாட்களிலை இப்படியாக வாறதுதானையா...... ஒரு பைத்தியக் குணம்" என்று விளங்கப் படுத்தினுர்கள், சின்னப் பிள்ளையைப் பற்றி.

"ஐயா எனக்குப் பைத்தியமில்லையையா...... இவங்க சும்மா சொல்றுங்க ஐயா..." சின்னப்பிள்ளை மீண்டும் துவங்கினுள். நீதிபதி விடவில்லை. விட்டால் சட்டமும் நீதிமன்றமும் என்னவாகும்?

"ஏய் வாயை மூடு!" நீதிபதி கர்ச்சித்தார், கோபங் கொண்ட சிங்கமாக.

சின்னப்பிள்ளை நடுநடுங்கிக் கொண்டு நின்ருள்,சிறிய மான் பெட்டையாகியபடி.

நீதிபதியின் உத்தரவுப் படி கோர்ட் சேவகன் சின்னப்பிள்ளையைப் பிடித்துத் தள்ளி கோர்ட்டிலிருந்து வெளியேற்றினுன்.

விஷயந் தெரிந்த யாரோ ஒருவர் சின்னப்பிள்ளையிடம் சென்ருர். பற்களை நெருமினுர். கண்களை வெட்டினுர். "உனக்கு விசரேயெணை? உப்பிடித்தானே செய்யிறது...? இஞ்சை கொண்டா உதுகளை!" என்று, சின்னப்பிள்ளையின் கையிலிருந்த தேன் போத்தலையும், தோடம் பழங்களையும் பணங்கொடுக்காமலே வாங்கிக் கொண்டார். எதற்காக வாங்கினுரென்பது சின்னப்பிள்ளைக்குத் தெரியாது.

சேவகன் மீண்டும் சின்னப்பிள்ளையை நீதிமன்றத்திற்குள் நீதிபதி முன்னிலையில் கொண்டுபோய் நிறுத்தினுன். 'ஒன்றும் கதைக்காதேயெணை' என்றும் சொல்லி வைத்தான், முன்கூட்டியே.

சின்னப்பிள்ளை மௌனியானுள்......

நீதிபதி வழக்குக் கொப்பியில் ஏதேதோ எழுதினுர்... சில நிமிஷத்தின் பின்—

"சரி! நீ போகலாம்" என்று கட்டளையிட்டார். சின்னப்பிள்ளை 'றிவேஸ்' நடையில் நீதிமன்றத்திலிருந்து வெளியேறினுள்......

"சரியான பைத்தியம்" என்று பார்த்தவர்கள் சொல்லிக்கொண்டார்கள்...

தேன் போத்தலும் தோடம்பழங்களும்?

(யாவும் கற்பனை)

## கடலே இரையாதே!

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

"கடல் இரைகிறது; காற்று உறுமிக் கொண்டு வீசுகிறது. ஆமாம்! இரவின் அமைதி குலைகிறது. இதனுல் துயில் கொண்டிருப்பவர்கள் விழித்துக் கொள்ளலாம்—அவள் நடந்து செல்லும் வழியிலுள்ள வீட்டாரும், அவள் தம்தாயும் விழித்துக் கொள்வார்கள்! அப்படி விழித்துக் கொண்டால், நிலவொளியிற் தன் காதலி போவதை அறிந்து கொள்வார்கள். அறிந்து கொண்டால், நாளை ஊரெங்கும் அலராகிவிடும். பின்பு, எங்கள் காதலுக்கு-நாங்கள் கள்ளநட்புக்கொள்வதற்குத் தடை பல வந்திடும்"—என்று சிந்தித்துச் சித்தம் கலங்கினுன்.

அவனுல் என்ன செய்ய முடியும்?...... முடிந்ததைச் செய்கிருன்!...... கடலையும், காற்றையும், நிலவையும் வேண்டிக் கொள்கிறது அவனது காதல் நெஞ்சம். என்னே காதல் நெஞ்சின் வேதனை! அந்த நெஞ்சத்தை நீங்களும் படித்துச் சுவையுங்கள், பாடல் இதோ:

"கடலே இரையாதே!
காற்றே நீ வீசாதே!!
நிலவே எறியாதே—எண்ட
நீல வண்டார் போய்ச் சேரு
மட்டும்!"

## மக்கள் குரல்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ருந்து கந்தளாய்க்குச் செல்லும் ரோட்டைச் சிங்கள மன்னர் உபயோகித்ததாகக் கூறப்படுகிறது. நாக தீப வம்ச, மகாவம்ச இரண்டையும் பல தடவைகள் திரும்பத் திரும்ப வாசித்தும், 'சிங்கள மன்னர்' பற்றிய குறிப்பெதுவும் இந் நூல்களில் புலப்படவில்லை. 'ரைம்ஸ்' இக் கூற்றுக்கு எவ்வித ஆதாரமும் தரவுமில்லை.

எங்களுக்கு அதிக உணவு உற்பத்தி கட்டாயம் தேவை தான். ஆனுல், அந்த உற்பத்திக்காக, கேள்விக்குரிய சரித்திர 'சர்க்கஸ்' விளையாட்டுக்களில் ஈடுபட வேண்டிய அவசியமில்லையே!

எஸ். ஜே. குணசேகரம்
கோப்பாய்.

---

### மகிழ்ச்சியடைகிறேம்!

சென்ற புரட்டாதி மாதம் விஜயதசமியன்று யாழ்ப்பாண ரசிக ரஞ்சன சபாவின் பெரு முயற்சியினுல் மீண்டும் சங்கீத பாடசாலை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டதை இட்டு நாங்கள் மகிழ்ச்சியடைகிறேம். இம் முயற்சியை மேற்படி சபா குழுவினரும் பொது மக்களும் ஆதரவு கொடுத்து மென் மேலும் வளர்ச்சியடையும் படி செய்ய வேண்டுமென்று விரும்புகிறேம். 12ம் ஆண்டு இசை விழாவையும் இலங்கை வானெலி மூலமாக கேட்க ஆவல் உள்ளவர்களாக இருக்கின்றேம்.

பாக்கியம் பொன்னம்பலம்.
யாழ்ப்பாணம்.

---

### மாங்கனுய் மாரியம்மன் கோவில் நிர்வாகம்

மாங்கனுய் மாரியம்மன் கோவில் தர்மகர்த்தா சபைக் கூட்டம் திரு. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. அவர் தமது தலைமையுரையின் போது பொது மக்களின் ஒத்துழைப்புடனேயே தேவாலயத் திருப்பணிகள் செய்து முடித்ததாகவும், தொடர்ந்தும் பொது மக்கள் இவ்வாலயப் பணிக்கு ஊக்கமும், ஆக்கமும் அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இலங்கைத் திவ்விய ஜீவன சங்க ஸ்தாபகர் சுவாமி சச்சிதானந்த யோகிராஜ் அவர்கள் பேசுகையில், மனிதன் பெறமுடியாதவைகளைப் பிரார்த்தனையின் மூலம் பெறலாம் என்றும், மாங்கனுய் மாரியம்மன் கோவில் தர்மகர்த்தா சபை இத் தேவாலயத்தை நவீன முறையில் அமைத்துள்ளதையிட்டும் பெரும் மகிழ்ச்சியடைவதாகவும் குறிப்பிட்டார்.

அடுத்து கிராம சபைத் தலைவர் திரு. வா. நா. தம்பிராசா பேசினுர்.

புதிய நிர்வாக சபைத் தெரிவு சுவாமி சச்சிதானந்த யோகிராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மீண்டும் தலைவராக திரு. செ. சுப்பிரமணியமும், காரியதரிசியாக திரு. வ. நா. தம்பிராசாவும் தெரிவு செய்யப்பட்டனர். சுவாமி சச்சிதானந்த யோகிராஜ் அவர்கள் போஷகராகத் தெரிவு செய்யப்பட்டார். நிர்வாக சபை அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# எங்கள் கோரிக்கைகள்

(எஸ். அப்துல் கபூர், கொழும்பு)

அணிவகுத்து நாங்கள் செல்லும் அழகே அருமைதான். எங்கள் இந்த அணிவகுப்பைக் கண்டு தாய் நாட்டைக் காக்கச் செல்லும் போரர் வீரர்களைப் போல் இருக்கிறதல்லவா? உங்களுக்கு எங்களைப் போல் சுறுசுறுப்பு இருந்தால் இந்நாடு என்றே முன்னேறி இருக்குமே. எங்களைப் போல் நீங்கள் எல்லாரும் ஒற்றுமையாகச்செயற்பட்டால் இந்த உலகத்தில் சண்டை சச்சரவு வருமா? ஏதோ சாதி, மதம் என்று பேசுகிறீர்களே, உங்கள் இரு சாதியினர் உடலில் ஓடும் உதிரத்தை எடுத்துப் பாருங்கள்! வேற்றுமை தெரிகிறதா?

மழை காலம் வருவதற்குள் நாங்கள் எங்களுக்கு வேண்டிய உணவுகளைச் சேகரித்து வைத்துக் கொள்கிறோம். ஆனால் முன்பு போல் எங்களுக்குவேண்டிய உணவுகள் இப்போதெல்லாம் கிடைப்பது மிகக் கஷ்டமாக இருக்கிறது. அப்படிப் பல கஷ்டத்துக்கிடையே உணவு கிடைத்த போதிலும், உணவை நாங்கள் எடுத்துச் செல்லும் பொழுது, சில சிறுவர்கள் எங்களுக்குத் தொல்லை கொடுப்பதையே தங்கள் பொழுது போக்காகக்கொள்கிறார்கள். இப்படிப்பட்ட சிறுவர்களைக் கண்டு பிடித்து, கடுமையான தண்டனை கொடுக்க வேண்டும். சிலர் பெரும் காலணிகளைப்போட்டுக்கொண்டு வானத்தில் பறக்கிறதுபோல் விரைவாக நடக்கிறார்கள். இதனால் எங்கள் இனம் இவர்கள் காலடிக்குள் சிக்கிச்சாக வேண்டி இருக்கிறது.

இப்படி அலங்காரமாகக் காலணிகளைப் போட்டுக் கொண்டு அலட்சியமாக நடந்து எங்கள் இனத்தை கொல்கிறவர்களுக்கு ஒரு புதிய சட்டத்தை ஏற்படுத்த வேண்டும். இப்படி நீங்கள் தலை கால் தெரியாமல் நடந்து போவதைவிட்டு, நின்று நிதானித்து நடப்பது மிக அவசியம். அந்தப் புத்தரே கூர்ந்து பூமியை பார்த்துக் கொண்டே நடப்பாராம். ஏன் தெரியுமா? அவர் காலடிக்குள் எங்கள் இனத்தவர்கள் அகப்பட்டு செத்து விடக்கூடாதே என்ற இரக்க எண்ணம்தான். அவர் எங்கள் மேல் கொண்ட இரக்கத்தில் நீங்கள் இம்மியளவும் காட்டமாட்டேன் என்கிறீர்களே! அப்படி நாங்கள் உங்களுக்கு செய்த துரோகம் தான் என்ன?

நாங்கள் வசிக்கும் இடங்களில் மண்ணெண்ணையை ஊற்றித் தீ வைத்து விடுகிறார்கள். இதனால் எங்கள் இனம் அடியோடு அழிந்து விடும் என்று எண்ணுகிறார்கள் போலும்! இவ்வுலகம் இருக்கும் மட்டும் எங்கள் இனம் அழியாத ஒரு இனமாக இருப்பது நிச்சயம்.

## உங்கள் சிந்தனைக்கு

விடைகள்

1. ஜோன் லோகி பெய்ர்டு
2. சேர் ஸி. வி. ராமன்
3. தோமஸ் எடிஸன்
4. ஜேம்ஸ் சிம்ப்ஸன்
5. ஜோன் பெக்குரல்

தொகுத்தவர்:
ஸெஸ். பூரணி,
சாவகச்சேரி.

# விடைகொடு அம்மா விடைகொடு

—அருள் வேலழகன், கல்வயல்—

விடைகொடு அம்மா விடைகொடு – மறவர்
படையினில் சேர விடைகொடு!

விடுதலைக் காவியம் பாடிட வேண்டும்—எங்கும்
வண்டமிழ் புகழினை நாட்டிட வேண்டும்!
விடுபகை என்றுநான் புறப்பட வேண்டும்—எங்கள்
வெற்றிக்கொடியினை நாட்டிட வேண்டும்!
(விடை கொடு)

அடுகளம் நோக்கிநான் புறப்படப் போறேன்—அவர்
கொடுந்துயர் ஒழித்திட தேடிநான் போறேன்!
படுந்துயர் பலவும் தூசியாய் மதிப்பேன்—எங்கள்
பைந்தமிழ் புகழினை ஓங்கிடச் செய்வேன்!
(விடை கொடு)

எத்தனைகாலம் பொறுப்பது தாயே—இனியும்
எத்தர்கள் காலைப் பிடிப்பதும் முறையோ?
சித்திரப்பாவை தமிழ்த் திருத்தாயை—அவர்
சிதைப்பதைக் கண்டுநாம் பொறுப்பது முறையோ?
(விடை கொடு)

மானத்தைக் காத்திட போரினைத் தொடுப்போம்—தமிழ்
மொழியினை உயர்த்திட நேர்வழி நடப்போம்!
ஈனத்தை போக்கிட ஊரது திரள்வோம்—கவரி
மானினம் போன்ற குலத்தினில் பிறந்தோம்!
(விடை கொடு)

முறத்தினால் சாடியே வேங்கையை விரட்டிய—வீர
மறத்தமிழ் குலத்தினுய் விடைகொடு தாயே!
அறவழி நின்றுநான் உயிரினை விடுவேன்—அவர்
சிறையது நிரம்பினும் சிரமது வணங்கேன்!
(விடை கொடு)

# உங்களுக்குத்.... ....தெரியுமா?




வானவெளி செல்லும் ரொக்கெட்டுகள் பற்றி 1232ம் ஆண்டு முதலே மனிதனுக்குத் தெரிந்திருந்தது. ஆனால், 1909ம் வருடத்தில் தான் முதன்முதலாக அவை விஞ்ஞான அடிப்படையில் பரீசோதிக்கப்பட்டன. இதைச் செய்தவர் அமெரிக்க பௌதிகவியலாளர் திரு. ரொபேர்ட் கொடார்ட் ஆவர்.

மலை மீதுள்ள பல லட்சக் கணக்கான பனிக் கட்டிகள், ஒரு பெரிய சப்தத்தினுலோ அல்லது இடியினுலோ, நிலை குலைந்து சரிந்து விடக்கூடும். ஆகவே தான் ஆபத்தான இடங்களுக்கருகில் மலையேறிகள் வந்ததும், [illegible] ஸர்வாந்து வழி காட்டிகள் ஒரு சொல் கூடப் பேச விட மாட்டார்கள்.

மேலே காணப்படும் ஒரு வித முள் மரங்கள் உலகத்திலேயே மிகப் பழைய உயிர் வாழும் இனமென விஞ்ஞான ரீதியில் நிரூபிக்[illegible] ஒரு மரம் [illegible] ளுக்கு மேல் வாழ்ந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மர்மத் தொடர் கதை




"ஐயையோ! இந்தப் பயங்கரக் கரடியின் அட்டகாசம் சகிக்கவே முடியவில்லை... தினசரி எனது ஆடுகளில் ஒவ்வொன்றையல்லவா அபேஸ் பண்ணி விடுகிறது...!"

"அதைத் தொலைத்துக் கட்ட யாராலும் முடியாது போலிருக்கிறதே. புலிகளையே இலகுவில் சுட்டு விழுத்தும் துப்பாக்கி வீரர்களால் கூட, இந்தக் கரடியைச் சுட முடியவில்லையே... மனிதர்களைக் கண்டால் திடீரென்று எப்படியோ மறைந்து விடுகிறதாமே...!"

"காடே அதிரும்படியாகவல்லவா பயங்கரமாகக் கத்துகிறது. அதன் இருப்பிடத்தை ஒருவராலும் கண்டுபிடிக்க முடியவில்லையே..."

"மணியின் அப்பா மட்டும் உயிருடனிருந்தால்...அந்தக் கரடியின் ஆவி என்றோ பறந்திருக்கும்!"

பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்த மணியின் காதுகளில் தெருவோரத்தில் சிலர் நடாத்திய சம்பாஷனை இலேசாக விழுந்தது. தனது தந்தையைப் பற்றி அவர்கள் பேசிக்கொண்டது மணிக்கு மிச உற்சாகத்தை அளித்தது. மணியின் தந்தை ஒரு சிறந்த துப்பாக்கி வீரர். குறி தவறுது சுடுவதில் அவருக்கு இணை அவரே தான். மணிக்குப் பதின்மூன்று வயதாயிருக்கும் போதே அவர் இறந்து விட்டார். இப்போது மணிக்கு வயது பதினைந்து.

பயங்கரக் கரடியின் நினைவுடனேயே மணி பாடசாலையை அடைந்தான். அங்கு கூட மாணவர்கள் அக் கரடியைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தனர். மணியைக் கண்டதும் எல்லோரும் ஓடி வந்து சூழ்ந்து கொண்டனர்.

"மணி சாதாரணமானவனு? பெரிய வேட்டை. வீரரின் மகனல்லவா? மணி நினைத்தால் நிச்சயமாக அந்தக் கரடியைத் தொலைத்துக் கட்டி விடுவான்" என்றான் ஒரு பையன்.

"டேய்! பெரிய, பெரிய மனிதர்களாலேயே முடியாத காரியத்தை, நம்மைப் போன்ற பொடிப் பயல்கள் எப்படியடா செய்ய முடியும்?" என்று வாதிட்டான் வேறொரு பையன்.

"உருவத்திற்கும் செயலுக்கும் தொடர்பில்லடா. கடுகு சிறிதென்றாலும்காரம் குறைவா என்ன? மணியால் நிச்சயம் முடியும். அவங்க வீட்டில் சுழல் துப்பாக்கி கூட இருக்கு... இரண்டு நாட்களுக்குளளேயே பயங்கரக் கரடியைத் தொலைத்து விடுவான் மணி" என்று மணியை உயர்த்திப் பேசினான் இன்னொரு பையன்.

பாடசாலை தொடங்குவதற்கான மணி அடித்தது. ல்லோரும் தங்கள் வகுப்பை நோக்கி ஓடினார்கள். பாடம் தொடங்கியது. மணியின் மூளையில் ஒன்றுமே நுழையவில்லை. பயங்கரக் கரடியின் நினைவே சுற்றிச் சுற்றி வட்டமிட்டது. தன்னைப் பற்றி மற்றவர்கள் கொண்டுள்ள உயர்ந்த அபிப்பிராயத்தைக் காப்பதற்கும், இறந்த தந்தைக்குப் புகழ் கூட்டுவதற்கும் ஒரே வழி கரடியைத் தொலைப்பதே என்று சதா எண்ணியபடியே இருந்தான். ஒருவாறு பாடசாலை முடிவுற்றது. ஓட்டமும் நடையுமாக வீட்டை அடைந்தான். அவசர அவசரமாகச் சாப்பாட்டை முடித்துக் கொண்டான். தாயாருக்குத்தெரியாமல் பெட்டியிலிருந்த சுழல் துப்பாக்கியைஎடுத்து இடையில் மறைத்துக்கொண்டு பயங்கரக் கரடி வாழும் காட்டை நோக்கி வெறி பிடித்தவன் போல் ஓடினான்.

தனது மாமாவுடன் பல தடவைகள் வேட்டைக்குச் சென்றிருக்கிறான் மணி. ஆனால் தன்னந்தனியனுகக் காட்டிற்கு வந்தது இன்று தான் முதல் தடவை. நடுக் காட்டை அடைந்து விட்டான். "காட்டிற்குத் தனிமையில் வேட்டைக்குச் செல்வது மகா அபாயகரமானது" என்று எப்போது அவனுடைய தந்தை கூறியது ஞாபகத்திற்கு வந்தது. அவ்வார்த்தைகள் நினைவிற்கு வந்ததும் ஒருவித இனம் தெரியாத பயம் அவனைப் பற்றிக் கொண்டது. திரும்ப வீட்டிற்கு ஓடி விடலாமா? என்று கூட எண்ணினான். 'பயந்தால் பராக்கிரமான செயலை எப்படிச் செய்வது?' என்று தனக்கே சொல்லிக் கொண்டு மெள்ள முன்னேறினான். அப்போது...!

அந்தக் காடே அதிரும்படியான பயங்கர ஒலியொன்று திடுதிப்பென்று கேட்டது. திடீரென்று நிமிர்ந்து பார்த்தான் மணி.!அங்கே......!

(தொடரும்)

## அன்புள்ள மருமக்களே!

வணக்கம். இவ்வாரம் மாஸ்டர் சிவலிங்கத்தின் குட்டி மர்மத் தொடர் கதையான 'பயங்கரக் கரடி' ஆரம்பமாகின்றது. படித்துச் சுவையுங்கள்.

11—11—62 இதழில் 'உங்கள் சிந்தனைக்கு' என்ற தலைப்பில் ஐந்து கேள்விகள் கேட்கப்பட்டிருந்தன. அவற்றுக்குரிய விடைகள் இவ்வாரம் வெளிவந்துள்ளன.

அடுத்த வாரம் 'அப்பாவும் மகனும்' என்ற சுவாரஸ்யமான நகைச்சுவைப் பகுதியும் ஆரம்பமாகின்றது.

வணக்கம்.

உங்கள் அன்பின்,

வளர்மதி

# கழகச் செய்திகள்

## மக்கள் வாழவும் மகிழவும் ஆத்மீக உணர்வு அவசியம்!

### வட்டுக்கோட்டை எம். பி. பேச்சு

வாழ்வில் இன்பத்தைக் காண, நிம்மதியைப் பெற ஆன்மீக உணர்வு அவசியம். சமயச்சார்புடைய வாழ்வில் தான் ஆன்மீக உணர்வைப் பெறக் கூடிய வாய்ப்புக்கிட்டும். ஆன்மீக உணர்வு நம்மை வாழவும் மகிழவும் செய்யும். இவ்வாறு தொல்புரம் மத்திய சனசமூக நிலையத்தினுதரவில் 7-10-62ல் நடைபெற்ற 'சரஸ்வதி பூசை', நவராத்திரி விழா' வைபவத்தில் பிரதம பேச்சாளராகப் பங்குபற்றிய திரு. அ. அமிர்தலிங்கம், வட்டுக்கோட்டைப் பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் உரை நிகழ்த்தும் போது கூறினுர்.

அவர் மேலும் பேசியதாவது:-

"நாவுக்கரசரும், மாணிக்கவாசகரும் தமிழ்நாட்டுக்குக் கிடைத்த தனிப் பெரும் மேதைகள். அவர்களுடைய அருள் நெறி வாழ்க்கைத் தத்துவம் மனித இனத்தின் வாழ்வுக்கு வழிகாட்டுவதோடு சாந்தியையும் சமரச உணர்வையும் கொடுக்கின்றன.

உள்ளத்தைத்திறந்து பன்னிரு திருமுறைகளையும் ஆழ்ந்து அனுபவித்துப் பாராயணம் பண்ணிஞல் ஆன்மீக உணர்வு ஆல்போல் வளர்ந்து அறுகுபோல் படர வாய்ப்புண்டு".

இவ்விழாவிற்கு உள்ளூராட்சி உதவி அதிபர் திரு. சி. சி. மாணிக்கவாசகர் தலைமை வகித்தார்.

திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் சரஸ்வதி தோத்திரப்பாடலைச் சொல்லிக்கொடுத்துப் பூசையை ஆரம்பித்து வைத்தார். பின் நிலைய மாணவர்களாலும், தொல்புரம் மத்திய மகளிர் சனசமூகநிலையத்தினராலும் கூட்டுப்பிரார்த்தனை நடத்தப்பட்டது. நிலையத்தினரால் சரஸ்வதி தோத்திரப் புத்தகம் மாணவ மாணவிகளுக்கு அன்பளிக்கப்பட்டது.

பண்டிதர் திரு. த. சுப்பிரமணியம் 'கலைமகள் விழாவின் சிறப்புக்கள்' பற்றியும், திரு. கா. சின்னத்துரை ஆசிரியர் 'நவராத்திரியின் மகிமை' பற்றியும் சொற்பொழிவாற்றினர்,

நிலையக் காரியதரிசி திரு. சி. வரதராசா, தலைவர் திரு. சி. சிவப்பிரகாசம், போஷகர் திரு. அ. தையல்பாகர் ஜே. பி., திரு. கோ. கிருஷ்ணர் ஆசிரியர் ஆகியோரும் இவ்விழாவில் பேசினர்.

பின் தொல்புரம் அ. மி. பாடசாலை மாணவர்களால் பக்திப் பாடல்கள்பாடப்பட்டன. முடிவில் அனைவருக்கும் நிலையச் செயலாளர் நன்றி கூறினுர். பூசையில் பங்குபற்றியோர் சகலருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.

### பாரதி இல்லம் வெற்றி பெற்றது

தொல்புரம் மத்திய சனசமூக நிலையப் பாரதி இல்லத்துக்கும், வள்ளுவர் இல்லத்துக்கும் இடையே தீபாவளித் தினத்தன்று தாச்சி விளையாட்டுப் போட்டி தொல்புரம் ஆதிமுத்துமாரி அம்மன் ஆலய வீதியில் நடைபெற்றது. சுவாரஸ்யமான இப் போட்டியினைத் திரளான மக்கள் கண்டு களித்தனர். போட்டியில் வெல்லும் இல்லத்துக்கு வாழைப்பழக்குலை கொடுப்பதெனத் தீர்மானித்து, வாழைப்பழக் குலையைக் கட்டித் தூங்க விட்டுவிட்டு விளையாட்டு ஆரம்பமானது.

விறுவிறுப்புடன் இரு இல்லமும் விளையாடின. முடிவில் பாரதி இல்லம் 15 வெற்றிப் பழங்களும், வள்ளுவர் இல்லம் 6 வெற்றிப்பழங்களும் பெற்றன. பாரதி இல்லத்தினர் வெற்றிபெற்றுவாழைப் பழக் குலையைக் கைப்பற்றினர். 15 வயது இளைஞர்களுடன் போட்டியிட்ட 12 வயதுச் சிறுவன் பார்வையாளர்களின் பாராட்டுதல்களைப் பெற்றுர்.

நிலையச் செயலாளர் திரு. எஸ். வரதராசா மத்தியஸ்தம் வகித்தார்.

### இலக்கியப் பேரவை கவிதைப் போட்டி

எதிர்வரும் பொங்கல் தினத்தை முன்னிட்டு துறை நீலாவணை இலக்கியப் பேரவை ஒருகவிதைப்போட்டியை நடத்துவதெனத் தீர்மானித்துள்ளது. இப்போட்டியில் பரிசு பெறும் கவிதை உட்படப் பதினைந்து கவிதைகளைத் தெரிந்து ஒரு தொகுப்பு நூல் வெளியிடவும் முடிவு செய்துள்ளது. இதில் பங்கு கொள்ள விரும்புவோர், பத்து சத முத்திரையுடன் 'செயலாளர் இலக்கியப் பேரவை, துறை நீலாவணை, கல்முனை' என்ற முகவரிக்கு விண்ணப்பித்துச் சகல விபரங்களும் பெற்றுக் கொள்ளலாம் என்று பேரவைச் செயலாளர் அறிக்கை விடுத்துள்ளார்.

### பாராட்டு விழா

மருதமுனையைச் சேர்ந்த ஜனுப் ஐ. எஸ். எம். பழீல் மவ்லானு அவர்கள் 1-11-62 முதல் புத்தளப் பகுதிக்கு வித்தியாதரிசியாக பதவி உயர்வு பெற்றுள்ளார். இவர் சமூக மதசேவைகளில் அதிகம் ஈடுபாடுடையவர். பல வாலிப இயக்கங்களிலும் சமூக சேவை இயக்கங்களிலும் பிரதான பதவி வகிக்கிறுர். இவரைக் கௌரவிக்கும் முகமாக அண்மையில் மருதமுனை பொதுமக்களால் ஒரு பாராட்டு விழா நடத்தப்பட்டது. அவ்விழாவிற்கு கல்முனைத் தொகுதி பா. உ. ஜனுப் அஹமது தலைமை தாங்கினுர். க.வ.கி.ச. தலைவர் அஹமது மவ்லானு, பழீல் மவ்லானுவிற்குப் பொன்னுடை போர்த்தி அன்னுரை கௌரவித்தனர்.

### வழக்கம்பரையில் சமய தீட்சை

எதிர் வரும் 3-12-62 திங்கட்கிழமை அகில பொதுசன சேவா சங்கத்தினரால் வழக்கம்பரை மகாமாரியம்மன் ஆலயத்தில் தீட்சை வைப்பதற்கு வேண்டிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இவ்விஷயத்தில் வழக்கம்பரை சனசமூக நிலையத்தினர் கூடியகவனம் எடுத்து, தொல்புரம், சுழிபுரம், பண்ணுகம், மூளாய, சங்கானை ஆகிய கிராமத்தைச் சேர்ந்தவர்களைக் கலந்து கொள்ளுமாறு பிரசாரம் செய்து வருகின்றனர்.

தீட்சை வைக்க விரும்பும் சைவ நன்மக்கள் தங்கள் விருப்பத்தை வழக்கம்பரை சனசமூக நிலைய காரியதரிசியிடம் தெரிவிக்கவும். இவ்வரிய தருணத்தை தீட்சை வைக்காத சைவ மக்கள் பயன் படுத்துவார்கள் என வழக்கம்பரை சனசமூக நிலையத்தினர் எதிர்பார்க்கின்றனர்.

### ரசிகர் சங்கப் பாராட்டு

அண்மையில் பெரியகடை சினிமா ரசிகர் சங்கப் பொதுக் கூட்டத்தில் கீழ்க் கண்டோருக்குப் பாராட்டுப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

1961ம் வருடத்தின் மன்னுரின் சிறந்த தியேட்டர் எனப் பாராட்டி குமரன் தியேட்டருக்கும்; 1961ம் வருடத்தின் படமான பாவமன்னிப்பை வெளியிட்ட அயின் தியேட்டருக்கும்; 1961ம் இலங்கையின்சிறந்த தமிழ்ப் படங்களை வெளியிடும் தியேட்டரான எல்பின்ஸ்டனுக்கும், 1961ம் இலங்கையின் சிறந்த வெளியீட்டு ஸ்தாபனமான 'சிலோன் தியேட்டர்ஸ் ஸ்தாபனத்தாருக்கும், 1961ம் ஆண்டு சிறந்த ஹாஸ்யப்படமான "சபாஷ் மீனுவை" வெளியிட்ட சென்றல் தியேட்டருக்கும் மேற்படி பாராட்டுப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

### இசை அரங்கேற்றம்

"இலங்கையில் கர்நாடக இசையைப் பேணி வளர்த்து வரும் பெருமை மாவிட்டபுரத்தில் உள்ள இசையாளர்களையே சாரும். பண்டு தொட்டே அவர்கள் இலங்கையில் கர்நாடக சங்கீதத்திற்காக அரும்பாடுபட்டு வந்திருக்கிறுர்கள்". இவ்வாறு சங்கீத வித்துவான் திரு. எஸ். பரம்தில்லைராஜா காங்கேசன் துறை நடேஸ்வரக் கல்லூரி மண்டபத்தில் இசைமணி எம். ஆனந்தசிவத்தின் இசையரங்கேற்றத்திற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசுகையில்," திரு.என்.எஸ். உருத்திராபதி சிறந்த நாதசுர வித்துவானும் இசை ஆசிரியருமாவார். அவருக்குப் பொன்னுடை போர்த்தும் தகுதி எனக்கு இல்லையானும், எனது தந்தையின் பணி என நினைத்து அன்னுருக்குப் பொன்னுடை போர்த்துகிறேன்" என்று குறிப்பிட்டு திரு. உருத்திராபதிக்குப் பொன்னுடை போர்த்திக் கௌரவித்தார்.

வழக்கறிஞர் திரு. ஆ. வ. சதாசிவம் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், "கலைஞர்களிடையே உண்டாகும் கர்வ உணர்ச்சி கலையின் அழிவுக்கு அடிகோலுவதாக அமையும்" என்று குறிப்பிட்டார்.

நாதசுரவித்துவான் திரு. என். கே. பத்மநாதன் பேசுகையில், கலைஞர்களை அவர்களுக்குக் கிடைக்கும் பட்டங்களைக்கொண்டு கணித்து விட முடியாதெனவும் அவர் [illegible] கொண்டுதான் கணிக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை, திரு. எஸ். ஆர். ஞானசுந்தரம், தவில் வித்துவான் ஆர். எஸ். சின்னராசா, இசை ஆசிரியர் திரு. பி. முத்துக்குமார் ஆகியோர்கள் பேசினுர்கள். இசைமணி ஆனந்தசிவத்திற்கு மயிலிட்டி மக்கள் சார்பில் பொன்னுடை போர்த்தப்பட்டது. தமக்களிக்கப்பட்ட கௌரவத்திற்குஇசைமணி நன்றி தெரிவித்தார்.

### ஆக்கிரமிப்பை எதிர்க்க வேண்டும்

சுதந்திர ஜனநாயக நாடான இந்தியாமீது கொம்யூனிஸ்ட் சீனு நடத்தும் அநீதியான ஆக்கிரமிப்பைக்கண்டித்து, இந்தியா தனது சுதந்திரத்தைக்காத்துக்கொள்ள ஆதரவுகாட்டி, பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா உடனடியாக அறிக்கை வெளியிடவேண்டும் என்று ஓர் தீர்மானம் மட்டக்களப்பு இராசதுரைபுரம் பொது நல ஊழிய சேவா சங்கத்தில் நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானம் தந்தி மூலம் 5-11-62ல் பிரதமருக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

குடியேற்றப் பகுதிக்குள்ளிருக்கும் மாடு ஆடு வெட்டும் நிலையத்தை அப்புறப்படுத்தி வேறு இடத்தில் அமைக்க வேண்டுமென்ற எங்கள் கோரிக்கைகளுக்கு நகரபிதா, வேறு வசதியான இடம் கிடைக்காததால் சில காலம் வரை தொடர்ந்து அதே இடத்திலேயே ஆடு மாடு வெட்டுவதாகவும், விரைவில் இடம் மாற்றப்படும் என்றும் கோரியுள்ளதால்நேரடிநடவடிக்கை தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

### துணுக்காயில் தமிழரசுக் கிளை அமைப்பு

துணுக்காய்ப் பகுதித் தமிழரசுக் கிளை ஆரம்பக் கூட்டம் துணுக்காய் கிராமச்சங்கத் தலைவர் க. கணபதிப்பிள்ளை அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது. தலைவர் கட்சி இயக்கம்பற்றி சொற்பெருக் காற்றினுர். அதன்பின்பு இக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

சித்திரைத்திங்களில் நடைபெறவிருக்கும் தமிழுரிமைப் போராட்டத்திற்குத் தொண்டர்களாக ஆண், பெண் இரு சாராரையும் சேர்ப்பது என்றும்; கட்சிக்கு வேண்டிய நிதிகளைச் சேர்ப்பதுடன் இக்கட்சிக்கிளைக்காரியாலயத்தை இதற்குத் தகுந்த இடத்தில் நிறுவி அந்நிலையத்தைத் தமிழரசுத் தந்தை உட்பட வடகிழக்குப் பாராளுமன்ற உறுப்பினர்களையும், தமிழரசுக்கட்சிச்செனட்டர்கள் இருவரையும் அழைத்துக் கட சிக்கட்டிடத்தைத் திறப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

விவசாயத்திற்காக இப்பகுதியைத் தாயகமாகக் கொண்டு குடியேறிய மக்களுக்குப் பிரயாண வசதி, மருத்துவ வசதி, தபால் வசதி ஆகியவைகள் ஒழுங்காக இல்லாமையினுல், இவைகளிற்காக அதற்குரிய இலாகாக்களிற்கு முறையீடு செய்து ஆகவேண்டிய ஒழுங்குகளைச் செய்தல்.

இப்பகுதியில் காணி இல்லாத அநேக ஏழை மக்கள் இன்னும் இருப்பதால் அவர்களுக்குக் காணி பெற்றுக் கொடுப்பதற்குக் காணி இலாகாவுடன் தொடர்பு கொள்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இப்பகுதித் தமிழரசுக் கிளைக் காரியாலயத்திலுள்ள சகல எழுத்து வேலைகளையும் ஊதியம் பெருது செய்வதற்கு திரு. குகராசபிள்ளை சிவஞான சண்முகம் நியமிக்கப்பட்டார். பின்வரும் உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்:

தலைவர்: திரு. க. கணபதிப்பிள்ளை (து. கி. ச. தலைவர்), உபதலைவர்கள்: திரு. கு. சிவஞானசண்முகம், திரு.இ.சண்முகம், செயலாளர்: திரு வே. கயிலாயபிள்ளை, உதவிச் செயலாளர்: திரு சோ. தில்லைநாதன், பொருளாளர்: திரு. மா. சண்முகநாதன்.

### சங்கானை இ. மு. வா. சங்கம்

சங்கானை இந்து முற்போக்கு வாலிபர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் கடந்த 12- 11- 62 திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் திரு. கா. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற பொழுது நடப்பு வருடத்தின் உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். திரு. கா. சுந்தரலிங்கம் அவர்கள் மீண்டும் புது வருடத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். உப தலைவராக திரு. க. பொன்னம்பலமும், காரியதரிசியாக திரு. பொ. ஜெயபாலனும், தனுதிகாரியாக திரு. த. பாலசுப்பிரமணியமும் தெரிவு செய்யப்பட்டனர்'


## இந்த எழுத்துக்கள்

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 12 பொயிண்ட் ரோமன், 12 பொயிண்ட் போல்ட், 10 பொயிண்ட் ரோமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் சுதந்திரன் ரைப் பவுண்டரியில் உற்பத்தி செய்யப்பட்டவை.

8, 10, 12, 14, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களையும், அலங்கார எழுத்துக்களையும் வார்க்க முடியும்.

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்படும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. வேண்டியவர்கள் விவரத்துக்கும், விலைப்பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக் கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக் கொள்ளலாம்.

**சுதந்திரன் ரைப் பவுண்டரி,**

194 ஏ. பண்டாரநாயக்க மாவத்த,
கொழும்பு—12.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## விரைவில் எதிர்பாருங்கள்!

எல்பின்ஸ்டன் (மருதானை) — றெக்ஸி (வெள்ளவத்தை) — வின்ஸர் (யாழ்ப்பாணம்)

வேல்ஸ் (கண்டி) — கிங்ஸ் (பதுளை) — நெல்சன் (திருகோணமலை)

இம்பீரியல் (மட்டக்களப்பு) — இம்பீரியல் (இரத்தினபுரி) — அசோகமாலா (நீர்கொழும்பு)



எஸ். எஸ். ராஜேந்திரன் — விஜயகுமாரி

அசோகன்—எம். ஆர். ராதா—எஸ். வி. ரங்கராவ்

வி. நாகையா—எம். வி. ராஜம்மா—லக்ஷ்மிராஜம்

புஷ்பலதா—எஸ். வி. சகஸ்ரநாமம்

மற்றும் பலர் தோன்றும்

# சா ர தா

கதை வசனம்: கே. எஸ். கோபால கிருஷ்ணன்

சங்கீதம்: கே. வி. மகாதேவன்

பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்

## இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

செ ன் ட் ர ல்

காதல் காவியம்! செவிக்கினிய பாடல்கள்!
கண்ணுக்கு விருந்தளிக்கும் நடனங்கள்!

தேவ் ஆனந்த் ★ வாஹிதா ரஹ்மான் நடிக்கும்



இசை: சங்கர் — ஜெய்கிஷன்

எச். எஸ். ராவெயில்லின்

# ரூப் கி ராணி-சோரொன் கா ராஜா

செ ன் ட் ர ல்

## 2-வது மக்கள் விரும்பும் மாதம்!




கிங்ஸ்லி [கொழும்பு] - பிளாஸா [வெள்ளவத்தை]

வெலிங்டன் [யாழ்ப்பாணம்] - விஜயா [அம்பாறை]

மற்றும் 10 திரைகளில்

சிவாஜி கணேசன் ● ஜெமினி கணேசன்

பி. சரோஜாதேவி ● சாவித்திரி

கே. ஏ. தங்கவேலு

எம். சரோஜா

சௌகார் ஜானகி

வி. கே. சரஸ்வதி

மற்றும் பலர் நடித்தது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் [illegible] கொழும்பு, பண்டாரநாயக்க மாவத்த, 194ஏ, இலக்கத்தில் 1962-ம் வருடம் நவம்பர் மாதம் 25-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.